# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

சுடர் 33 கதிர் 190 வைகாசி 21ஆம் நாள் திங்கட்கிழமை 04 ஜூன் 2018 வள்ளுவர் ஆண்டு 2049

பக்கங்கள்: 20


## வலி.வடக்கில் 33 ஏக்கர் காணி விரைவில் மீளும்

யாழ்ப்பாணம். ஜூன் 4
வலி.வடக்கில் பாதுகாப்புத் தரப்பினர் வசமிருந்து மேலும் 33 ஏக்கர்காணிமற்றும்நல்லநிலையிலுள்ளமக்களின்வீடு >> 06

2020 அரச தலைவர் தேர்தலுக்கான

# புதிய பொது வேட்பாளரை தேடும் படலம் தொடக்கம்

சோபித தேரரின் வழியில் குணவன்ச தேரர்

கொழும்பு, ஜூன் 4
2020இல் நடைபெறுமென எதிர்பார்க்கப்படும் அரச தலைவர் தேர்தலை இலக்கு வைத்துப் புதியதொரு கூட்டணியை அமைக்கும் முயற்சியில் எல்லே குணவன்ச தேரர் களமிறங்கியுள்ளார்.

இந்தக் கூட்டணிக்கு இதுவரையில் ஐந்து கட்சிகள் ஆதரவு தெரிவித்துள்ளன என்றும், ஏனைய கட்சிகளுடன் >> 06

## சட்டவிரோதமாகத் தாயகம் திரும்பிய ஈழ ஏதிலிகள் 5பேர் நேற்றும் கைது

ஒரு மாதத்தினுள் 4 தடவைகளில் 24 பேர் கைதாகியுள்ளனர்

யாழ்ப்பாணம். ஜூன் 4
இந்தியாவில் தங்கியிருந்த ஈழ ஏதிலிகள், தாயகத்துக்கு சட்டவிரோதமாகத் திரும்புவது அதிகரித்துள்ளது. காங்கேசன்துறை கடற்பரப்பின் ஊடாக நேற்றைய தினம் நாடு திரும்பும் போது 5 ஏதிலிகள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு காங்கேசன்துறைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். >> 06

## தூக்கப்பட்டார் துமிந்த

சு.கவின் புதிய பொதுச் செயலராக பேராசிரியர் ரோஹன லக்ஷ்மன் தெரிவு

கொழும்பு. ஜூன் 4
சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் எதிர்கால நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக புதிய நிர்வாகக்குழு நேற்று நியமிக்கப்பட்டது. கட்சியின் மறுசீரமைப்புப் பணி முழுமையாக முடிவடை >> 06

## சு.கவின் ஆலோசகராக மகிந்தவுக்குப் பதவி

கொழும்பு. ஜூன் 4
சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு ஆலோசனை வழங்குவதற்காக குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது. மூவரடங்கிய இக்குழுவின் ஆலோசகர்களுள் ஒருவராக மகிந்த ராஜபக்ச நியமிக்கப்பட்டுள்ளார்.
முன்னாள் அரச தலைவர் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க. >> 06



## செல்லப் பிராணியையும் அழைத்து வந்த ஏதிலிகள்

யாழ்ப்பாணம். ஜூன் 4
இந்தியாவிலிருந்து நாடு திரும்பிய ஈழ ஏதிலிகள் தமது செல்லப் பிராணியான நாயையும் அழைத்து வந்துள்ளனர்.

காங்கேசன்துறை கடற்பரப்பினூடாக சட்டவிரோதமாக நாடு திரும்பிய ஈழ ஏதிலிகள் 5 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்கள் இந்திய ஏதிலிகள்முகாமில் >> 06

# மாகாண சபைகளுக்கான தேர்தல் ஆண்டிறுதிக்குள்

அரச தலைவர் மைத்திரி அறிவிப்பு



கொழும்பு. ஜூன் 4
ஆயுள் காலம் முடிவடையும் ஆறு மாகாண சபைகளுக்குமான தேர்தல் இந்த ஆண்டு இறுதிக்குள் நடத்தப்படும் என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். கலப்புமுறையிலா அல்லது விகிதாசார முறையிலா தேர்தல் நடத்தப்படும் என்பது தொடர்பில் அவர் எதுவும் குறிப்பிடவில்லை. சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நிறைவேற்றுச் சபைக் கூட்டம் நேற்று இடம்பெற்றது. இந்தக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அரச தலைவர் மைத்திரிபால மேற்கண்டவாறு கூறியுள்ளார். >> 06

## நிறைவேறிய தீர்மானங்களுக்கு என்ன நடந்தது?

வடக்கு எதிர்க்கட்சி தலைவர் கேள்வி

யாழ்ப்பாணம். ஜூன் 4
யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் கடந்த காலங்களில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களுக்கு என்ன நடந்தது என்று வடக்கு மாகாண எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா கேள்வி எழுப்பியுள்ளார்.
யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இன்று நடைபெறவுள்ளது. மக்கள் பிரதிநிதிகளிடமிருந்து, பிரச்சினைகள், யோசனைகள், தீர்மானங்கள் யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தினால் கோரப்பட்டிருந்தன. >> 06

## கிளிநொச்சியில்

### நிதி நிறுவனங்களிடமிருந்து பெண்களை பாதுகாப்பது தொடர்பில் கலந்துரையாடல்

(விரிவு பக்-11)

## அன்னதானச் சான்றிதழை

### பெறுவதற்குப் படையெடுக்கும் ஆலயங்களின் நிர்வாகத்தினர்

(விரிவு பக்- 11)

## சாவ.மருத்துவமனையில்

### அலைபேசியைப் பயன்படுத்த பணியாளர்களுக்குக் கட்டுப்பாடு

முன்னுதாரணம் என்கின்றனர் மக்கள்

(விரிவு பக்- 11)

## யாழ்ப்பாணத்தில் முன்னெடுக்கப்படும் காணி சுவீகரிப்புக்களை நிறுத்துக

மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்துக்கு வருகிறது பிரேரணை >> 06

# பிணைமுறி விவகாரத்தில் மேலும் 12,500 மில்லியன் ரூபா மோசடி

விசாரிக்க மீண்டுமொரு ஆணைக்குழுவை நியமிக்குமாறு ஊழல் எதிர்ப்புக்குழு வலியுறுத்து

கொழும்பு. ஜூன் 4
பிணைமுறி மோசடியுடன் தொடர்புடைய பேர்ப்பச்சுவல் ட்ரசரிஸ் நிறுவனம் 2016ஆம் [illegible] முதல் 2017ஆம் ஆண்டு [illegible] வரையான காலப்பகுதிக்குள் முறைகேடான வகையில் 12 ஆயிரத்து 500 மில்லியன் ரூபா இலாபமீட்டியுள்ளதால் அது தொடர்பில் விசாரணை நடத்துவதற்கு இரண்டாவது அரச தலைவர் ஆணைக்குழுவை நியமிக்குமாறு ஊழல் எதிர்ப்புக்குழு அரச தலைவரிடம் நேற்று கோரிக்கை விடுத்தது. >> 06

## மனிதாபிமான அடிப்படையில் ஒரு மாதம் அவகாசம் தாருங்கள்

கடலட்டை பிடிப்பில் ஈடுபடும் மீனவர்கள் சிவாஜியிடம் நேற்று நேரில் கோரிக்கை முன்வைப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 4
நாங்கள்அதிகளவுபணத்தை முதலீடு செய்துள்ளோம். நோன்புக் காலத்தில் எங்களுக்கு தொழில்தடை விதித்தால் நாங்கள் நெருக்கடிக்குள்ளாகுவோம். மனிதாபிமான அடிப்படையில் ஒரு மாத கால அவகாசம் தாருங்கள். இவ்வாறு வடமராட்சி கிழக்கு கடற்பரப்பில் கடலட்டை பிடிப்பில் >> 06

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மைத்திரி இருந்திருந்தால் பிரபாகரன் வென்றிருப்பார்

## மகிந்த ராஜபக்ச கூறுகின்றார்



கொழும்பு.ஜூன் 4
அரசதலைவர்மைத்திரிபாலசிறிசேனவைப் போன்ற அரசதலைவர் இலங்கை போர்க் காலத்தில் பதவியில் இருந்திருந்தால் பிரபாகரன் ஒரே ஒரு தொலைபேசி அழைப்பில் போரை வெற்றிபெற்றிருப்பார். இவ்வாறு முன்னாள் அரசதலைவர் மகிந்தராஜபக்சதெரிவித்தார்.
தற்போதைய அரசியல் நிலவரம் தொடர்பாக ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது;
தற்போது உள்ளதைப் போன்ற அரசைஇலங்கையின்வரலாற்றில் இதுவரையில் கண்டதில்லை.
ஊழல்களும்,திருட்டுகளும்நிறைந்து வழியும் அரசே தற்போது உள்ளது.
தமிழ் மக்களின் ஆதரவால் புதிய அரசு அமைக்கப்பட்டது.
மைத்திரி அரசதலைவராக வந்தவுடன்ரணிலைதலைமைஅமைச்சர் ஆக்கினார்.
அதன் பின்னர் முழுக்கட்டுப் பாடுகளும் தலைமை அமைச்சர் கைகளுக்கு சென்று விட்டது. இப்போது தலைமை அமைச்சரை மாற்ற முடியாத நிலையில் அரசதலைவர் உள்ளார்.
மைத்திரிபால சிறிசேனவின் அண்மையகருத்துகளின்மூலம்அவரின் எதிர்காலம் தெளிவாகத் தெரிகின்றது. அரசதலைவர்தற்போது இக்கட்டான சூழ்நிலையைச் சந்தித்துள்ளார்.
அடுத்தஅரசதலைவரின்தேர்தலின் பின்னர் என்ன நடக்கும் என்பதே அவருக்குத் தெரியவில்லை - என்றார். (ந.ரி4)

---

## தியாகி சிவகுமாரனின் நினைவேந்தல் நாளை

யாழ்ப்பாணம், ஜூன் 4
தமிழ் இனத்தின் விடுதலைக்கான முதல் தற்கொடையாளர் தியாகி பொன்னுத்துரை சிவகுமாரனின் 44ஆம் ஆண்டு நினைவேந்தல் நாளை செவ்வாய்க்கிழமை உரும்பிராயில் உள்ள சிவகுமாரனின் நினைவிடத்தில் காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது. (5)

---

### கிட்டுப்பூங்கா அருகில்

## குழப்பம் விளைவித்த இளைஞர் குழு

யாழ்ப்பாணம், ஜூன் 4
செம்மணி வீதியில், கிட்டுப் பூங்காவுக்கு அருகில், வடக்கு மாகாண கல்வி அமைச்சின் அலுவலகம் முன்பாக நேற்று மாலை 6.20 மணியளவில் இளைஞர் குழு குழப்பத்தில் ஈடுபட்டதால், அந்தப் பகுதியில் பெரும் பதற்றம் நிலவியது.




இது தொடர்பில் அந்தப் பகுதியைச் சேர்ந்தவர் தெரிவித்ததாவது,
செம்மணி வீதியில் நீர்பாசன் குழாய்களை நிலத்தில் புதைக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. கிடங்கு தோண்டும் பணியில், நீர்ப்பாசனத் திணைக்களத்தின் இரண்டு ஜே.சி.பி. இயந்திரங்கள் நேற்று மாலையும் ஈடுபட்டன. இதன்போது அந்த வீதியால் உழவு இயந்திரம் வந்துள்ளது.
ஜே.சி.பி. இயந்திரத்தினால் கிடங்கு தோண்டும் பணி முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கும்போது, வீதியில் பயணிக்க முடியாத நிலை ஏற்பட்டது. இதன்போது உழவு இயந்திர சாரதிக்கும், அங்கு பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த பெரும்பான்மையின பணியாளர்களுக்கும் இடையில் வாய்த் தர்க்கம் ஏற்பட்டுள்ளது.
சிறிது நேரத்தில் அந்தப் பகுதியில் சுமார் 10 இளைஞர்கள் அங்கு வந்தனர். அவர்கள் அனைவரும் 30 வயதுக்கு குறைவானர்கள். அவர்களது கையில் பொல்லு, தடி இருந்தது. ஜே.சி.பி. இயந்திரத்தின் மீது தாக்குதல் நடத்தினர். இந்தக் குழப்பங்களைத் தடுக்கச் சென்ற மதகுரு ஒருவர் இளையோரால் அவமதிக்கப்பட்டுள்ளார். பொலிஸாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டும் அவர்கள் உடனடியாக அங்கு வரவில்லை.
ஜே.சி.பி. இயந்திரம் தாக்கப்பட்டும், அதில் பணிபுரிந்த பெரும்பான்மையினப் பணியாளர் காயமடைந்தும் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் அவர்கள் வழங்கிய தகவலுக்கு அமைவாகவே பொலிஸார் அங்கு வந்து விசாரணைகளை மேற்கொண்டனர் - என்றார்.
இது தொடர்பில் யாழ்ப்பாணப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (5.105)

---

# காணாமல் ஆக்கப்பட்டோர் பணியகம் காத்திரமாகச் செயற்படுவது அவசியம்

## அமைச்சர் மனோ கணேசன் தெரிவிப்பு



**கொழும்பு, ஜூன்.4**
**காணாமற் போனோருக்கான அலுவலகத்தின் ஊடாக காத்திரமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். இவ்வாறு எதிர்பார்ப்பதாக அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்தார்.**

கொழும்பில் நேற்று முன்தினம் இடம் பெற்றபோரின்பின்னரானநல்லிணக்கமும் சமாதானத்தைக் கட்டியெழுப்பலும்' எனும் நூல்வெளியீட்டில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைக் தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது;
காணாமல் போனவர்கள் விடயத்தில் அரசதலைவர் அதிக அக்கறையுடன் செயற்படவேண்டும்என்பதற்காகவே அந்த அலுவலகம் தொடர்பான அமைச்சை நான் பெறவில்லை. அன்று காணாமற் போனோர் தொடர்பில் வீதியில் இறங்கி போராடியவன் என்ற வகையில் அது தொடர்பில் பேசுவதற்கு எனக்கு உரிமையுள்ளது.
அதிகாரங்கள்கட்டாயமாகப்பகிரப்படவேண்டும் என்பதுடன், ஆரம்ப கால ஆணைக்குழுக்கள் போல் அல்லாது காணாமல் போனவர்களின் உறவுகளுக்கு தற்போதைய அலுவலகத்தின் ஊடாக சிறந்த தீர்வுகள் முன்வைக்கப்பட வேண்டும்.
அவர்களுக்கான இழப்பீடுகள் வழங்கப்படவேண்டும். வடக்குகிழக்கில்70 ஆயிரம்பேர்கணவனை இழந்தவர்களாக உள்ளனர். வடக்கு கிழக்கில் ஒரு இலட்சம் வீடுகளை அமைப்பதாக எனதுஅரசுகூறியதுஆனால்தற்போது மூன்றரை வருடங்கள் கடந்துள்ள போதிலும் அது நடைபெறவில்லை. என்றார். (ந.ரி4)

---

# பலவீனப்படுத்துவோரை முறியடிப்பது அவசியம்

## ரவூப் ஹக்கீம் கூறுகின்றார்



புத்தளம்.ஜூன் 4
எம்மைப் பலவீனப்படுத்த நினைப்பவர்களின் முயற்சியை முறியடிக்க வேண்டும் இவ்வாறு சிறிலங்காமுஸ்லிம்காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம்தெரிவித்தார்.
புத்தளம் - கல்பிட்டி பிரதேச சபைக்குட்பட்ட சிறிலங்காமுஸ்லிம்காங்கிரஸின்அக்கறைப்பற்று மத்திய குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர்இவ்வாறுதெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது;
எமதுகட்சியைபலவீனப்படுத்துவதற்கு ஒரு சில அமைச்சர்கள் எடுத்த முயற்சிகளைமுறியடிக்க வேண்டும்.
இதற்காகநாங்கள்எங்கு இருக்கின்றோம் எதனைச் செய்யப் போகின்றோம் என்பதையெல்லாம்சிந்திப்பதைவிடுத்து அவர்களுக்குதக்கபாடம் கற்பிக்க வேண்டும். அதுவேஎமதுமுடிவு.இவ்வாறு கட்சியைப் பலவீனப்படுத்த நினைக்கின்றயாராக இருந்தாலும் சரி எங்களின் முடிவின் பிரகாரம்கட்சிப்போரர்ளிகள் மிகவும் மனப்பூர்வமாக அங்கிகரித்து இருக்கின்றார்கள்என்றார். (ந.ரி4)

---

## கற்கள் வீழ்ந்தமையால் போக்குவரத்து பாதிப்பு

நுவரெலியா.ஜூன் 4
தியகல நோட்டன் பிரதான வீதியில் மண் மற்றும் பெரியளவிலான கற்கள் சரிந்து வீதியில் வீழ்ந்துள்ளது. இதனால் போக்குவரத்துப் பாதிக்கப்பட்டது இந்தச் சம்பவம் நேற்று இடம் பெற்றதுஎனப்பொலிஸார்தெரிவித்தனர்.
நோட்டன் பொலிஸார் மற்றும் பொது மக்கள் இணைந்து வீதியில் காணப்பட்ட கற்களை அகற்றியதையடுத்துபோக்குவரத்து வழமைக்குத் திரும்பின.
தொடர்ச்சியாகஇந்தப்பிரதேசத்தில் பெய்து வரும் கடும் மழை காரணமாகவே இந்த கற்கள் சரிந்து வீழ்ந்துள்ளன எனக் கூறப்பட்டது. எனவேஇவ்வீதிகளினூடாக வாகனங்களை செலுத்தும் சாரதிகள் மிகவும் அவதானத்துடன் வாகனங்களைச் செலுத்துமாறு பொலிஸார்வாகன சாரதிகளிடம்கேட்டுக்கொண்டுள்ளனர்.(ந.ரி4)



---

# கணித பாடத்தில் முன்னேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும்

## கல்வி இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு



நுவரெலியா, ஜூன்.4
கணித பாடங்களில் பெறுபேறுகள் குறைவடைவதற்குபல்வேறுசூழல் காரணிகள் காணப்பட்டாலும், மாணவர்கள்பின்னடைவுக்கு பாடசாலையையே குற்றஞ்சாட்டுவார்கள்.
இவ்வாறுகல்விஇராஜாங்கஅமைச்சர்வே.இராதாகிருஷ்ணன்தெரிவித்தார்.
மலையக பாடசாலைகளில் கணித பாடஅடைவுமட்டத்தைஉயர்த்தும் வகையில் 'அனைவருக்கும் கணிதம்' என்றவேலைத்திட்டம்நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.
இதன் முதற்கட்டமாக மத்திய மாகாணத்தில்உள்ளதெரிவுசெய்யப்பட்ட 92பாடசாலைகளின்அதிபர்களுக்கு கருத்தரங்கு நேற்று முன்தினம் நடைபெற்றது.
இதில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது;
மத்தியமாகாணத்தில் கணிதபாடம் பின்தங்கிய நிலையில் காணப்படுகின்றது. மாணவர்களது குறைகளைக் கண்டறிந்துஅதனைநிவர்த்தி செய்யவே இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் மாணவர்களின் அடைவுமட்டத்தை அதிகரிக்க எல்லோரும் ஒன்றிணைந்து செயற்படவேண்டியது அவசியம். என்றார். (ந-ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






## கம்பன் விழா

மன்னார்,ஜூன்4
மன்னார்மாவட்டசைவக் கலை இலக்கிய மன்றம் வருடா வருடம் நடாத்தும் கம்பன் விழா நிகழ்வில் பட்டிமன்றம் நாடகம் கலை நகழ்ச்சிகள் நடைபெற்றன. நிகழ்வு மன்னார்நகரசபை மண்டபத்தில் நேற்று நடைபெற்றது. இதில் மன்னார் மாவட்ட சைவ மகாசபைத் தலைவர் எஸ்.எஸ் இராமகிருஷ்ணன் மன்னார் மாவட்ட இந்து ஆலயங்களின் ஒன்றியத் தலைவர் வைத்திய கலாநிதி மு.கதிர்காமநாதன், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகபேராசிரியர் மனோன் மணி சன்முகதாஸ் தமிழருவி சிவகுமாரன் தமிழ் நேசன், அடிகளார் வலயக் கல்வி அலுவலர் சுகந்தி செபஸ்டியன் முசலி, பிரதேச செயலர் எஸ். வசந்த குமார் மற்றும் கலைஞர்கள் பொது மக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ந,ரி4,56,213)

## பாடசாலையில் பொருள்கள் திருட்டு

கிளிநொச்சி,ஜூன்.4
கிளிநொச்சி கிருஸ்ணபுரம் இராமகிருஸ்னா வித்தியாலயத்தில் பல லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் நேற்றுத் திருடப்பட்டன என்று பாடசாலை அதிபரினால் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது.
கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் நேற்று இந்த முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.
கிளிநொச்சி வலயக் கல்வித் திணைக்களத்துக்கு உட்பட்ட ஊட்டப் பாடசாலைத்திட்டத்தில் போருக்குப்பின்னர் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட அந்தப் பாடசாலையின் அதிபர் காரியாலயம், களஞ்சிய அறை கணணி, அறை ஆகியவற்றுடன் நீர் இறைக்கும் இயந்திர அறைகள் என்பன உடைக்கப்பட்டு அவற்றில் இருந்த பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன.
இவ்வாறு களவாடப்பட்ட பொருள்கள் கணனி, புரயெக்டர், நீர் இறைக்கும் பொறி, பாத்திரங்கள் உள்ளிட்ட பொருள்களே களவாடப்பட்டுள்ளதோடு அனைத்து அறைகளின் பூட்டுக்களும் உடைக்கப்பட்டு களவாடப்பட்டுள்ளமையினால் அந்தப் பாடசாலைக்கு 5 இலட்சம் ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளது. எனத் தெரிவிக்கப்பட்டது.
நேற்றுக் காலை மேலதிக வகுப்புக்காக பாடசாலைக்கு மாணவர்கள் அதிபர் வருகை தந்த போதே இந்தத் திருட்டு இடம்பெற்றதை அவதானித்தனர். இதனைத் தொடர்ந்தே முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டது. மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டனர். (ந,ரி4,105)

## புதையல் தோண்ட முற்பட்டோர் கைது

கொழும்பு,ஜூன்.4
கரதியனாறு எலிஸ்வேவனத்தில் புதையல் தோண்ட முற்பட்டனர் என்ற குற்றச்சாட்டில் 4 போர் கைதுசெய்யப்பட்டனர். சந்தேகநபர்கள் நேற்றுக்கைதுசெய்யப்பட்டனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.
இவர்களிடமிருந்து புதையல் தோண்டுவதற்குப்பயன்படுத்தப்பட்ட உபகரணங்கள் கைப்பற்றப்பட்டன.
கொஸ்லந்த, மொரவகமற்றும்மட்டக்களப்பைச் சேர்ந்த 46, 50 மற்றும் 52 வயதுடைய நபர்களே இவ்வாறு கைதுசெய்யப்பட்டனர்.
கைதுசெய்யப்பட்டநபர்களைநீதிமன்றில் முற்படுத்துவதற்கானநடவடிக்கைகளைப் பொலிஸார் மேற்கொண்டனர். (ந,ரி4)

# பணம் பெற்றவர்கள் பதவி விலகவேண்டும்

## ரமேஷ் பத்திரன எம்.பி. வலியுறுத்து

கொழும்பு, ஜூன் 4

**அர்ஜுன் அலோசியஸிடம் பணத்தை பெற்றுக்கொண்ட அரசியல்வாதிகள் இருப்பார்களேயானால், அவர்கள் ஒழுக்க நெறிமுறைகளை மதித்து அரசியலில் இருந்து விலகிக் கொள்ள வேண்டும்.**

இவ்வாறு கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரமேஷ் பத்திரன தெரிவித்தார்.
காலியில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
118க்கும் மேற்பட்ட அரசியல்வாதிகள் அர்ஜுன் அலோசியஸிடம் இருந்து பணம் பெற்றுள்ளனர் எனக் கூறப்படுகிறது. இவர்களின் தகவல்கள் வெளியிடப்பட வேண்டும்.
இலங்கை நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் சிலரது நடத்தைகள் காரணமாக, நாடாளுமன்றத்துக்கு பெரும் தலை குனிவு ஏற்பட்டுள்ளது. அனைத்து பிரதிநிதிகள் மீதும் தவறான அபிப்பிராயம் ஏற்பட்டுள்ளது - என்றார். (ந-ரி5)

## நடமாடும் சேவை

மன்னார், ஜூன்4
தேசிய ஒருமைப்பாடு,நல்லிணக்க மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சின் ஏற்பாட்டில் சட்ட ரீதியான ஆவணங்களைப் பெற்றுக்கொடுக்கும் நடமாடும் சேவை நேற்று மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையில் இடம்பெற்றது.
பிறப்புச் சான்றிதழினை சட்ட ரீதியாக மொழிபெயர்த்தல், பிறப்பு சான்றிதழில் உள்ள பிழைகளை திருத்துதல், பிறப்புச் சான்றிதழின் புதிய பிரதியை பெற்றுக் கொள்ளல், விவாகமாகாத தம்பதியினரை சட்ட பூர்வமாக விவாகம் செய்து வைத்தல், பிறப்புச் சான்றிதழ் இல்லாதவர்களுக்கு அனுமான சான்றிதழ் வழங்குதல், தேசிய அடையாள அட்டையைப் பெற்றுக்கொள்ள ஆவணங்களைப் பெற்றுக் கொடுத்தல், அரச காணி தொடர்பான பிரச்சினைக்குத் தீர்வு உள்ளிட்ட பல்வேறு சேவைகள் இடம் பெற்றன.
இந்த நடமாடும் சேவையில் தேசிய ஒருமைப்பாடு,நல்லிணக்க மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சர் மனோ கணேசன், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சாள்ஸ் நிர்மலநாதன், வடமாகாண சபை உறுப்பினர்கள் ஆகியோர் விருந்தினர்களாக கலந்து கொண்டதோடு, திணைக்கள தலைவர்கள், உள்ளடங்களாக அழைக்கப்பட்ட திணைக்கள பிரதிநிதிகள், கிராம அலுவலகர்கள் என பலர் கலந்து கொண்டனர். (ந-ரி5.56)




வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையினால் உலகசுற்றாடல் தினத்தை யொட்டி பிரதேசசபை வளாகத்தில் மரம் நடும் நிகழ்வு இடம்பெற்றது. பிரதேச சபை தலைவர் செயலாளர் மற்றும் அங்கு பணியாற்றும் உத்தியோகத்தர்களால் பல மரங்கள் நாட்டப்பட்டன. (ந,ரி4,402)

## இரு நூல்கள் வெளியீடு

யாழ்ப்பாணம், ஜூன் 4
வேலணை சுரேசின் "நேரமில்லா நேரம்", "இனிப்பா" (பாப்பா பாக்கள்) ஆகிய இரண்டு நூல்களின் வெளியீடுகள் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி சபாலிங்கம் அரங்கில் நேற்று நடைபெற்றது. யாழ்ப்பாணம் மாநகர ஆணையாளர் த.ஜெயசீலன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினர்களாக வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்கினேஸ்வரனும், யாழ்ப்பாண மாவட்டச் செயலர் நா.வேதநாயகனும், சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணம் இந்து ஆரம்ப பாடசாலையின் அதிபர் நா. மகேந்திரராசாவும் கலந்து சிறப்பித்தனர்.
வெளியீட்டு உரையை கவிஞர் கு.வீரா வழங்கினார். மாகாண முதலமைச்சர் மற்றும் மாவட்டச் செயலர் ஆகியோர் நூல்களை வெளியிட்டு வைத்தனர். "நேரமில்லா நேரம்" கவிதை நூலுக்கான ஆய்வுரையை யாழ்ப்பாணம் பல்கலைக்க கழக மூத்த விரிவுரையாளர் சி.ரகுராமும், "இனிப்பா" (பாப்பா பாக்கள்) நூலுக்கான ஆய்வுரையை ஓய்வு நிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி கோகிலா மகேந்திரனும் நிகழ்த்தினர். நிகழ்வில் மாணவர்களின் கலை நிகழ்வுகள், பாப்பா பாக்கள் நூலுக்கான படங்களை வரைந்த இந்து ஆரம்ப பாடசாலை மாணவர்கள், மூத்த எழுத்தாளர்கள் மதிப்பளிக்கப்பட்டனர். இந்த நிகழ்வில் எழுத்தாளர்கள், நலன் விரும்பிகள் எனப்பலர் கலந்துகொண்டனர். (7)



## குளத்தருகிலிருந்து சடலம் மீட்பு

கொழும்பு, ஜூன்4
ஹொரவபொத்தானை குளத்திற்கு அருகிலிருந்து நேற்றுமுன்தினம் சடலம் ஒன்று மீட்கப்பட்டது.
மரமொன்றில் தூக்கில் தொங்கிய நிலையிலேயே பொலிஸாரால் சடலம் மீட்கப்பட்டது.
ஹொரவபொத்தானை மெதவாச்சி சந்தியில் வசித்து வந்த போகுலவியனகே சுமேத பெரேரா (31-வயது) என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.
சம்பவம் தொடர்பில் ஹொரவ பொத்தானை பொலிஸ் நிலையத்தில் கடந்த 30ஆம் திகதி முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.
பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலின் அடிப்படையிலேயே சடலம் மீட்கப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது.
இது தொடர்பான விசாரணைகளை ஹொரவபொத்தானை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ந-ரி5)

விளம்பி வருஷ வீரமாகாளியின் சிறப்பம்சம்



வண்ணை வீரமாகாளியின் கொடியேற்றம் காண வாரீர்

வண்ணை வீரமாகாளியின் கொடியேற்றம் காண வாரீர்
வரலாற்று நாயகியின் கொடியேற்றம் காண வாரீர்
எண்ணியதைத் தரும் வீரத்தாயவளின் கொடியேற்றம் காண வாரீர்
எழிலார்ந்த கலைக் கோவிலின் கொடியேற்றம் காண வாரீர்
மன்னன் சங்கிலியன் இராஜதானியில் கொடியேற்றம் காண வாரீர்
மகத்துவ வீரவாள் நாயகியின் கொடியேற்றம் காண வாரீர்
தண்ணளிகள் பெருக்கும் அன்னையின் கொடியேற்றம் காண வாரீர்
தமிழர் நெஞ்சம் பணிந்து போற்றும் தாயின் கொடியேற்றம் காண வாரீர்
– மதுரகவி காரை. எம். பி. அருளானந்தன் –

[இன்று (04.06.2018) திங்கட்கிழமை வண்ணை வீரமாகாளியம்பாளின் விளம்பி வருஷ கொடியேற்றம்]

விளம்பர அனுசரணை
கிருஷ்ணா ஜுவல்லறி, இல. 09, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
கிருஷ்ணா அடைவுகடை, இல. 370, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கல்வி நிலையங்களுக்கு செல்லாத மாணவர்களுக்கு இலவச வகுப்பு

தென்மராட்சிப் பிரதேசசெயலகத்தில் பணியாற்றும் அலுவலகர்களின் உதவியுடன் தனியார் கல்வி நிலையங்களுக்குச் செல்லாத மாணவர்களுக்கு இலவச மாலை நேர வகுப்புகளை நடத்த பிரதேச செயலர் தேவந்தினிபாபுஏற்பாடுகள்செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

பிரதேச செயலகத்தில் அபிவிருத்தி அலுவலர்கள்பொருளாதார அபிவிருத்தி அலுவலர்கள்சமுர்த்திஅபிவிருத்திமுகாமையாளர்கள் அலுவலர்கள் கிராம அலுவலர்கள் என 200க்கு மேற்பட்ட பட்டதாரிகள் கடமையாற்றி வருகின்றனர்.

மாணவர்களின் கல்வி மேம்பாட்டினை மேற்கொள்ள செயலகத்தில் கடமையாற்றும் அலுவலர்கள் மூலம் இலவச வகுப்புகளில் கல்வி போதிக்க விரும்பும் அயலவலர்களிடம் உதவியினைக் கோரியிருந்தார். இதற்கு பல அலுவலர்கள் தாமாக இலவசமாக கல்வியினைப் போதிக்க முன்வந்தனர்.

இதனையடுத்து வரணிப் பிரதேசத்தை மையமாகக் கொண்டு பாடசாலைகளில் தரம்6தொடக்கம்தரம்11வரையானமாணவர்களுக்குஇலவசமாலைநேரவகுப்புகள் வரணி வடக்கு அ.த.க.பாடசாலை மண்டபத்தில் கடந்த திங்கட்கிழமை பிரதேச உதவித்திட்டமிடல்பணிப்பாளர்செ.சுபச்செல்வனால் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

அன்றைய தினம் வகுப்புகளுக்கு வருகை தந்த மாணவர்களுக்கு எழுதுமட்டுவாழ் கற்பகவனம் உரிமையாளரினால் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன எனவும் தெரிவிக்கப்பட்டது. (9)

## வாக்காளர் தினத்தை முன்னிட்டு நடைபவனியும் ஒன்றுகூடலும்

சாவகச்சேரி, ஜூன் 4

யாழ்.மாவட்ட தேர்தல்கள் திணைக்களத்தினால் வாக்காளர் தினத்தை முன்னிட்டு நடைபவனியும் ஒன்றுகூடலும் எதிர்வரும்7ஆம்திகதியாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

தேர்தல்கள்ஆணைக்குழுவின்உறுப்பினர் பேராசிரியர் எஸ்.இரத்தினஜீவன் எஸ்ஹூல்மேலதிகதேர்தல்கள்ஆணையாளர் ( சட்டம் மற்றும் விசாரணை ) ஜனாப்எம்.எம்.மொஹமட்ஆகியோரின் பங்களிப்புடன் காலை 8 மணிக்கு யாழ். முற்றவெளியிலிருந்து நடைபவனி புறப்பட்டு மருத்துவமனைச் சாலை ஊடாக மாவட்டச்செயலகத்தைசென்றடையுமெனவும் அதனையடுத்து ஒன்றுகூடல் நிகழ்வும்இடம்பெறுமெனவும் மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் அறிவித்துள்ளார். (9)

## சுற்றாடல் தின நிகழ்வுகள்

சாவகச்சேரி, ஜூன் 4

சாவகச்சேரி நகரசபையின் பன்னாட்டு சுற்றாடல் தின நிகழ்வுகள் நகரசபையின்பொன்விழாமண்டபத்தில்நாளை செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு தவிசாளர் சிவமங்கை இராமநாதன்தலைமையில்நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

நிகழ்வில் திண்மக்கழிவு முகாமைத்துவம் தொடர்பான விழிப்புணர்வு என்ற தலைப்பில்மத்திய சுற்றாடல் அதிகார சபையின் சுற்றுச்சூழல் அலுவலர் கருத்துரை வழங்கவுள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டது. (9)



தென்மராட்சி கல்வி வலயத்தின் சாவகச்சேரி கல்விக் கோட்ட பாடசாலை மாணவர்கள் ஆசிரியர்களுக்கான பாரம்பரிய கலாசாரத்தைப் பிரதிபலிக்கும் புத்தாண்டு நிகழ்வு மீசாலை வீரசிங்கம் ஆரம்ப பாடசாலை மைதானத்தில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் வ.நடராசா தலைமையில் அண்மையில் நடைபெற்றது. (9)

*தென்மராட்சி உள்ளூராட்சி சபைகளில்*

# மலக்கழிவு உறுஞ்சும் இயந்திரம் இருந்தும் சுத்திகரிப்பு நிலையம் இல்லாததால் சிரமம்

*மாற்று ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு மக்கள் கோரிக்கை*

**தென்மராட்சி, ஜூன் 4**

**தென்மராட்சி பிரதேசத்தில் இரு உள்ளூராட்சி சபைகளில் மலக்கழிவு உறுஞ்சும் இயந்திரங்கள் இருந்தும் சுத்திகரிப்பு நிலையம் இன்மையால் தனியார் நிறுவனங்களிடம் அதிக கட்டடணம் செலுத்தி சேவையைப் பெறவேண்டியுள்ளது என்று பிரதேச மக்கள் தெரிவித்தனர்.**

சாவகச்சேரி நகரசபை மற்றும் சாவகச்சேரிப்பிரதேசசபை ஆகிய உள்ளூராட்சி சபைகளை உள்ளடக்கிய பிரதேசத்தில் வாழும் ஆயிரக்கணக்கான குடும்பங்கள்மலக் கூடங்களைப்பயன்படுத்தமுடியாமல் அதிக கட்டணம் செலுத்தி தனியார்நிறுவனங்களின்சேவையைப்பெறவேண்டியநிலைமைக் குத்தள்ளப்பட்டுள்ளனர். தனியார் நிறுவனத்தால் சேகரிக்கப்படும் கழிவுகள் வேறொரு உள்ளூராட்சிசபையின்சுத்திகரிப்புநிலையத்துக்கு வழங்கப்படும் போது அரச நிறுவனங்களான உள்ளூராட்சி சபைகள் மாற்று ஏற்பாடுகளை மேற்கொண்டு மக்களுக்குச் சேவைகளை வழங்கமுடியாதா என பாதிக்கப்பட்ட மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

சாவகச்சேரிப்பிரதேசசபைக்கென நிறுவனமொன்றால் மிருசுவில் மருத்துவமனைக்கு அருகில் பல மில்லியன்ரூபாசெலவில்மலக்கழிவு சுத்திகரிப்பு நிலையம் அமைத்துவழங்கியுள்ளது. இந்த நிலையம் அயலில் உள்ள மக்களின் நலன் கருதி இயங்காமல் மூடப்பட்டு பல மில்லியன் ரூபா பெறுமதியான இயந்திரங்கள் துருப்பிடித்துக் காணப்படுகிறன. இதேவேளை சாவகச்சேரி நகரசபைக்கென இரண்டு வருடங்களுக்கு முன்னர் யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தால் 25 மில்லியன் ரூபா செலவில் கண்ணாடிப்பிட்டிப் பகுதியில் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்பட்டு இடைநடுவில்கைவிடப்பட்டுள்ளது. இரு சபைகளுக்கு மலக்கழிவு உறுஞ்சும்தாங்கிகள் கொண்டவாகனங்களும்வழங்கப்பட்டுள்ளன. மலக்கூடங்கள்பாவிக்கமுடியாதநிலையில் மக்கள் அரச நிறுவனமான இருசபைகளிலும்சேவைகளைப் பெறமுடியாததால்தனியார்நிறுவனம்மூலம்அதிககட்டணம்செலுத்திப் பெறவேண்டியுள்ளது. தனியார் நிறுவனத்தால் இவ்வாறான சேவைகளை வழங்கமுடியுமாயின் மக்களுக்குச் சேவைகளை வழங்கும்உள்ளூராட்சிசபைகள் தற்போது வேறு உள்ளூராட்சி சபைகளால் நடத்தப்படும் சுத்திகரிப்புமையங்களுக்குஅனுப்பிச் சேவைகளை வழங்கமுடியாதா எனமக்கள்கேள்வியெழுப்பினர்.

பெருந்தொகைக் கட்டணம் செலுத்த முடியாத வறிய மக்கள் இயற்கைக் கடன்களை பற்றைகளில்கழிப்பதால்பெரும்சுகாதாரச் சீர்கெடு ஏற்படுவதாகவும் பொது மக்களின் நலனில் அக்கறையுள்ள அனைவரும் செயற்பட்டு தென்மராட்சிப் பிரதேசத்தின் இரு சபைகளிலும் சுத்திகரிப்பு நிலையங்கள் செயற்பட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமெனவும் தெரிவித்தனர். (9)

## மகோற்சவம்

யாழ்ப்பாணம், ஜூன் 4

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை வடகிழக்கு கலட்டி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தான மகோற்சவம் நாளை மறுதினம் புதன்கிழமை காலை10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 18 ஆம் திகதி திங்கட்கிழமை இரவு சப்பறத் திருவிழாவும் 19 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை 9.30மணிக்குதேர்த்திருவிழாவும் நடைபெறும் என ஆலய பிரதம குரு சிவஸ்ரீ.து.விவேகானந்தக்குருக்கள் தெரிவித்துள்ளார்.

## சேவைநலன் பாராட்டுநிகழ்வு

தென்மராட்சி, ஜூன் 4

மட்டுவில்கமலாசினிவித்தியாலயத்தில்20ஆண்டு கால சேவையினைப் பூர்த்திசெய்துஓய்வுபெற்று செல்லும் விவசாயபாட ஆசிரியை யோகேஸ்வரி பொன்னையாவிற்குபாடசாலையினர் சேவைநலன் பாராட்டு நிகழ்வை அண்மையில்பாடசாலை மண்டபத்தில் அதிபர் ஐ.தேவராஜன்தலைமையில் நடத்தினர்.

இந்த நிகழ்வில் தென்மராட்சி கல்வி வலயத்தின் சேவாமங்கலம் திட்டத்தின்கீழ்ஓய்வூதியம்பெறுவதற்கான ஆவணங்களைவலயபிரதிக்கல்விப் பணிப்பாளர்-- (நிர்வாகம்) தி.கிருபாகரன் வழங்க வலய நிர்வாக அலுவலர் யேகேஸ்வரி குமார் பூச்செண்டினை கையளித்து மதிப்பளித்தார். (9)

## புலமைப்பரிசில் வழங்கப்பட்டது

யாழ்ப்பாணம், ஜூன் 4

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் 2017 ஆம் ஆண்டுஜி.சி.ஈ(சா/த) பரீட்சையில்சித்திபெற்ற மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வு அதிபர் எஸ்.கே.எழில்வேந்தன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

இதில் 9 ஏ சித்திகளைப் பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்த மாணவன் சதீஸ்நாதன் தேனுஜனுக்கு லண்டனில் வசிக்கும் பழைய மாணவன் கலாவண்ணனால் வழங்கப்பட்ட ரூபா ஒரு இலட்சத்து 40 ஆயிரம் பெறுமதியான புலமைப்பரிசிலை லண்டனில் வசிக்கும் கல்லூரியின் முன்னாள் புகழ்பூத்த துடுப்பாட்ட வீரர்போல்பிரகலாதனால்வழங்கி மதிக்களிக்கப்பட்டது என பழைய மாணவர் சங்க செயலாளர் ம.வித்தியானந்தநேசன் தெரிவித்தார்.

## ஆங்கிலதினப் போட்டி

யாழ்ப்பாணம், ஜூன் 4

இளவாலை யா/மரீசன்கூடல் றோ.க.த.க பாடசாலை ஆங்கிலதினப் போட்டியில் குழுப்பாடலில்பங்குபற்றிகுழு-1மூன்றாம்இடத்தையும், நாடகப் போட்டியில் பங்குபற்றி முதலாம் இடத்தையும் பெற்று பாடசாலைக்குப் பெருமை சேர்த்திருக்கிறார்கள் எனப் பாடசாலையின் அதிபர் ல.அமலானந்தகுமார் தெரிவித்தார்.

# யாழ்.மாவட்ட உள்ளூராட்சிச் சபைகளில் கடமையாற்றும் சாரதிகளுக்குப் பயிற்சி

யாழ்ப்பாணம், ஜூன் 4

யாழ்.மாவட்ட உள்ளூராட்சிச் சபைகளில் கடமையாற்றும் சாரதிகள் மற்றும் வாகன பாவனையுடைய அனைத்துஅலுவலர்களுக்கான சாலை ஒழுங்கு விதிகள், விபத்துக்களைத்தடுத்தல் மற்றும் வாகன பராமரிப்புத்தொடர்பானபயிற்சி நெறியை யாழ்.பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளர்அலுவலகத்தினால் உள்ளூராட்சி சபைகளில் நடத்தவுள்ளனர்.

ஒவ்வொரு பயிற்சி நெறியிலும் தலா 50 அலுவலர்கள் பங்குபற்றும் வகையில் ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளர்ந.திருலிங்கநாதன்சபைகளின் செயலாளர்களுக்கு அறிவித்துள்ளார்.

பயிற்சி வகுப்புகள் காலை, மாலை என இரு வேளை நடத்தப்படவுள்ளனஎனவும் முதலாவது பயிற்சி வகுப்பு நாளைசெவ்வாய்க்கிழமை காலை வல்வெட்டித்துறை நகரசபை மண்டபத்திலும் மாலைபருத்தித்துறைநகரசபைமண்டபத்திலும்நடைபெறவுள்ளன. இதன் பிரகாரம் எதிர்வரும் 12 ஆம் திகதி காலை சாவகச்சேரி நகரசபையிலும் மாலை சாவகச்சேரிபிரதேசசபையிலும், 19 ஆம் திகதி காலை வேலணைப்பிரதேசசபையிலும் மாலை ஊர்காவற்றுறைப் பிரதேச சபையிலும், 26 ஆம் திகதி காலை வலிகாமம் மேற்குப் பிரதேச சபையிலும் மாலை வலி. தென்மேற்குப்பிரதேசசபையிலும், ஜூலை 3 ஆம் திகதி காலைவலிகாமம்வடக்குப் பிரதேச சபையிலும், மாலைவலிகாமம்தெற்குப் பிரதேசசபையிலும்ஜூலை 10ஆம்திகதி காலைவலிகாமம் கிழக் குப் பிரதேச சபையிலும், மாலை நல்லூர் பிரதேசசபையிலும் ஜூலை17 ஆம் திகதி காலை பருத்தித்துறை பிரதேச சபையிலும் மாலை வடமராட்சி தெற்கு மேற்குப் பிரதேச சபையிலும், ஜூலை 24 ஆம் திகதி காலை காரைநகர் பிரதேச சபையிலும் மாலை நெடுந்தீவுப் பிரதேச சபையிலும் நடைபெறவுள்ளதாகத்தெரிவிக்கப்பட்டது. (50,9)

## வைகாசி விசாகப் பொங்கல்

யாழ் கட்டுவன் மேற்கு அருள்மிகு நாச்சிமார் அம்பாள் தேவஸ்தான வைகாசி விசாகப் பொங்கல் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 7 மணிக்கு நடைபெறவுள்ளது.

நேற்று 28 ஆம் திகதி மாலை 5 மணிக்கு பூசை நடைபெற்று விளக்கு வைத்து திருக்கதவு சாத்தப்பட்டதை தொடர்ந்து வைகாசி விசாகப் பொங்கல் இடம் பெறவுள்ளதாகஆலய பரிபால சபையினர் அறிவித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிறுவை அளவைகள் கருவிகளுக்கு முத்திரையிடல்

யாழ்ப்பாணம்,யூன் 4

நிறுவை அளவைகள் கருவிகளுக்கு முத்திரையிடும் பணி சுன்னாகம் பிரதேச சபை உப அலுவலகத்தில் இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகி மாலை 3 மணி வரை நடைபெறுமென யாழ். மாவட்ட செயலக நிறுத்தல் அளவைகள் பிரிவு பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

இந்த முத்திரையிடும் பணி நாளை மற்றும் மற்றும் 7 ஆம் திகதியும் இடம்பெறுவதுடன் எதிர்வரும் 11 , 12 ,14 ஆம் திகதிகளில் சுன்னாகம் பிரதேச சபையில் இடம்பெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்டுள்ள திகதிகளில் நிறுத்தல் அளவைகள் கருவிகளுக்கு முத்திரையிடுமாறும், அவ்வாறு முத்திரையிடாத நிறுத்தல் அளவைகள் கருவிகள் பயன்படுத்தப்பட்டால் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென்றும் நிறுத்தல் அளவைகள் முத்திரையிடல் பிரிவு பொறுப்பதிகாரி மேலும் தெரிவித்தார். (106)

## சடலத்தை அடையாளம் காண்க

யாழ்ப்பாணம்,ஜூன் 4

தென்மராட்சி திடீர் இறப்பு விசாரணை அதிகாரியால் கடந்த 30 ஆம் திகதி ஆணொருவரின் சடலம் யாழ் போதனா மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சடலமானது கொடிகாமம் புகையிரத நிலைய முன்பாகவுள்ள கடையின் பின்பக்கத்தில் இருந்ததாகவும் இவர் அரச மருத்துவமனையொன்றில் கடமையாற்றிய ஓய்வுபெற்ற நோயாளர் காவுவண்டியின் சாரதி கந்தசாமி எனவும் அறிந்தவர்கள் தெரிவித்ததாக அறியத்தந்துள்ளார்.

எனினும் இவரது சடலமானது இதுவரை எவராலும் உரிமை கோரப்படாத நிலையில் இருப்பதால், இச்சடலத்தை உரியவர்கள் அடையாளம் காட்டி 14 நாள்களினுள் பொறுப்பேற்றுக்கொள்ளுமாறு யாழ். போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் மருத்துவர் வி. சண்முகராஜா தெரிவித்துள்ளார்.

## முன்பள்ளிகளின் விளையாட்டு நிகழ்வு

சாவகச்சேரி, ஜூன் 4

சாவகச்சேரி பிரதேசமட்ட முன்பள்ளிகளின் விளையாட்டு நிகழ்வு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மைதானத்தில் எதிர்வரும் 7 ஆம் திகதி மதியம் 2.30 மணிக்கு நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள் ளது. இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக சாவகச்சேரி நகரசபை தவிசாளர் சிவமங்கை இராமநாதன் கலந்து கொள்வார் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (9)

## கற்றல் உபகரணங்கள் வழங்கி வைப்பு

வடமராட்சி, ஜூன் 4

வடமராட்சி கிழக்கு, மருதங்கேணி பிரதேச செயலகங்களில் உள்ள மாற்றுத் திறனாளிகளின் பிள்ளைகளுக்கு கற்றல் உபகரணங்களை பிரதேச மட்ட மாற்றுவலுவுள்ளோர் சுய உதவிக் குழுவைச் சேர்ந்த அ. மேரிறெசோதாவால் (வல்லரசி) வழங்கி அண்மையில் வழங்கப்பட்டது.

இதற்கு அனுசரணை தந்து கற்றல் உபகரணங்களை தந்துதவிய 'உதயம்' கலாசார சங்கத்துக்கும் (கனடா) அதன் இலங்கை பிரதிநிதியாளரான தியாகராஜா நிஷங்கனுக்கும் நன்றிகளைத் தெரிவிப்பதாக குழுவின் தலைவர் அ. றொசோதா தெரிவித்தார்.



யாழ்ப்பாண புதிய

# வர்த்தக நிலைய கட்டடப் பணிகள் 2018 இலும் சாத்தியம் இல்லை

வடமாகாண திறைசேரி வட்டாரங்கள் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜூன் 4

**யாழ்ப்பாணத்தில் முன்னெடுக்கத் திட்டமிடப்பட்ட புதிய வர்த்தகக் கட்டடத்துக்கான பணிகள் 2018ஆம் ஆண்டிலும் முன்னெடுப்பதற்கான எந்தவிதமான சாத்தியங்களும் இல்லை என்று வடக்கு மாகாண திறைசேரி வட்டாரங்கள் தெரிவித்தன.**

2017ஆம் ஆண்டுக்கான வரவு -செலவுத் திட்டத்தில் ஆயிரம் மில்லியன் ரூபாவில் அமைக்கத் திட்டமிடப்பட்ட நவீன வர்த்தக அடுக்குமாடிக் கட்டடத்துக்கான பணிகள் கடந்த ஆண்டு ஆரம்பிக்க நடவடிக்கைகள் இடம்பெற்றன.

இருப்பினும் ஆண்டு இறுதி வரை குறித்த திட்டத்துக்கான பணம் எவையும் மாகாணத் திறைசேரிக்குக் கிடைக்கவில்லை. குறித்த நிதி தொடர்பில் திறைசேரியிடம் வினாவியபோது, தெற்கில் ஏற்பட்ட இயற்கை இடர் காரணமாக அதிக நிதிச் செலவு ஏற்பட்டுவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் குறித்த திட்டத்தை இந்த ஆண்டு ஆரம்பிக்க எண்ணியபோதும் நிதி நடவடிக்கையின் பிரகாரம் குறித்த திட்டத்துக்கான நிதி 2018ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்படவில்லை. எனவே குறித்த திட்டத்தை 2019ஆம் ஆண்டின் ஆரம்ப காலப் பகுதியில் ஆரம்பிக்கும் வகையில் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இதற்கான முன்னேற்பாடாக 2019ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்டம் தயார் செய்யும்போது குறித்த திட்டத்துக்கான நிதியையும் பெயர் குறித்து ஒதுக்குமாறு திறைசேரிக்கு எழுத்துமூலம் கோரிக்கை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்தனர்.

இதேநேரம் குறித்த கட்டடத் தொகுதியானது முன்னர் செம்மணியிலும் பின்னர் சங்கிலியன் பூங்கா பிரதேசத்திலும் அமைக்க இரு இடங்களும் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டபோதும் தற்போது யாழ். நகரில் காங்கேசன்துறை வீதி மற்றும் வைத்தியசாலை வீதி என்பன சந்திக்கும் சத்திரத்துச் சந்தியில் உள்ள சந்தைப்பகுதியில் அமைக்கத் திட்டமிடப் பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (எ-105)

மானிப்பாய் கோயில்பற்று ப.நோ.கூ சங்கத்தின்

# நெறியாளர் குழுக்கூட்டத்தை நடத்த கூட்டுறவுத் திணைக்களம் ஒழுங்கு

யாழ்ப்பாணம், ஜூன் 4

மானிப்பாய் கோயில்பற்று ப.நோ.கூ சங்கத்தின் நெறியாளர் குழுக்கூட்டம் கோரம் இன்மையால் கடந்த மூன்று மாதங்களுக்கு மேலாக இடம்பெறவில்லை.

இந்த நிலை குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தியதைத் தொடர்ந்து நெறியாளர் குழுக்கூட்டத்தை நடத்துவதற்கான ஒழுங்குகளைக் கூட்டுறவுத் திணைக்களம் மேற்கொண்டுள்ளது.

மேற்படி சங்கத்துக்கான நெறியாளர்களைத் தெரிவு செய்வதற்கான கூட்டம் கடந்த 3வருடங்களுக்கு முன் சங்க மண்டபத்தில் நடைபெற்றது.

பொதுச்சபையிலிருந்து இரு குழுக்களாக 14பேர் போட்டியிட்ட போது ஒருகுழுவைச் சேர்ந்த 7பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

இந்த 7 உறுப்பினர்களில் 35 வயதுக்கு உட்பட்ட இரு உறுப்பினர் தொடர்ந்து இயக்குனர் சபைக் கூட்டத்துக்குச் சமூகமளிக்காமையால் 5 உறுப்பினர்களுடன் கூட்டம் இடம்பெற்று வந்தது.

இந்த நிலையில் சங்கத் தலைவரின் செயற்பாட்டில் அதிருப்தி அடைந்த மேலும் 2 உறுப்பினர் நெறியாளர் குழுக்கூட்டத்துக்குச் சமூகமளிக்காமையால் கூட்டம் நடத்துவதற்குக் கோரம் இன்மையால் கடந்த மூன்று மாதங்கள் நெறியாளர் குழுக்கூட்டம் இடம்பெறிவில்லை. இதனால் சங்கத்தை வழிநடத்த முடியாத நிலை தலைவருக்கு ஏற்பட்டுள்ளது. சங்கத்தின் தற்போதைய நிலைப்பாடு குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்துக்குத் தெரியப்படுத்தியமையை அடுத்து நெறியாளர் குழுக் கூட்டத்தை நடத்துவதற்கான ஒழுங்குகளைக் கூட்டுறவுத் திணைக்களம் மேற்கொண்டுள்ளது. (115)

## நகைக்கடைகளைப் பதிவுசெய்தலும், புதுப்பித்தலும்

யாழ்ப்பாணம், யூன் 4

தேசிய இரத்தினக்கல் ஆபரண அதிகார சபையைச் சேர்ந்த அதிகாரிகள் யாழ் வணிகர் கழக பணிமனையில் நாளை மறுதினம் புதன்கிழமை காலை 9 மணிக்கு நடமாடும் சேவை நிலையமொன்றை நடத்தவுள்ளனர்.

எனவே யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த நகைக்கடை வர்த்தக நிலையங்களுக்கு இதுவரை அனுமதியை பெற்றுகொள்ளாதவர்கள் தேசிய இரத்தினக்கல் ஆபரண அதிகாரசபையின் அனுமதியைப் பெற்றுக்கொள்ளுமாறு யாழ். வணிகர் கழகம் கேட்டுக்கொண்டுள்ளது.

இந்த நடமாடும் சேவையைப் பயன்படுத்தி நகைக்கடை வர்த்தகர்கள் வர்ண அடையாள அட்டைக்கும் விண்ணப்பிக்கமுடியும். புதிதாக நகைக்கடையைப் பதிவு செய்வோர் வியாபாரச் சன்றிதழ் மூலப்பிரதி, அடையாள அட்டைப் பிரதி, பதிவுக்கட்டணம் ரூபா 5 ஆயிரம் (வரி நீங்கலாக) ஆகியவற்றுடன் சமூகமளிக்கவேண்டும்.

வர்ணப்புகைப்படத்திலான அடையாள அட்டையைப் பெறவிரும்புவோர் மட்டும் மேலதிகமாக ஆயிரத்து 173 ரூபா பணத்துடன், கடவுச்சீட்டு அளவிலான வர்ணப் புகைப்படம் மற்றும் அடையாள அட்டையின் மூலப்பிரதி என்பவற்றைச் சமர்ப்பித்தல் வேண்டும் என வணிகர் கலகத்தின் செயலாளர் ச. சிவகுமரன் அறிவித்துள்ளார்.

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூன் 4

யாழ்ப்பாண பல்கலைக்கழக முகாமைத்துவ மற்றும் வணிக பீட யாழ். மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் கணக்கீட்டுப் பாடக் கருத்தரங்கு யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் இன்று காலை 8.30 மணிக்கு நடைபெவுள்ளது.

## வைகாசி பொங்கல்

அளவெட்டி, ஜூன் 4

குரும்பசிட்டி மாவடி ஞானவைரவர் ஆலய வைகாசி பொங்கல் நாளை மறுதினம் புதன்கிழமை மதியம் 2.30 மணிக்கு சிறப்புபூசை ஆராதனைகள் இடம்பெற்று பொங்கல் நிகழ்வு நடைபெறவுள்ளது என ஆலய தர்மகர்தா சபையினர் தெரிவித்தனர். (36)

## தேனீக்கிராம திட்டத்தின் தொடக்க நிகழ்வு

அளவெட்டி, ஜூன் 4

தமிழ்த்தேசியபசுமை இயக்கத்தின் ஏற்பாட்டில் உலக சுற்றுச் சூழல் தினம் மற்றும் தேனிக்கள் தினத்தை முன்னிட்டு தேனீக்களின் வளர்ப்பை ஊக்குவிக்கும் தேனீக்கிராம திட்டத்தின் தொடக்க நிகழ்வு கோண்டாவில் இந்துக்கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நாளை செவ்வாய்க்கிழமை மாலை 4.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

தமிழ்த்தேசியப்பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தலைமையில் நடைபெறும். இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் கலந்து கொள்ளவுள்ளதாகவும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (36)

## பலநோக்கு மண்டபம் திறப்பு

தையிட்டி தெற்கு கிராம அபிவிருத்திச்சங்கத்தின் பல நோக்கு மண்டபத்திறப்பு நிகழ்வு இன்று திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு தையிட்டி தெற்கு கிராம அபிவிருத்திச்சங்கத் தலைவர் செ.பி. இளமுருகனார் தலைமையில் இடம்பெறும். இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக ஐரோப்பிய ஒன்றிய சர்வதேச விவகார அதிகாரி பாங்கொக்பியரட் செட்றிக், சிறப்பு விருந்தினர்களாக தெல்லிப்பழை பிரதேச செயலக பிரதி திட்டமிடல் பணிப்பாளர் ரதி. நகுலேஸ்வரன், நிகழ்ச்சித்திட்ட முகாமையாளர்களான கதிரவேல் ரஞ்சன், சென்சி பப்ரிசியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில், வாழ்வாதார உதவித்திட்டம் வழங்கல், சமூக கலந்துரையாடலும் இடம்பெறும் என தலைவர் தெரிவித்துள்ளார். (36)

## பரிசாரகர் பயிற்சிநெறி தொடர்பான நேர்முகத் தேர்வு

அளவெட்டி ஜூன் 4

யாழ் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் கீழ் உள்ள மருத்துவமனையில் பணிபுரியும் சுகாதார சேவை உதவியாளர்களுக்கான பரிசாரகர் பயிற்சிநெறி தொடர்பான நேர்முகத் தேர்வு யாழ் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளதாக யாழ் பிராந்திய சுகாதார சேவை பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (36)

## கடந்த 50 ஆண்டுகளுக்கு மேல் சீரமைக்கப்படாத வீதிகள்

யாழ்ப்பாணம், ஜூன் 4

வலிகாமம் மேற்கு பிரதேச சபைக்கு உட்பட்ட சுழிபுரம் பாண்டவெட்டை கிராமத்தில் 11 உள்ளக வீதிகள் கடந்த 50 ஆண்டுகளுக்கு மேலாக மீள்சீரமைப்பு இன்றி அழிவடைந்து காணப்படுவதாக. வலி. மேற்கு பிரதேச சபை உறுப்பினர் கிருஸ்ணராசா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

கடந்த காலங்களில் படையினர் பாண்ட (மண் அணை) அணை ஏற்படுத்தியதால் வீதிகள் சீரழிந்து அழிவடைந்துள்ளது. இதனால் வீதிகளின் உரு மாறியுள்ளது. எனவே இதில் முதற்கட்டமாக மீள்சீரமைப்பு செய்யப்பட வேண்டிய பாண்டவெட்டை காளியம்மன் வீதி, பாண்டவெட்டை வீதி உட்பட ஒருசில வீதிகளை பிர தேச சபையில் முன்மொழிந்துள்ளேன் - என்றார். (50)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சு.கவின்...

முன்னாள் தலைமை அமைச்சர் டி.எம். ஜயரட்ன ஆகியோர் ஏனைய இரு ஆலோசகர்களாவர்.

சுதந்திரக் கட்சியின் நிறைவேற்று சபை மற்றும் அகில இலங்கைச் செயற்குழு ஆகியன அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்று முற்பகல் கொழும்பு அப்பேகம வளாகத்தில் கூடியது. இதன்போது இந்தத் தெரிவு இடம்பெற்றுள்ளது.

சுதந்திரக் கட்சியின் உப தலைவர்கள் பட்டியலில் இராஜாங்க அமைச்சர் பௌசி, நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் ஆகியோரும் இடம்பெற்றுள்ளனர். (5)

## யாழ்ப்பாணத்தில்...

யாழ்ப்பாணம், ஜீன் 4

வலி.வடக்கு மற்றும் மண்டைதீவில் காணி சுவீகரிப்புக்கான அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ள நிலையில், அவற்றை மீளப் பெற வேண்டும் என்ற பிரேரணை, யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இன்று முன்வைக்கப்பட வுள் ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் இந்தப் பிரேரணையை சமர்ப்பித்துள்ளார்.

வலி.வடக்கில் பலாலி வானூர்தி நிலைய விரிவாக்கத்துக்கு 5 கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த பல ஏக்கர் காணி சுவீகரிக்கப்படவுள்ளது. அதற்கான அறிவித்தல்கள் ஒட்டப்பட்டுள்ளன. அதேபோன்று மண்டைதீவிலும் மக்களின் காணிகளைச் சுவீகரிக்க அறிவித்தல் ஒட்டப்பட்டுள்ளது.

இந்தக் காணி சுவீகரிப்பு நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்தக் கோரும் பிரேரணையே இன்றைய மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் முன்வைக்கப்படவுள்ளது. (5,26)

## புதிய...

விரைவில் பேச்சு நடத்தப்படும் என்றும் எல்லே குணவன்ச தேரர் தெரிவித்தார்.

அரசியல் கட்சிகளையும், சிவில் அமைப்புக்களையும் இணைத்துக்கொண்டு புதிய கூட்டணியை அமைப்பது தொடர்பான கலந்துரையாடலொன்று நாரஹேன்பிட்டிய, அபயராம விகாரையில் நடைபெற்றது. இதில் பங்கேற்று உரையாற்றுகையிலேயே தேரர் மேற்கண்டவாறு கூறினார்.

புதிய கூட்டணி தொடர்பில் ஐந்து கட்சிகளுடன் இதுவரையில் பேச்சு நடத்தியுள்ளேன். தனித்தனிக் கட்சியாக இணைந்து கூட்டாகப் பயணிப்போமென அந்தக் கட்சியின் உறுப்பினர்கள் அறிவுறுத்தினர். அதற்கு நானும் எதிர்ப்பை வெளியிடவில்லை.

மக்கள் விடுதலை முன்னணி, சுதந்திரக் கட்சியின் 16 பேர்கொண்ட அணி, மலையகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இரண்டு கட்சிகள், முஸ்லிம் கட்சியொன்றும் பேச்சு நடத்தப்பட்டுள்ள கட்சிகளின் பட்டியலில் உள்ளடங்கும். புதிய கூட்டணிக்கு மேற்படி கட்சிகள் இணக்கம் தெரிவித்தன.

ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்கள் நால்வர் என்னுடன் பேசினர். இணைவதற்குரிய விருப்பத்தை வெளியிட்டனர். கூட்டு எதிரணியுடன் இன்னும் பேசவில்லை. பேச வேண்டியுள்ளது. அந்தக் கூட்டணியில் ஒழுக்கம் என்பது இல்லை. பேச்சு நடத்தாமல் இருப்பதற்கு இதுவும் ஒரு காரணமாகும்.

நாட்டின் நலன்கருதி எம்மிடம் ஐந்து யோசனைகள் இருக்கின்றன. எந்தத் தலைவருடன் மதிப்பாகக் கதைக்க முடியுமோ, கோரிக்கைகளை முன்வைக்கக் கூடியதாக இருக்குமோ அவரை தலதா மாளிகைக்கு முன்னால் அழைத்துச்செல்வோம். 5 ஆயிரம் பிக்குகளும் அங்கு ஓரணியில் திரண்டிருப்பார்கள். எவராக இருந்தாலும், நாம் ஆதரவளிக்கப்போகும் வேட்பாளரை தலதா மாளிகையின் முன் மண்டியிட வைத்து சத்தியம் வாங்குவோம்.

ஐந்து கோரிக்கைகளும் நிறைவேற்றப்படுமென்ற உறுதிமொழியை அவர் எழுத்துமூலம் தந்த பின்னரே அரசியல் பயணம் தொடரும். இதுதான் எமக்குள்ள இறுதிச் சந்தர்ப்பமாகும், என்றார் எல்லே குணவன்ச தேரர்.

அதேவேளை, 2015ஆம் ஆண்டு நடைபெற்ற அரச தலைவர் தேர்தலின்போது மகிந்த ராஜபக்சவுக்கு எதிராக பொது வேட்பாளராகத் தற்போதைய அரச மைத்திரிபால சிறிசேன களமிறக்கப்பட்டார். அரசியல் கட்சிகள், சிவில் அமைப்புகளென அனைத்து சக்திகளையும் ஓரணியில் திரட்டும் முயற்சியில் மறைந்த சோபித தேரர் இறங்கினார். அதேபாணியில்தான் எல்லே குணவன்ச தேரர் 2020ஆம் ஆண்டு தேர்லை குறிவைத்துள்ளார். முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச மிகவும் நெருக்கமான தேரர்களுள் இவரும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது. (5)

## வலி. வடக்கில்...

கள் என்பன சில தினங்களில் விடுவிக்கப்படவுள்ளதாகத் தெரியவருகின்றது.

மாவிட்டபுரம் கந்தசாமி கோவிலிலிருந்து சில நூறு மீற்றர்கள் தொலைவில், வலி. வடக்கு உயர் பாதுகாப்பு வலயம் ஆரம்பமாகியிருந்தது. காங்கேசன்துறை வீதியின் கரையோரமாக, அந்தப் பகுதியில் இராணுவத்தினர் தொடர்ந்தும் நிலை கொண்டிருந்தனர்.

33 ஏக்கர் நிலப்பரப்பை விடுவிக்கும் முகமாக, அந்தப் பகுதியில் அமைக்கப்பட்டிருந்த வேலிகளை அகற்றும் நடவடிக்கைகளில் பாதுகாப்புத் தரப்பினர் ஈடுபட்டுள்ளனர். இந்தப் பகுதியினுள், நல்ல நிலையில் சுமார் 16 வீடுகள் வரையில் காணப்படுகின்றன. 40 குடும்பங்களுக்குச் சொந்தமான காணியும் இதனூடாக விடுவிக்கப்படவுள்ளது. (5,105)

## தூக்கப்பட்டார்...

யும்வரை அந்தக் குழு பதவியில் இருக்கும். இடைக்கால நிர்வாகக்குழு எனக் கருதப்படும் இந்தக் குழுவின் ஆயுள்காலம் 45 நாள்களாகும்.

புதிய நிர்வாகத் தெரிவின் பிரகாரம் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் புதிய பொதுச் செயலராக பேராசிரியர் ரோஹன லக்ஷ்மன் பியதாச நியமிக்கப்பட்டுள்ளார்.

பொதுச் செயலராக பதவிவகித்த அமைச்சர் துமிந்த திசாநாயக்க தேசிய அமைப்பாளராகத் தெரிவாகியுள்ளார். பொதுச் செயலர் பதவியிலிருந்து அவரை நீக்குமாறு சுதந்திரக் கட்சியின் 16 பேர்கொண்ட அணி கோரிக்கை விடுத்திருந்தது. இந்த நிலையிலேயே நேற்று அவர் செயலர் பதவியைத் தாமாக முன்வந்து துறந்துள்ளார்.

சுதந்திரக் கட்சியின் நிறைவேற்றுச் சபை மற்றும் அகில இலங்கை செயற்குழு ஆகியன அரசதலைவர் மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் நேற்று முற்பகல் கொழும்பு அப்பேகம வளாகத்தில் கூடியது. கட்சியின் எதிர்கால நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக புதிய நிர்வாகக் குழு இதன்போது தெரிவுசெய்யப்பட்டது.

கட்சியின் தலைவராக மீண்டும் அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவுசெய்யப்பட்டுள்ளார். கட்சியின் பொதுச் செயலராக பேராசியர் ரோஹன லக்ஷ்மன் பியதாச தெரிவு செய்யப்பட்டார்.

கட்சியின் தேசிய அமைப்பாளராக அமைச்சர் துமிந்த திசாநாயக்கவும் பொருளாளராக நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான எஸ்.பி.திசாநாயக்கவும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

கட்சியின் மூத்த உப தலைவர்களாக அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, அமைச்சர் டபிள்யு.டி.ஜே.செனவிரத்ன, அநுர பிரியதர்சன யாப்பா, சுசில் பிரேமஜயந்த ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

மேலும் சுதந்திரக் கட்சியின் உப தலைவர்களாக ஏ.எச்.எம்.பௌசி, சரத் அமுனுகம, மகிந்த அமரவீர, தயாசிறி ஜயசேகர, ரெஜினோல்ட் குரே, பியசேன கமகே, விஜித் விஜயமுனித டி சொய்ஸா, மகிந்த சமரசிங்ஹ, டிலான் பெரேரா, தென் மாகாண முதலமைச்சர் சான் விஜயலால் டி சில்வா, நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் ராமநாதன் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

புதிய உப செயலாளர்களாக அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய, மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க, வடமேல் மாகாண முதலமைச்சர் தர்மசிறி தஸநாயக்க, மேல் மாகாண முதலமைச்சர் இசுரு தேவப்பிரிய, ஊவா மாகாண முதலமைச்சர் சாமர சம்பத் தஸநாயக்க, பிரதியமைச்சர் லசந்த அழகியவன்ன, முன்னாள் பிரதியமைச்சர் சுதர்சினி பெர்னாண்டோபுள்ளே, சுமேதா ஜீ. ஜயசேன ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

சுதந்திரக் கட்சியின் தற்போதுள்ள அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் மையச் செயற்குழு உறுப்பினர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர். (5)

## மாகாண...

கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் 3 மாகாண சபைகளின் ஆயுள் காலம் நிறைவடைந்தது. எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 3 மாகாண சபைகளின் ஆயுள் காலம் நிறைவடையவுள்ளது. மாகாண சபைத் தேர்தலை 50 இற்கு 50 என்ற அடிப்படையில் கலப்பு முறையில் தேர்தல் நடத்துவதற்கு மாகாண சபைத் திருத்தச் சட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டிருந்தது. உள்ளூராட்சித் தேர்தல் கலப்பு முறையில் நடத்தப்பட்டிருந்தது. கலப்பு முறையால் பெரும்பாலான சபைகளில் தொங்கு ஆட்சியே ஏற்பட்டிருந்தது. மாகாண சபைத் தேர்தலை பழைய முறையிலேயே நடத்தவேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டிருந்தது. இதனால் மாகாண சபைத் தேர்தல் எப்போது நடைபெறும் என்று தெரியாத நிலையே இருந்து வந்தது. இவ்வாறானதொரு நிலையிலேயே அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, ஆயுள் காலம் முடிந்த மாகாண சபைகளுக்கு இந்த ஆண்டு இறுதிக்குள் தேர்தல் நடைபெறும் என்று அறிவித்துள்ளார்.

மேலும், ஐக்கிய தேசியக் கட்சியுடன் அரசியல் கூட்டணி வைத்துக்கொண்டதன் காரணமாகவே சிறிலங்கா சுதந்திரக் கட்சி உள்ளூராட்சி தேர்தல்களில் தோல்வியை சந்தித்தது. இது குறித்து அனைவரும் சிந்திக்கவேண்டும். அனைத்துக் கட்சிகளும் உட்கட்சி மோதல்களால் பாதிக்கப்பட்டுள்ளன. எந்தக் கட்சியும் உள்கட்சி மோதலால் பாதிக்கப்படவில்லை என்று எவரும் தெரிவிக்க முடியாது. சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் அதன் ஆரம்பகாலத்திலிருந்து இதன் காரணமாக பாதிக்கப்பட்டுள்ளது' என்றும் அரச தலைவர் மைத்திரிபால தெரிவித்தார். (5)

## நிறைவேறிய...

வடக்கு மாகாண எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா தான் சமர்ப்பித்துள்ள பிரச்சினையாக, கடந்த கால ஒருங்கிணைப்புக் கூட்டங்களில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களுக்கு என்ன நடந்தது, அவற்றுக்கு என்ன முடிவு காணப்பட்டுள்ளது என்ற கேள்வியை எழுப்பியுள்ளது. இந்த விடயம், இன்றைய ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டு ஆராயப்படவுள்ளது. (5)

## மனிதாபிமான...

ஈடுபடும் மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

வடமராட்சி கிழக்கு கடற்பரப்பில் கடலட்டை பிடிப்பில் ஈடுபடும் மீனவர்கள், வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கத்தை நேற்று மாலை திடீரெனச் சந்தித்தனர். யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில், இன்று நடைபெறும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இந்த விவகாரம் தொடர்பில் பேசப்படவுள்ள நிலையில் நேற்றைய தினம் இந்தச் சந்திப்பு, வல்வெட்டித்துறையில் நடைபெற்றுள்ளது.

இங்குள்ள உள்ளூர் சங்கங்களுக்கு பல லட்சம் ரூபா பணம் கொடுத்துள்ளோம். அவர்களின் படகுகளுக்கும் பெருமளவு பணம் கொடுத்துள்ளோம். இவ்வாறு பணத்தை வாரியிறைத்துத்தான் தொழில் செய்கின்றோம். பருத்தித்துறை சமாசத்துக்கு உட்பட்ட இரண்டு சங்கங்களுக்கும் பணம் கொடுத்துள்ளோம். எனவே எமக்கு கால அவகாசம் தாருங்கள். நாங்கள் தென்னிலங்கை மீனவர்கள் இல்லை. வடக்கின் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த, மீனவர்கள்தான். எனவே எங்கள் பிரச்சினையை மனிதாபிமானத்துடன் அணுகுங்கள் என்று, அவர்கள் வடக்கு மாகாண சபை உறுப்பினரிடம் கோரிக்கை விடுத்தனர்.

'அவர்களுடைய கருத்துக்கள் செவிமடுக்கப்பட்டுள்ளன. அவை தொடர்பில் அனைவருடன் கலந்துரையாடி தீர்வு எட்டப்படும்' என்று சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

வடமராட்சி கிழக்கில் சட்டவிரோதமான முறையில் கடலட்டை பிடிப்பில் வெளிமாவட்ட மீனவர்கள் ஈடுபடுவது தொடர்பாக ஆராயும் கூட்டம் வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதன் பின்னர், வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், ச.சுகிர்தன், கடற்றொழில் சங்கப் பிரதிநிதிகள் ஆகியோர், வாடி அமைத்துள்ள மீனவர்களைச் சந்தித்து, கடலுக்குள் இறங்கக் கூடாது என்று தெரிவித்திருந்தனர். இந்த நிலையிலேயே, வாடி அமைத்துள்ள மீனவர்கள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் சிவாஜிலிங்கத்தை நேற்றுச் சந்தித்துள்ளனர். (5,26,114)

## சட்டவிரோதமாக...

கடந்த ஒரு மாதத்தினுள் மாத்திரம் இவ்வாறு தாயகம் திரும்பிய 24பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

போர் சூழல் காரணமாக இங்கிருந்து தமிழகத்துக்குத் தப்பிச் சென்ற ஈழஏதிலிகள் தற்போது நாடு திரும்பி வருகின்றனர். சிலர், அங்கிருந்து சட்டவிரோதமாக படகுகளின் ஊடாக இலங்கைக்கு வருகின்றனர்.

கடந்த மே மாதம் 5ஆம் திகதி 9 பேரும், 16ஆம் திகதி 4 பேரும், கடந்த 29ஆம் திகதி மன்னார் கடற்பரப்பில் வைத்து 6 பேரும் கைது செய்யப்பட்டிருந்தனர்.

காங்கேசன்துறைக் கடற்பரப்பில் நேற்றைய தினம் 5 ஈழஏதிலிகள் கைது செய்யப்பட்டனர். அவர்களுடன் படகோட்டிகள் இருவரும் கைது செய்யப்பட்டனர். தொண்டமனாற்றைச் சேர்ந்த தம்பதியர் அவர்களின் 4 வயதுக் குழந்தை, திருகோணமலையைச் னசேர்ந்த பெண், குருநாகல் பகுதியைச் சேர்ந்த ஆண் ஒருவர் என்று 5ஏதிலிகள் கைதாகினர்.

இந்தியாவிலிருந்து இவர்களை ஏற்றி வந்த படகு இலங்கை கடல் எல்லையில் பழுதடைந்ததாகவும், அதன் பின்னர் பருத்தித்துறையைச் சேர்ந்த படகோட்டிகளின் உதவியுடன் இலங்கைக் கடற்பரப்புக்குள் வந்தாகவும், பொலிஸ் விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (5,26,114)

## பிணைமுறி...

2015ஆம் ஆண்டு பெப்ரவரி முதல் 2016 ஆம் ஆண்டு மார்ச் 31 வரையான காலப்பகுதிக்குள் இடம்பெற்ற மோசடியை விசாரிக்கும் அதிகாரமே அரச தலைவரால் நியமிக்கப்பட்ட முதலாவது ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்டிருந்தது. பிணைமுறி மோசடியின் பிரதான சூத்திரதாரியாகக் கருதப்படும் அர்ஜுன மகேந்திரன், 2016ஆம் ஆண்டு ஜீலை மாதம் வரை மத்திய வங்கி ஆளுநராகப் பதவி வகித்துள்ளார். 2017ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31ஆம் திகதி வரையான காலப்பகுதியும் விசாரிக்கப்பட வேண்டும் என்பதற்காகவே புதிய விசாரணை ஆணைக்குழு கோரப்பட்டுள்ளது.

ஊழல் எதிர்ப்புக்குழுவின் ஊடகவியலாளர் மாநாடு நேற்று முற்பகல் கொழும்பில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே முன்னணியின் ஏற்பாட்டாளர் வசந்த சமரசிங்க மேற்கண்டவாறு கோரினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

நாட்டில் எழுந்துள்ள பிரச்சினைகள் தொடர்பில் எந்தத் தரப்புடனும் நேரில் கலந்துரையாடுவதற்கு நான் தயாராகவே இருக்கின்றேன் என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன அண்மையில் அறிவித்திருந்தார். பிணைமுறி விவகாரம் தொடர்பில் அரச தலைவரை நேரில் சந்தித்துக் கலந்துரையாடுவதற்கு ஊழல் எதிர்ப்புக்குழு தயாராகவே இருக்கின்றது. இதற்கான நேரத்தை ஒதுக்கித் தருமாறு கோரி அரச தலைவருக்கு கடிதம் அனுப்பிவைக்கப்படும்.

கடிதத்தில் நான்கு காரணிகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. பிணைமுறி மோசடி தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக நியமிக்கப் பட்டஆணைக்குழுவுக்கு 2015ஆம் ஆண்டு பெப்ரவரி முதல் 2016ஆம் ஆண்டு மார்ச் 31 வரையான காலப்பகுதியை மட்டுமே விசாரிக்கும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

பிணைமுறி மோசடியால் 2016ஆம் ஆண்டு ஏப்ரல் முதலாம் திகதி முதல் செப்ரெம்பர் 30ஆம் திகதி வரையான காலப்பகுதியில் அலோசியஸின் நிறுவனம் 6 ஆயிரத்து 816 மில்லியன் ரூபா இலாபமீட்டியுள்ளது. 2016 ஆம் ஆண்டு ஏப்ரல் முதலாம் திகதிமுதல் 2017ஆம் ஆண்டு மார்ச் 31ஆம் திகதி வரையான காலப்பகுதி குறித்து விசாரிக்க இரண்டாவது அரச தலைவர் ஆணைக்குழுவை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

பிணைமுறி விசாரணை அறிக்கையில் 106 பக்கங்கள் வெளியிடப்படவில்லை. அவற்றிலுள்ள விவரங்களை நாட்டுக்குப் பகிரங்கப்படுத்தவேண்டும்.

பிணைமுறி மோசடியால் 2015ஆம் ஆண்டு பெப்ரவரி முதல் 2016ஆம் ஆண்டு மார்ச் 31ஆம் திகதிவரை 11 ஆயிரத்து 500 மில்லியன் ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளது. இழந்த தொகையில் பெரும்பகுதி ஊழியர் சேமலாப நிதியத்துக்குரியதாகும். அந்தத் தொகையை மீளப்பெற அரச தலைவர் தலையீடு செய்ய வேண்டும்.

காசோலை பெற்றுள்ள 166 பேரின் விவரங்கள் வெளிப்படுத்தப்படவேண்டும். மேற்படி காரணங்கள் தொடர்பில் அரச தலைவருடன் பேச்சு நடத்த எமது குழுவின் தேசிய நிறைவேற்றுக்குழு உறுப்பினர்கள் தயாராகவே இருக்கின்றனர். திகதியை அரச தலைவர் வழங்கவேண்டும் என்றார்.

அதேவேளை, 2005ஆம் ஆண்டுமுதல் இடம்பெற்றதாகக் கூறப்படும் பிணைமுறி மோசடி தொடர்பில் விசாரிக்க தனியானதொரு ஆணைக்குழுவை அமைக்குமாறும் அவர் கோரிக்கை விடுத்தார். (5)

## செல்லப்...

வளர்த்த செல்லப் பிராணியான நாயைப் பிரிய மனமில்லாமல் அதனையும் கொண்டு வந்தனர். நாயும் காங்கேசன்துறைப் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது. (5,26,114)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரணடைந்தோர் பட்டியல் பணியகத்திடம் இல்லை

கொழும்பு, ஜூன் 4

போரின் இறுதிக் கட்டத்தில் படையினரிடம் சரணடைந்தவர்களின் பெயர்ப் பட்டியல் எமது பணியகத்திடம் இல்லை, என்று காணாமற்போனோர் பணியகத்தின் தலைவர் சாலிய பீரிஸ் தெரிவித்தார்.

காணாமற்போனோருக்கான பணியகத்தின் மூன்றாவது பொது அமர்வு நேற்றுமுன்தினம் முல்லைத்தீவில் நடைபெற்றது.

முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் இந்த அமர்வு இடம்பெற்றபோது செயலகத்துக்கு வெளியே காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

காணாமற்போனோருக்கான பணியகத்தின் மீது தமக்கு நம்பிக்கையில்லை என்றும், படையினரிடம் சரணடைந்தவர்களின் பட்டியலை முதலில் வெளியிடுமாறும் தெரிவித்தனர்.

இவர்களுடன் பேச்சு நடத்திய காணாமற்போனோருக்கான பணியகத்தின் தலைவர் சாலிய பீரிஸ், எழுத்துமூலம் கோரிக்கை விடுத்தால் போரின் இறுதிக் கட்டத்தில் சரணடைந்தவர்களின் பட்டியலை வெளியிடமுடியும் என்று கூறினார் என்று செய்திகள் வெளியாகின.

இதையடுத்து பலரும் பட்டியலை அவரிடம் கேட்டுள்ளனர். இது தொடர்பில் கருத்து வெளியிட்ட சாலிய பீரிஸ், ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட உறவினர்களை நான் சந்தித்தேன். எழுத்துமூலம் கோரிக்கையொன்றை விடுத்தால், படைத்தரப்புடன் பேசிப் பார்க்கலாம்



எனக் கூறினேன். எம்மிடம் பட்டியல் இருப்பதாகக் கூறவில்லை. இது தொடர்பில் தவறாகக் கருத்து வெளியிடப்பட்டுள்ளது - என்றார். (5)

# அ.இ.ம.க. எம்.பி. ஆகிறார் இஸ்மாயில்

கொழும்பு, ஜூன் 4

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக முன்னாள் தென்கிழக்குப் பல்கலை உபவேந்தர் கலாநிதி எஸ்.எம்.எம். இஸ்மாயில் நியமிக்கப்படவுள்ளதாக அறியமுடிகின்றது.

கடந்த சில நாள்களுக்கு முன்னர் நாடாளுமன்ற உறுப்பினர் நவவி பதவி விலகியதைத் தொடர்ந்து ஏற்பட்ட வெற்றிடத்துக்கு எவர் நியமிக்கப்படுவார் என்று பலரும் எதிர்பார்த்தவண்ணம் உள்ள நிலையில், இந்தப் பதவி எஸ்.எம்.எம். இஸ்மாயிலுக்கே வழங்கப்படுமென நம்பத்தகுந்த வட்டாரங்களிலிருந்து அறியமுடிகின்றது.

இந்த நாடாளுமன்ற உறுப்பினர் பதவியால் சில நாள்களாக அமைச்சர் ரிசாத் பதியுதீன் எதுவித உத்தியோகபூர்வ அறிக்கைகளும் விடுக்காத நிலையில், பலராலும் பல்வேறுபட்ட கருத்துகள் சோடிக்கப்பட்டதுடன், அம்பாறையில் ஏற்கனவே 4 முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருக்கின்ற நிலையில், இந்தப் பதவி எந்த மாவட்டத்துக்கு வழங்கப்படும் என்று எதிர்பார்ப்பே பலரிடமும் இருந்துவந்தது.

அமைச்சரின் நம்பத்தகுந்த வட்டாரங்களின் தரப்புகளிலிருந்து இந்த நாடாளுமன்ற உறுப்பினர் பதவி கலாநிதி எஸ்.எம்.எம்.இஸ்மாயிலுக்கே வழங்கப்படுமென உறுதியாகியுள்ளது.

இவ்வாறு வழங்கப்படும் உறுப்பினர் பதவியின் மூலம் சம்மாந்துறைக்கு மொத்தமாக இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருப்பர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (5)

## சித்திரவதை:

# முறைப்பாடுகளை தூசு தட்டுகிறது ஆணைக்குழு

கொழும்பு, ஜூன் 4

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவால் கிடப்பில் போடப்பட்ட சித்திரவதைகள் தொடர்பான ஆயிரக்கணக்கான முறைப்பாடுகள் தொடர்பில் மீளாய்வுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று ஆணைக்குழுவின் தலைவர் கலாநிதி தீபிகா உடகம தெரிவித்தார்.

கொழும்பு ஆங்கில ஊடகத்துக்கு வழங்கிய செவ்வியில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

காணாமல் ஆக்கப்பட்டோர் மற்றும் சித்திரவதைகள் தொடர்பான முறைப்பாடுகள் பல ஆயிரக் கணக்கில் ஆணைக்குழுவுக்கு கிடைத்தன. அவை ஏழு தொடக்கம் எட்டு ஆண்டுகள் கடந்தவை. சில அதற்கு மேற்பட்ட காலப் பகுதியைக் கொண்டவை.

2014ஆம் ஆண்டுவரை கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டுக் கோவைகள் ஆயிரக் கணக்கில் குவிந்துள்ளன. அலுவலகத்தைச் சுத்தப்படுத்த பணிக்கு அமர்த்தப்பட்ட பணியாளர்களால் அவை மீட்கப்பட்டுள்ளன.

2014ஆம் ஆண்டுக்குப் பின்னர் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் தொடர்பில் ஆணைக்குழு ஆராய்ந்து வருகிறது. காணாமல் ஆக்கப்படுதல், தடுப்புக் காவல் சித்திரவதை, தடுத்துவைத்தல் மற்றும் காரணமின்றிய கைதுகள் ஆகியன இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவால் பெறப்படுகின்ற பொதுவான முறைப்பாடுகளாகும்.

காணாமற்போனோர் அலுவலகம் நிறுவப்பட்ட பின்னர், காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான முறைப்பாடுகள் அந்த அலுவலகத்தால் விசாரணை நடத்தப்படும். மனித உரிமைகள் மீறல்கள் தொடர்பான முறைப்பாடுகளை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவே கையாளும் - என்றார். (5)

## புலிகளின்

# ரூ. 1,500 கோடி சொத்துக்கள் அரசுடைமை!

கொழும்பு, ஜூன் 4

தமிழீழ விடுதலைப் புலிகளுக்குச் சொந்தமான ஆயிரத்து 500 கோடி ரூபா பெறுமதியான பொருள்கள் மற்றும் சொத்துக்கள் அரசுடைமையாக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கட்டுநாயக்க வானூர்தி நிலையத்துக்கு அருகில் காணப்பட்ட காணி, வெள்ளவத்தையிலுள்ள சுகபோக வீட்டுத் தொகுதி, கொழும்பு ஜம்பட்டா வீதியிலுள்ள நவீன அச்சகம், கருவாத்தோட்டத்திலுள்ள காணி, பல படகுகள் உட்பட வங்கிக் கணக்குகளும் இதில் அடங்குவதாக குறிப்பிடப்படுகின்றது.

பயங்கரவாத ஒழிப்புப் பிரிவினரால் இந்தச் சொத்துக்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது. புலிகளின் சொத்துக்களைத் தேடி வடக்கு மற்றும் கிழக்கில் அகழ்வுப்பணிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (5)

# 2019இல் மூன்று கட்டமாக பட்டதாரிகளுக்கு நியமனம்

கொழும்பு, ஜூன் 4

அரச சேவையில் பட்டதாரிகளை இணைத்துக் கொள்வதற்கான வயதெல்லை 45 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது என்று தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகார அமைச்சின் செயலர் கே.டி.எஸ் ருவன் சந்திர தெரிவித்தார்.

இந்த புதிய நடைமுறைக்கு அமைய பட்டதாரிகள் அனைவரும் 2019ஆம் ஆண்டில் மூன்று கட்டங்களாக அரச சேவைக்குள் இணைத்துக் கொள்ளப்படுவர் என்று அவர் சுட்டிக்காட்டினார்.

அரச சேவையில் பட்டதாரிகளை இணைத்துக் கொள்வதற்கான வயதெல்லை 35 ஆக மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. அரச வேலையில் பட்டதாரிகளை இணைப்பதற்கான வயதெல்லையை 45ஆக அதிகரிக்குமாறு வேலையற்ற பட்டதாரிகள் கோரிக்கை முன்வைத்தனர். அதற்கமைய வயதெல்லையை 45ஆக உயர்த்துவதற்கு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க அமைச்சரவைக்கு முன்வைத்த யோசனைக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

5 ஆயிரம் பட்டதாரிகள் அடுத்த மாதமும் 15 ஆயிரம் பட்டதாரிகள் வரும் செப்ரெம்பரிலும் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்கான பயிற்சியாளர்களாக நியமிக்கப்படவுள்ளனர். 2019ஆம் ஆண்டில் மூன்று கட்டங்களில் பட்டதாரிகளை அரச சேவைகளில் இணைத்துக் கொள்வதற்கான நடவடிக்கைகள் தற்போதே முன்னெடுக்கப்பட்டுள்ளன - என்றார். (5)

# கொள்ளையடிப்பதே ராஜபக்சாக்களின் கொள்கை

## சாடுகிறார் சரத் பொன்சேகா



கொழும்பு, ஜூன் 4

மக்களின் பணத்தைக் கொள்ளையடிப்பதும் அந்தப் பணத்தைக் கொண்டு சுகபோக வாழ்க்கை வாழ்வதும் அரசியல் செய்வதும் தான் ராஜபக்சாக்களின் அரசியல் கொள்கையாக இருந்ததென வன பாதுகாப்பு அமைச்சர் பீல்ட் மார்சல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, தற்போது சிலர் எப்படியாவது ஆட்சிக்கு வந்தவிட வேண்டும் என்று தீவிரமாக முயற்சிக்கிறார்கள். இதற்காக சில உறுப்பினர்களுக்கு பணத்தையும் சலுகைகளையும் கொடுத்து தமது பக்கம் எடுத்துக் கொள்ள வேண்டும் என்றும் முயற்சித்து வருகிறார்கள். இவற்றுக்கு நாம் ஒருபோதும் இடமளிக்கப்போவதில்லை.

கடந்த கால ஆட்சியாளர்கள் எல்லாம் கொள்ளைக்காரர்கள் என்பதை அனைவரும் அறிவார்கள். இது இரகசியம் இல்லை. முன்னாள் அரச தலைவரின் செயலாளர் இதற்காக சிறையிலும் இருந்தார். முன்னாள் பாதுகாப்புச் செயலர் தமது பெற்றோரின் கல்லறையைக் கட்டவும் நகர அபிவிருத்தி அதிகார சபையிலிருந்து 91 மில்லியன் ரூபாவைக் கொள்ளையடித்தார். போருக்குச் செலவு செய்ததாகக்கூட பொய்யான கணக்குகள் இந்தத் தரப்பினரால் காட்டப்பட்டுள்ளன. இவ்வாறானவர்கள் கொள்ளையடித்தார்கள் என்பது மேல் மட்டத்திலிருந்து கீழ் மட்டம் வரை அனைவரும் அறிவார்கள்.

அந்த அரசில் அனைவரும் கொள்ளையடித்தார்கள். எமது அரசு அவ்வாறான கொள்கையில் பயணிக்கவில்லை. நாம் தவறு செய்துள்ளோம் என்பதை ஏற்றுக் கொள்கிறோம். ஆனால், கொள்ளையர்களுக்கு எதிராகச் சட்டத்தை நிலைநாட்டுவோம் என்று தான் அரச தலைவர் வாக்குறுதியளித்திருந்தார். அவர் உறுதியாக மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார். (5)

# பிரதி சபாநாயகர் பதவிக்கு சுதர்சினியின் பெயரும் பரிந்துரை

கொழும்பு, ஜூன் 4

நாடாளுமன்றத்தின் பிரதி சபாநாயகர் பதவிக்கு சுதர்சினி பெர்னாண்டோபுள்ளேயின் பெயரும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இதற்குப் பெரும்பாலான உறுப்பினர்கள் ஆதரவு தெரிவித்துள்ளதால் அந்தப் பதவி அவருக்கே வழங்கப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

நாடாளுமன்றம் சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் நாளை பிற்பகல் ஒரு மணிக்குக் கூடவுள்ளது. இதன்போதே பிரதி சபாநாயகர் தெரிவு இடம்பெறவுள்ளது.

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக கூட்டு எதிரணியால் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களித்த சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் 16 பேரும், ஆளுங்கூட்டணியில் தாம் வகித்த பதவிகளைத் துறந்து வெளியேறினர். பிரதி சபாநாயகர் பதவியை திலங்க சுமதிபாலவும் துறந்தார்.

வெற்றிடத்துக்கு நாடாளுமன்ற உறுப்பினர் முஹபூர் ரஹ்மானை நியமிக்குமாறு ஐக்கிய தேசியக் கட்சி கோரிக்கை விடுத்திருந்தது. பிரதி சபாநாயகரை நியமிப்பதற்குரிய கட்டளை அரச தலைவரிடமிருந்து தமக்கு இன்னும் வரவில்லையென சபாநாயகர் அறிவித்தார்.

சுதந்திரக் கட்சியின் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனின் பெயரை பிரதி சபாநாயகர் பதவிக்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி பரிந்துரைத்தது.

இதேவேளை கூட்டு எதிரணி சுதர்சினி பெர்னாண்டோ புள்ளேயைப் பரிந்துரைத்துள்ளது. இருப்பினும், கூட்டு எதிரணி தனியான கட்சியாக இல்லாமையினால், நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜனே பிரதி சபாநாயகராகத் தெரிவு செய்யப்படுவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பயங்கரவாதச் சட்டம் நாட்டுக்கு அவசியம்

## வலியுறுத்துகிறார் சரத் வீரசேகர

கொழும்பு, ஜீன் 4
பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் மூலமே நாட்டின் சமத்துவம் ஒற்றுமை போன்றவற்றை நிலையாகப் பேண முடியும். பயங்கரவாத தடைச்சட்டம் ஒழிக்கப்பட்டால் நாட்டின் சமத்துவம் சீர்குலையும் என்று அட்மிரல் சரத்வீரசேகர தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது.
இலங்கையில் 30 ஆண்டு காலமாக நிலவிய போர் நிலமைகளின் போது மக்களின் உயிர்கள் காவு கொள்ளப்பட்டன. மக்களின் சொத்துக்கள் அபகரிக்கப்பட்டன. அந்த நிலமைகளிலிருந்து மக்கள் மீண்டுவருவதற்கு பயங்கரவாதத் தடைச் சட்டம் ஆறுதலாக அமைந்தது. பயங்கரவாதத் தடைச் சட்டம் ஒழிக்கப்படவேண்டுமென்ற விடயத்தை ஏற்றுக் கொள்ள முடியாது.
தமிழீழ விடுதலைப் புலிகள் நாட்டை ஆக்கிரமிக்கும் நோக்கிலே போரிட்டனர். போர் முடிவடைந்த பின்னரும் அவர்களது நோக்கங்கள் முடிவுறவில்லை. நாட்டை இரண்டாகப் பிரித்துத் தனி ஈழத்தை உருவாக்குவது விடுதலைப் புலி இயக்கத்தின் ஆதரவாளர்களின் தற்போதைய அரசியல் நோக்கமாகக் காணப்படுகின்றது.
தற்போது அரசியலில் உள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் ஈழத்தைப் பிரித்து தனியாட்சியையே கோருகின்றனர். தனியாட்சி பெற்றுகொள்ள அரசியல்வாதிகள் முயற்சிக்கும்போது நாட்டில் தற்போது காணப்படும் அமைதி சீர் குலைவதற்கு இது முழுக் காரணமாக அமைந்துவிடும். அரசியல் வாதிகளின் நாட்டைப் பிரிக்கும் எண்ணங்களுக்கு இது வாய்ப்பாக அமைந்துவிடும்.
இந்தத் தடைச் சட்டமானது இலங்கையின் மனித உரிமைகளைப் பாதுகாத்து வருகின்றது. போர்க் காலத்தில் மக்கள் கடுமையாகப் பாதிப்படைந்தனர். அதுபோன்ற மனித உரிமைகளுக்கு ஏற்படும் அச்சுறுத்தல்களைத் தவிர்த்துக் கொள்வதற்கு பயங்கரவாதத் தடைச்சட்டம் பலமாக அமைந்தது. அந்நிய அமைப்புக்களின் சதிகளிலிருந்து மக்களின் உரிமைகளைப் பேண வேண்டுமானால் பயங்கரவாதத் தடைச்சட்டம் ஒழிக்கப்படக் கூடாது - என்றார். (5,31)

# ஆறு கடக்கும் மட்டும் அண்ணன் தம்பி ஆறு கடந்த பின்பு நீ யாரோ நான் யாரோ

## காலம் முழுவதும் தமிழர்களின் கண்ணீர்க் கதை இதுதான் என்கிறார் தமிழ் அரசுவின் செயலர்

*மட்டக்களப்ப, ஜூன் 4*
*இந்த நாட்டிலே சுதந்திரம் பெற்றதைத் தொடர்ந்து வந்த எல்லா நிலமைகளிலும் நாங்கள் ஒடுக்கப்பட்டிருக்கின்றோம். நாங்கள் ஏமாற்றப்பட்டிருக்கின்றோம்.*

எமது தலைமைகள் ஏமாற்றப்பட்டிருக்கின்றனர். ஆறு கடக்கும் மட்டும் அண்ணன் தம்பி ஆறு கடந்த பின்பு நீயாரோ நான் யாரோ என்பதுதான் தமிழ் மக்களின் கண்ணீர்க்கதையாக இருக்கின்றது என்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பொதுச்செயலரும், கிழக்கு மாகாண முன்னாள் விவசாய அமைச்சருமாகிய கிருஸ்ணபிள்ளை துரைராசசிங்கம் தெரிவித்தார்.
சித்தாண்டி சிகண்டி அறக்கட்டளையின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை இடம்பெற்ற கலைமுற்றம் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது.
இந்த நாட்டிலே தமிழர்கள் மிகச் சிறப்போடும் சீரோடும் வாழ்ந்திட்டவர்களாக இருக்கின்றார்கள். நாட்டினுடைய அரசியலிலே மிகச் சிறந்த இடத்தை நம்முடைய தமிழர்கள் பெற்றிருக்கிறார்கள். ஆசிய நாட்டிலேயே சேர் பட்டம் பெற்ற முதலாவது ஒரு தமிழரே திகழ்ந்திருக்கின்றார். ஒரு காலத்தில் முழுப்பெரும்பான்மை மக்களும் சேர்ந்து ஒரு படித்த தமிழ்த் தலைவரை உருவாக்கிய பெருமை எமக்கு உண்டு. 1912ஆம், 1916ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற அரசவைத் தேர்தலில் சிங்களத் தலைவர்கள் இருக்கையில் தமிழ் தலைவரான சேர்.பொன்.இராமநாதனை மக்கள் தெரிவு செய்திருந்தனர்.
சேர்.பொன்.இராமநாதனும், சேர்.பொன்.அருணாசலமும் இந்த நாட்டுக்கு முழுமையான சுதந்திரம் வேண்டும் என்கின்ற விடயத்தை சிங்களத் தலைவர்களுக்கு ஊட்டி அதன் மூலம் இந்த நாடு சுதந்திரம் பெற வேண்டும், சுதேசியம் வளர வேண்டும் என்ற எண்ணத்தை, அரசியல் விதையை சிங்களத் தலைவர்களுக்கு ஊட்டி வளர்த்தவர்கள்.
தேசிய காங்கிரஸ் என்கின்ற அமைப்பை உருவாக்கி அனைத்து தலைவர்களையும் ஒருங்கிணைத்தார்கள். இந்த நாட்டினுடைய மக்கள் தங்களின் சுயாட்சியைப் பெற வேண்டும் என்றால் எல்லோரும் ஒருங்கிணைந்து அதற்காகப் பாடுபடவேண்டும் என்று சொன்னார்கள். ஆனால் ஆறு கடக்கும் மட்டும் அண்ணன் தம்பி ஆறு கடந்த பின்பு நீயாரோ நான் யாரோ என்பது தான் தமிழ் மக்களின் கண்ணீர்க் கதையாக இருக்கின்றது என்பது அடுத்த கட்ட நகர்வுகளில் இருப்பதை நாங்கள் காண்கின்றோம்.
எந்த மக்கள் எல்லாம் தங்களுடைய தலைவராக சேர்.பொன்.இராமநாதன், சேர்.பொன்.அருணாசலம் அவர்களை எடுத்துக் கொண்டார்களோ அதே சிங்களத் தலைவர்கள் பிரதேசவாரிப் பிரதிநிதித்துவம் ஒன்று வருகின்ற போது கொழும்பில் தமிழ் மக்கள் செறிந்து வாழும் பிரதேச தேர்தல் தொகுதியை தமிழர் ஒருவருக்கு தருவதாக வாக்களித்துவிட்டு இறுதியில் கைவிட்டுவிட்டார்கள். தேர்தல் மனு கச்சேரியில் தாக்கல் செய்வதற்குப் போகின்ற நேரத்தில் சிங்களத் தலைவர்கள் சிங்களவர் ஒருவரை அதற்காக நியமித்தார்கள். இதிலிருந்துதான் தமிழருக்கும் சிங்களவருக்குமான அரசியல் விரிசல் ஏற்பட்டது.
எனவே தான் சேர்.பொன்.அருணாசலம் யாழ்ப்பாணம் சென்று தமிழர்கள் ஏகாதிபத்தியத்தோடு வாழ வேண்டும் என்றால் பெரும்பான்மை மக்களோடு சேர்ந்து நாங்கள் எமது உரிமையைப் பெற்றுக்கொள்ள முடியாது நாங்கள் தனித்துவமாக இருந்து எங்களுடைய அரசியல் உரிமையைப் பெற வேண்டும் என்ற பாங்கிலே தான் தமிழர் மகாசபை ஒன்றை ஏற்படுத்தினார்.
அன்றிலிருந்து இந்த நாட்டிலே சுதந்திரம் பெற்றதைத் தொடர்ந்து வந்த எல்லா நிலமைகளிலும் நாங்கள் ஒடுக்கப்பட்டிருக்கின்றோம். நாங்கள் ஏமாற்றப்பட்டிருக்கின்றோம். எமது தலைமைகள் ஏமாற்றப்பட்டிருக்கின்றனர். ஆகமொத்தத்தில் சொல்லப்போனால் சிங்களத் தலைவர்களுக்குத் தலைவர்களாக இருந்தவர்களுக்கு ஏகாதிபத்திய பிரிட்டன் ஆட்சியை ஒழிப்பதற்கு வழிகாட்டியவர்களான எங்களுடைய தலைவர்களைத் தூக்கி வீசிவிட்டவர்கள். இந்த நாட்டின் பெரும்பான்மைத் தலைவர்கள் என்கின்ற அதே நேரத்தில் தமிழர்கள் தங்களுக்குரிய அரசியற் பலத்தை நாங்கள் ஒன்று சேர்வதன் மூலம் தான் பெற்றுக் கொள்ள முடியும் என்கின்ற விடயத்தை எமக்குக் காட்டியவர்களும் எமது சேர்.பொன்.இராமநாதன், சேர்.பொன்.அருணாசலம் ஆகியோர்தான்.
இந்த அடிப்படையில் இருந்து கலைகள், மொழி, இனம், பிரதேசம் பாதுகாக்கப்பட வேண்டும் என்றால் எமது முன்னோர்கள் வழியில் நின்று நாங்கள் தமிழர்கள் என்ற வகையிலே ஒன்றிணைந்து வாழ்வதன் மூலம் தான் இந்த நாட்டிலே தமிழர்களுடைய இருப்பைக் காப்பாற்ற முடியும். அதன்மூலம் தான் எமது கலை, கலாசாரம், மொழி, இனம் என்பவற்றைக் காப்பாற்ற முடியும், இல்லையென்றால் கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதைபோல எமது இனத்தின் கதை மாறிவிடும் - என்றார். (5)





நன்றி : ஒப்சேவர்

# அர்ஜுன் மகேந்திரன், அர்ஜுன் அலோசியஸ் இருவரிடமும் பணம் பெற்றோர் விவரம் இல்லை

## அரச தலைவர் செயலகம் அறிவிப்பு

மத்திய வங்கிப் பிணைமுறி ஊழலுடன் தொடர்புபட்டுள்ள பேர்பச்சுவல் ட்ரசரிஸ் நிறுவனத்திடம் 118 நாடாளுமன்ற உறுப்பினர்கள் பணம் பெற்றுக்கொண்டதாக எந்தவொரு ஆவணமும் இல்லை எனவும் மத்திய வங்கி விவகாரத்தில் தொலைபேசி அழைப்புகள் மேற்கொண்ட தகவல்கள் மட்டுமே மறைக்கப்பட்ட ஆவணத்தில் உள்ளதாகவும் அரச தலைவர் செயலகம் அறிவித்துள்ளது.
அர்ஜுன மகேந்திரன் மற்றும் அர்ஜுன் அலோசியஸுடன் தொலைபேசி உரையாடல்களை மேற்கொண்ட அரசியல் வாதிகளின் பெயர்ப் பட்டியலை நாடாளுமன்றத்தில் சபாநாயகர் நாளை வெளியிடவுள்ளார்.
மத்திய வங்கிப் பிணைமுறி ஊழலுடன் தொடர்புபட்டுள்ளதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ள அர்ஜுன் அலோசியஸின் பேர்பச்சுவல்ட்ரசரிஸ்நிறுவனத்திடம் இருந்து பணம் பெற்றுக் கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் 118 நபர்களின் பெயர்ப் பட்டியல் அரசதலைவர் ஆணைக் குழுவின் மறைக்கப்பட்ட அறிக்கையில் உள்ளதாகக் கடந்த காலங்களில் தொடர்ச்சியாக விமர்சிக்கப்பட்டு வந்த நிலையில் சபாநாயகர் கரு ஜயசூரிய அந்த ஆவணங்களைத் தமக்கு வழங்குமாறு அரச தலைவரின் செயலர் ஒஸ்டின் பெர்னாண்டோவுக்கு கடிதம் மூலமாக அறிவித்திருந்தார். பேர்பச்சுவல் ட்ரசரிஸ் நிறுவனத்தில் இருந்து பணம் பெற்றுக்கொண்டதாக குறிப்பிடத்தக்க வகையில் எவரது பெயர்களும் இல்லை எனவும் மத்திய வங்கிப் பிணைமுறிகளுடன் தொடர்புபட்ட ஆவணங்களே அவ்வாறு உள்ளதாகவும் அரச தலைவர் செயலகத்தில் இருந்து அறிவிக்கப்பட்டுள்ளது.
மறைக்கப்பட்ட அறிக்கை எனக் கூறப்படும் பக்கங்களில் தொலைபேசி அழைப்புக்கள், யார் அழைப்புக்களை எடுத்தனர், எங்கிருந்து தொலைபேசி அழைப்புக்கள் பெறப்பட்டுள்ளன, உரையாடப்பட்ட கால எல்லை, திகதி என்ற விடயங்கள் மட்டுமே பதிவாகியுள்ளன. இவற்றை வெளியிடுவது குறித்து சட்டமாஅதிபர்திணைக்களத்தின் அனுமதியைக் கோரியுள்ளேன். அனுமதி கிடைத்தால் சகல தகவல்களையும் வெளியிட முடியும் என்று அரச தலைவரின் செயலர் குறிப்பிட்டிருந்தார்.
இந்த நிலையில் சபாநாயகர் கரு ஜயசூரிய விடுத்திருந்த கோரிக்கைக்குப் பதில் கிடைக்கப்பெற்றுள்ள நிலையில் தமக்கு வழங்கப்பட்டுள்ள தகவல்களின் பிரகாரம் தொலைபேசி அழைப்புக்கள் தொடர்பான விவரங்களை தான் பெற்றுக்கொண்டுள்ளதாகவும் நாடாளுமன்ற அமர்வுகள் நாளை நடைபெறவுள்ள நிலையில் அன்றைய தினமே உரிய பெயர் விவரங்களை நாடாளுமன்றத்தில் வெளியிடவுள்ளதாகவும் தெரிவித்தார். (5,31)

# 20ஆவது திருத்தம் தொடர்பில் தீர்மானம் இல்லை - ஐ.தே.க.

கொழும்பு, ஜீன் 4
மக்கள் விடுதலை முன்னணியினால் முன்வைக்கப்பட்டுள்ள 20ஆவது திருத்தச் சட்ட வரைவு தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு உடனடியாக எதனையும் கூற முடியாது என்று அந்தக் கட்சியின் பொதுச் செயலர் அகில விராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.
அரசமைப்பு மாற்றம் தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சி தற்போது ஆய்வு செய்து வருவதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார். (5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சர்வாதிகாரத்தை நோக்கி நகர்கின்றதா நாடு?

*இராஜாங்க அமைச்சர் பெரேரா கேள்வி*

நாட்டில் மீளவும் சர்வாதிகாரத்தை உருவாக்க முயற்சிக்கப்படுகிறதா என்று இராஜாங்க அமைச்சர் நிரோசன் பெரேரா கேள்வி எழுப்பியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

கடந்த ராஜபக்ச அரசு வெட்கமின்றி, இராணுவத் தலைமையகத்தை விற்பனை செய்தது. வெள்ளைவான் கலாசாரம், இனந்தெரியாத துப்பாக்கிதாரிகள் கலாசாரம் மற்றும் கடும்போக்கு வாத சக்திகள் வியத் மக என்ற அமைப்பின் ஊடாக தலை தூக்கினால் அதன் பின்னணியில் உள்ள பயங்கர சர்வாதிகாரியும் தலைதூக்கக் கூடும்.

2020ஆம் ஆண்டில் மீளவும் ஆட்சி அதிகாரத்தைக்கைப்பற்றவியத் மக அமைப்பின் ஊடாக முயற்சிக்கப்படுகின்றது. இடதுசாரி கொள்கைகளைப்பின்பற்றுவதாகக் கூறிக்கொள்ளும் ராஜபக்ச தரப்பு உண்மையில் அவ்வாறு கிடையாது- என்றார். (5)

# கோத்தாவை காப்பாற்றும் உயர்மட்டம்?

கொழும்பு, ஜூன் 4

முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச கைது செய்யப்படுவதில் இருந்து நீதித்துறையின் உயர்மட்டத்தினால் காப்பாற்றப்படுவதாகச் சந்தேகங்கள் எழுப்பப்பட்டுள்ளன.

மிக் போர் வானூர்திக் கொள்வனவு மோசடி உள்ளிட்ட பல்வேறு வழக்குகளில் தம்மைக் கைது செய்வதற்கு முயற்சி மேற்கொள்ளப்படுவதாகவும், அதற்குத் தடை விதிக்குமாறும் கோரி, உயர் நீதிமன்றத்தில் கோத்தபாய ராஜபக்ச அடிப்படை உரிமை மீறல் மனு தாக்கல் செய்திருந்தார்.

இந்த வழக்கு 2015ஆம் ஆண்டு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, கோத்தபாய ராஜபக்சவை இந்த வழக்கு முடியும் வரை கைது செய்வதற்கு, நீதியரசர் ஈவா வனசுந்தர, சிசிர ஆப்ரு ஆகியோரைக் கொண்ட அமர்வு இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பித்தது.

இந்த இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்ட பின்னர், நீதியரசர் ஈவா வனசுந்தர, வழக்கு தொடர்பான விசாரணையில் இருந்து விலகினார்.

அதையடுத்து, ஒவ்வொரு தவணையிலும் இந்த வழக்கு விசாரிக்கப்படும் போது, நீதியரசர்களான, புவனேக அலுவிகார, பிரசன்ன ஜெயவர்த்தன ஆகியோர் விலகினர். கடைசியாகக் கடந்தவாரம், நீதியரசர் முர்து பெர்னான்டோ இந்த வழக்கில் இருந்து விலகிக் கொண்டார்.

இதனால், கோத்தபாய ராஜபக்சவின் மனு மீதான விசாரணை நவம்பர் 27ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கை விசாரிக்கும் நீதியரசர்கள் அடுத்தடுத்து விலகுவதும், வழக்கு விசாரணை நீண்ட காலத்துக்கு பிற்போடப்படுவதும், கோத்தபாய ராஜபக்சவை கைது செய்யப்படுவதில் இருந்து காப்பாற்ற உயர்மட்ட முயற்சிகள் முன்னெடுக்கப்படுகிறதா என்ற சந்தேகங்களை எழுப்பியுள்ளது. (5)



## அமெரிக்க -இலங்கை வான்படை அதிகாரிகள் உயர்மட்டப் பேச்சு

கொழும்பு, ஜூன் 4

அமெரிக்க -இலங்கை வான்படைகளுக்கு இடையிலான பேச்சுக்கள் அண்மையில் கொழும்பில் இடம்பெற்றுள்ளதாக, அமெரிக்காவின் இந்தோபசுபிக் கட்டளைப் பீடத் தகவல்கள் தெரிவிக்கின்றன. மே மாத நடுப்பகுதியில் இரண்டு நாட்கள் இந்த உயர்மட்டப் பேச்சுக்கள் இடம்பெற்றுள்ளன.

வான் படைத் தலைமையகத்தில் நடந்த இந்தப் பேச்சுக்களில், அமெரிக்காவின் இந்தோபசுபிக் கட்டளைப் பீடத்தைச் சேர்ந்த வான் படை அதிகாரிகளும், இலங்கை வான்படை அதிகாரிகளும் பங்கேற்றனர்.

இது அமெரிக்க -இலங்கை வான் படை அதிகாரிகளுக்கு இடையிலான இரண்டாவது சுற்றுப் பேச்சுக்களாகும்.

இந்தப் பேச்சுக்களில் ஓடுபாதை நடவடிக்கைகள், விநியோகம், பாதுகாப்பு, மருத்துவம், போன்ற துறைகளில், நிபுணத்துவம் பெற்ற ஏழு அமெரிக்க வான்படை அதிகாரிகள், இலங்கை வான்படை அதிகாரிகளுடன் கலந்துரையாடினர். பிராந்திய பாதுகாப்பு, இரண்டு நாடுகளினதும் வான்படையினருக்கான எதிர்காலப் பயிற்சி வாய்ப்புக்கள், ஒத்திகைகள் குறித்தும் இந்தப் பேச்சுக்களின் போது கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

அமெரிக்க தரப்பு குழுவுக்கு பசுபிக் வான்படைத் தளபதியின், வான் தேசிய பொலிஸ்படை உதவியாளர் மேஜர் ஜெனரல் ஜேம்ஸ் ஓ எய்பேர்ட் தலைமை தாங்கினார். பசுபிக் வான் படையின் பன்னாட்டு உறவுகளுக்கான பிரிவின் தெற்காசியப் பிரிவுக்கான பணிப்பாளர், மேஜர் மார்ச் லீசரும் இந்தப் பேச்சுக்களில் பங்கேற்றார்.

இந்தப் பேச்சுக்கள் தொடர்பாகக் கருத்து வெளியிட்ட மேஜர் ஜெனரல் ஜேம்ஸ் ஓ எய்பேர்ட், இந்தியப் பெருங்கடலில் இலங்கை மிக முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் அமைந்திருக்கிறது. இலங்கையுடன் நாம் பலமான உறவுகளை வைத்துக் கொள்வதற்கு இது முக்கியமான காரணம்.

இந்தப் பேச்சுக்கள் மிகவும் வெற்றிகரமாக அமைந்துள்ளன.

இலங்கை வான்படை தமது தேவைகள், முன்னுரிமைகள் தொடர்பான தகவல்களை பரிமாறி, மிகச் சிறந்த பணியை மேற்கொண்டது. இது அவர்களை இந்தோ பசுபிக் கட்டளை பீடத் தலைமையகத்துக்கு மீண்டும் அழைத்து வர எமக்கு உதவியாக உள்ளது.

இது அமெரிக்க- இலங்கை உறவுகளை முன்னேற்றுவதற்கு சிறந்த வாய்ப்பாக அமைந்தது, என்று கூறினார். இந்தப் பேச்சுக்களில், பெறுமதியான தகவல்களைப் பகிர்ந்து கொள்வதற்கும், பிணைப்பை வலுப்படுத்திக் கொள்வதற்குமான முடிவுகளும் எடுக்கப்பட்டுள்ளன. (5)

## முட்டுக்கட்டை பற்றி எதுவும் தெரியாது!

*கைவிரித்த சீனப் பேச்சாளர்*

கொழும்பு, ஜூன் 4

இலங்கை தனது பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதற்கும் மக்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்றுவதற்கும் தனது சுய அபிவிருத்தித் திறனை அதிகரிப்ப தற்கும் சீனா தன்னால் முடிந்தளவு உதவிகளை வழங்குகின்றது என்று சீனாவின் அயலுறவுத்துறை அமைச்சின் பேச்சாளர் குவா சன்யிங் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையில் சுதந்திர வர்த்தக உடன்படிக்கையை ஏற்படுத்தும் நடவடிக்கைகள் தொடர்பாகக் கருத்து வெளியிடும் போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டிருக்கிறார்.

இலங்கையின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதில் சீனாவின் பங்கு குறித்து பேசிய அவர், இலங்கையும் சீனாவும் மூலோபாய ஒத்துழைப்பு சகாக்கள். எப்போதும் இரு நாடுகளும் ஒருவருக்கு ஒருவர் நேர்மையான உதவிகளை வழங்கியுள்ளோம்.


இலங்கை தனது பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதற்கும் மக்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்றுவதற்கும் தனது சுய அபிவிருத்தித் திறனை அதிகரிப்பதற்கும் சீனா தன்னால் முடிந்தளவு உதவிகளை வழங்குகின்றது. இதனை இலங்கை அரசும் மக்களும் பாராட்டியுள்ளனர்.

இலங்கையுடான நட்புறவு ஒத்துழைப்பு உறவுகளுக்குச் சீனா முக்கியத்துவம் அளிக்கின்றது இலங்கையுடன் தொடர்ந்தும் ஒத்துழைக்க விரும்புகின்றது என்றும் அவர் குறிப்பிட்டி ருந்தார்.

இதேவேளை, இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையில் சுதந்திர வர்த்தக உடன்படிக்கையை ஏற்படுத்தும் நடவடிக்கைகள் முட்டுக்கட்டை நிலையை அடைந்துள்ளமை குறித்து எழுப்பப்பட்ட கேள்விக்கு பதில் வழங்கிய அவர், இலங்கையுடனான சுதந்திர வர்த்தக உடன்படிக்கைக்கான பேச்சுக்களில் தடங்கல் ஏற்பட்டுள்ளமை குறித்து தமக்கும் தெரியாது என்று தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (5)

## சட்டம் ஒழுங்கு அமைச்சை இனி ஏற்கமாட்டேன்

*சரத் பொன்சேகா தெரிவிப்பு*



கொழும்பு, ஜூன் 4

சட்டம், ஒழுங்கு அமைச்சர் பதவியை இனிமேல் வழங்க முன்வந்தாலும், தான் அதனை ஒருபோதும் ஏற்றுக் கொள்ளமாட்டேன் என்று தெரிவித்துள்ளார் முன்னாள் இராணுவத் தளபதியும், தற்போதைய அமைச்சருமான பீல்ட் மார்சல் சரத் பொன்சேகா.

தியபெதும பிரதேசத்தில் யானைகளால் ஏற்படும் பிரச்சினைகள் குறித்து ஆராயச் சென்ற சரத் பொன்சேகாவிடம், ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கே அவர் இவ்வாறு பதிலளித்துள்ளார்.

சட்டம் ஒழுங்கு அமைச்சர் பதவி சரத் பொன்சேகாவிடம் வழங்கப்படவுள்ளதாகச் செய்திகள் வெளியாகியிருந்த நிலையில், அண்மைய அமைச்சரவை மாற்றத்தின்போது அவருக்குப் பிராந்திய அபிவிருத்தி மற்றும் வன வாழ் உயிரினங்கள் அமைச்சுப் பதவியே வழங்கப்பட்டது. ஐக்கிய தேசியக் கட்சித் தலைமையினால் சட்டம் ஒழுங்கு அமைச்சர் பதவிக்கு சரத் பொன்சேகாவின் பெயர் பரிந்துரைக்கப்பட்ட போதும், அவருக்கு அந்தப் பதவியை வழங்க அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன மறுத்து விட்டார்.

இதனால் சரத் பொன்சேகா வெறுப்படைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (5)

## பொன்சேகாவின் அமைச்சு அலுவலக மாதாந்த வாடகை ரூ. 11.7 மில்லியன்

*11.7 மில்லியன் ரூபா வீதம் 5 ஆண்டுகள் குத்தகையாக 702 மில்லியன் ரூபா செலுத்தும் உடன்படிக்கைக்கு பெறப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.*

கொழும்பு, ஜூன் 4

அமைச்சர் பீல்ட் மார்சல் சரத் பொன்சேகாவின் பிரதேச அபிவிருத்தி மற்றும் வனவிலங்குகள் அமைச்சின் ராஜகிரிய அலுவலகக் கட்டடம் மாதம் 11.7 மில்லியன் ரூபா வீதம் 5 ஆண்டுகள் குத்தகையாக 702 மில்லியன் ரூபா செலுத்தும் உடன்படிக்கைக்கு பெறப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது. இந்தத் தகவலை சிங்கள ஊடகம் வெளியிட்டுள்ளது.

தனியார் நிறுவனத்தின் இந்தக் கட்டடத்தை 5 ஆண்டுகள் குத்தகை உடன்படிக்கையில் பிரதேச அபிவிருத்தி அமைச்சு 2016ஆம் ஆண்டு ஜூன் மாதம் 5ஆம் திகதி பெற்றுள்ளது. அதன் குத்தகைக் காலம் 2021ஆம் ஆண்டு மே 31ஆம் திகதி நிறைவடைகிறது. இந்தக் கட்டடம் பிரதேச அபிவிருத்தி அமைச்சராகப் பதவி வகித்த போது, சரத் பொன்சேகாவால் பெறப்பட்டுள்ளது.

கூட்டு அரசின் அண்மைய அமைச்சரவை மறுசீரமைப்பின் போது வனவிலங்குகள் அமைச்சும் பொன்சேகாவிடம் வழங்கப்பட்டது. இந்த நிலையில் இரண்டு அமைச்சுக்களும் இணைக்கப்பட்டுள்ளதால் வனவிலங்குகள் அமைச்சும், ராஜகிரியவிலுள்ள தனியார் கட்டடத்துக்கு மாற்றப்பட்டுள்ளது. (5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமண வாழ்த்து

## கோல்பேட் நிறோஜா தம்பதிகள்





இன்று 04.06.2018
திருக்குடும்ப ஆசீருடன்
திருமணம் என்னும்
அருட்கொடையில் இணையும்
கோல்பேட் நிறோஜா
தம்பதிகளை நிறைவாக
இறை ஆசீருடன்
இல்லற வாழ்வுக்குப்
பொருத்தமான
சகல வரங்களும்
அமையப்பெற்று
அன்பும் பண்பும்
பாசமும் புரிந்துணர்வும்
நிறையப்பெற்று என்றும்
அன்புடன்கூடிய இல்லறம்
அமைந்திட வேண்டி
இதய பூர்வமாக
வாழ்த்தி நிற்கின்றோம்.

ஸ்கார்பறோ (கனடா) விலிருந்து பாசத்துடன் வாழ்த்துவோர்,
ராகுலன் (பெரியமாமா), ஸ்ரெலா (அத்தை),
ஐசிந்தன் (அன்பு மச்சான்), கோவிகா (அன்பு மச்சாள்)

---

1985ம் ஆண்டிலிருந்து இன்று வரையானதொரு
தனித்துவமிக்க பயிற்சி நிலையம்

## யாழ் கலாலயா பயிற்சியகம்

விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். போதனா வைத்தியசாலை பின் புற வீதி)

**மகளிருக்கான 4 மாத பயன்மிகு பயிற்சிகள் ஆரம்பமாகின்றன!**

- *கேக் ஐசிங்* - றோயல், Parchment, Frosting, Fondant, Whipping Cream Icing, மாச்சீனி மலர்கள். (Sugar Flowers).
- *உணவு தயாரித்தல்* - உணவு வகைகள், 6 வகையான Cakes, Cup Cake மற்றும் பீஸா, சிற்றுண்டிகள் குளிர்பானங் கள், ஐஸ் கிறீம், புடிங் தயாரித்தல்.
- FACIALS *(முக அழகுக்கலை)* Pedicure, Manicure, Nail Art, கண் புருவம் சீராக்குதல் (Eye Brow Threading), தேவையற்ற முடிகளைஅகற்றுதல் (Waxing)
- *கூந்தல் வடிவமைப்புகளும் முடி சீராக்குதலும்* 40 வகையான கொண்டைகள் போடுதல், முடி அயன் செய்தல், முடி சுருட்டுதல், Hair Colouring, முடி வெட்டுதல், Hair Perming.
- BRIDAL DRESSINGS *(மணப்பெண் அலங்காரங்கள்)* இந்து, கிறிஸ்தவ இஸ்லாம் மணப் பெண் அலங்காரமும் Modern, கவர்க்காஸ், சிங்கப்பூர் குஜராத்தி, மடிசார், சிங்கள முறையிலான சேலை அணியும் முறைகள். முறைகளும் பயிற்று விக்கப்படும்.

**பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.**

- *பிளவ்ஸ், சாறி பிளவ்ஸ், சுரிதார்,* மற்றும் ஆடைகள் தைக்கும் சான்றிதழ் அற்ற கிழமை நாள் தையல் பயிற்சிகள்.

**சனி, ஞாயிறு புதிய பிரிவுகள் ஆரம்பம்**
**10-06-2018 ஞாயிறு காலை 10.00மணி**
**கிழமை நாள் புதிய பிரிவுகள் ஆரம்பம்**
**11-06-2018 திங்கள் காலை 10.00 மணி**

மேலும் விபரங்களை நேரில் அறிந்து கொள்ளலாம். -இயக்குநர்-

---

# கேள்வி அறிவித்தல்

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

கீழ்க்காணும் உணவகங்களை நடத்துவதற்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பதிவாளர் பணிமனையில் 18.06.2018 ஆம் திகதி முற்பகல் 10 மணிவரை பொறியிடப்பட்ட கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

| | |
|---|---|
| மருத்துவ பீட உணவகம் | திருநெல்வேலி |
| மருத்துவ மாணவர் விடுதி உணவகம் | யாழ்ப்பாணம் |
| இராமநாதன் விடுதி உணவகம் | மருதனார்மடம் |
| ஆனந்தகுமாரசாமி விடுதி உணவகம் | திருநெல்வேலி |
| பாலசிங்கம் விடுதி உணவகம் | திருநெல்வேலி |

மீளளிக்கப்படும் கேள்விவைப்புப் பணமாக ரூபா 2000/- உம் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 500/- உம் தனித்தனியாக மக்கள் வங்கியிலுள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கணக்கு இலக்கம் 162 - 1001 - 60000 - 880 இற்குச் செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டினைச் சமர்ப்பித்து கேள்விப் படிவங்களை இப்பல்கலைக்கழக நலச்சேவைகள் கிளையிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். மேற்குறிப்பிட்ட கேள்விப் படிவங்களில் அனுப்பப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் உணவகத்தின் பெயர் தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.

மேலதிக விவரங்களை அலுவலக நேரங்களில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நலச்சேவைகள் கிளையிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

**பதிவாளர்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.** (IN/6935)(11,17) 04.06.2018

---

உதயன் விளம்பர தொடர்புகளுக்கு advt@uthayan.com, 021 493 1111

---

# YICSD COLLEGE

YARL INTERNATIONAL COLLEGE OF SKILLS DEVELOPMENT

20% Special OFFER

புதிய பிரிவுகள் ஆரம்பம்

### அழகுக்கலை
- Diploma in Beauty Culture & Hairdressing
- Advance Dip in Beauty Culture & Hairdressing

### தையல்
- Certificate in Tailoring
- Diploma in Tailoring





### ஆரி எம்பிராய்டரி
- Certificate in Aari Embroidery
- Diploma in Aari Embroidery



### கேக் ஐசிங்
- Certificate in Cake Making & Decorating
- Diploma in Cake Making & Decorating



**சனி, ஞாயிறு 10/06/2018 அன்று 10.00 மணிக்கு**
**கிழமை நாள் 12/06/2018 அன்று 10.00 மணிக்கு**

மேலதிக விபரங்களுக்கும் பதிவுகளுக்கும் நேரில் வருகைதரவும்.

**இல.307 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
(கண்ணாதிட்டி சந்தி Rolex வெதுப்பகத்திற்கும் இடையில்)

---

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர் சிங்காரவேல் பாலச்சந்திரன்



திதி: 05.06.2018

மண்ணில் 23.10.1939
விண்ணில் 15.06.2017

அப்பா நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்து ஓராண்டு சென்றாலும்
உங்களுடன் இருந்த பசுமையான நினைவுகள்
எங்கள் உயிருள்ளவரை ஒருபோதும் மறவோம்
தங்களின் ஆத்மா சாந்தியடைய வேண்டுகின்றோம்

அன்னாரின் இல்லத்தில் நாளை (05.06.2018) செவ்வாய்க்கிழமை நடைபெறும் மதிய போசனத்தில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கின்றோம்.

[illegible]கை,
[illegible]டித்துறை.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், குடும்பத்தினர்.

**021 226 5275**

(IN 6912) (14,17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மறைந்த மாவட்டச் செயலர் கணேஸ் சிறந்த செயல்வீரன்

*அவரைப்போன்று இனிமேல் எமக்குக் கிடைப்பது அரிதுதான் என வவு. நகரசபை உறுப்பினர் சேனாதிராஜா இரங்கல்*

வவுனியா, ஜூன் 4
வவுனியா மாவட்ட முன்னாள் மறைந்த செயலர் க.கணேசைப் போன்ற செயல் வீரரான ஓர் அதிகாரி இனிமேல் எமக்குக் கிடைப்பது அரிதுதான். இவ்வாறு வவுனியா நகரசபை உறுப்பினர் நா.சேனாதிராயா தெரிவித்தார். வவுனியா நகரசபையில் அண்மையில் இடம்பெற்ற மாதாந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது :
மாவட்டச்செயலராக வவுனியாவுக்கு வருகை தந்த பொழுது மிகமிகக் கஸ்டமான காலத்தில் உயிர் அச்சுறுத்தலுக்கு மத்தியில் தனது சாதுரியக் குணத்தால் எந்தப் பிரச்சினையும் ஏற்படாமல் மக்களுக்குச் சேவையாற்றியவர்தான் கணேஸ். அந்த நேரத்தில் இரண்டு நிர்வாகத்தின் கீழ் வேலை செய்ய வேண்டிய காலம் வவுனியாவின் பெரும்பகுதி உட்பட மன்னார். முல்லைதீவு. கிளிநொச்சி, என்பன விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்தது. இது இராணுவக் கட்டுபாடற்ற பிரதேசமாக அழைக்கப்பெற்றது. அங்குள்ள பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு உணவு, உடை, பாடசாலை. உபகரணங்கள், புத்தகம், கொப்பி, மண்ணெண்ணெய் என அத்தியவசியப் பொருள்களை அனுப்ப வேண்டிய பொறுப்பு வவுனியா மாவட்ட செயலரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. மற்றும் மாணவர்களுக்கான சீருடை.. பரீட்சை வினாத்தாள்கள். விடைத்தாள்களை வவுனியாவுக்குக்கொண்டு வருதல்போன்றபணிகளுடன் அரசும். போராட்டக் குழுவினரதும் கட்டளையை நிறைவேற்ற வேண்டிய காலகட்டம். "ஏறச் சொன்னால் எருதுக்குகோபம் இறங்கசொன்னால் முடவனுக்கு கோபம்" என்ற நிலையில் மக்களைப் பட்டினிச் சாவில் இருந்து காப்பாற்ற வேண்டும். அதே வேளை இராணுவத்துக்கும் பதில் சொல்ல வேண்டும் . பொருள்களை அனுப்ப தாமதமானால் கச்சேரியில் வேலை செய்யவும் முடியாது. இரவில் நித்திரை கொள்ளவும் முடியாது. அவ்வளவு நெருக்குதல் வன்னியில் இருந்து வரும். அந்த நேரத்தில் நான் வவுனியா பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவராக இருந்த காரணத்தால் மேற்படி செயற்பாடுகளுக்கு நானும் முகம்கொடுக்க வேண்டி இருந்தது. இதனால் இவருடன் சேர்ந்து பல கஸ்ரங்களுக்கு மத்தியிலும் வேலை செய்ய வேண்டிய பொறுப்பில் நான் இருந்தேன். இவருடன் இணைந்துசேவையாற்றியவன் என்ற முறையில் இவர்தனதுகடமையைநிறைவேற்றுவதில் எவ்வளவு சிரமங்களையும் கஸ்டங்களையும் எமது மக்களுக்காகச்சுமந்தார் என்பதை நான் கற்றுக் கொண்டேன்.
அந்த நேரத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களோ, மாகாணசபை உறுப்பினர்களோ இல்லாத நிலையில் ஏனைய அதிகாரிகளுடனும் எங்களைப் போன்றோருடனும் கலந்து பேசி பயனுள்ள திட்டங்களை உருவாக்கி இன்று வவுனியா மக்கள் பயன் பெறச்செய்த பெருமகன் இவராவார். வடமாகாணத்தில் உள்ள மூன்று மாவட்டங்களிலும் தனது கடமைகளைச் சரிவரச் செய்து மங்காப்புகழைத் தேடிக் கொண்டவர் - என்றார். மறைந்த மாவட்டச் செயலர் கணேசின் நினைவு தினம் இடம்பெறவுள்ள நிலையில் இரங்கல் உரையாகவே அவர் தனது உரையை நிகழ்த்தினார் என்பது குறிப்பிடத்தக்கது. (21,110)

*பனம்பொருளிலான உற்பத்திகளை அதிகரிக்க*

# பனம்பொருள் உற்பத்தியாளர் அமைப்புக்களை கிராம மட்டங்களில் அமைப்பதற்கு நடவடிக்கை

**யாழ்ப்பாணம், ஜூன் 4**
**பனை அபிவிருத்திச் சபை பனம்பொருளிலான உற்பத்திகள் மற்றும் கைப்பணிப் பொருள்கள் போன்றவற்றின் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கில் பனம்பொருள் உற்பத்தியாளர் அமைப்புக்களை கிராம மட்டங்களில் அமைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.**

சபையின் இந்த ஆண்டுக்கான அபிவிருத்தி வேலைத் திட்டத்தின்போதுகிராமமட்டங்களில் உற்பத்திகளை ஒன்று சேர்த்து பனம்பொருள் உற்பத்திஅமைப்புக்கள் உருவாக்கப்படவும்உள்ளன.
கிராம மட்டங்களில் குறைந்தது இருபது பேர் கொண்ட குழுக்களை அமைத்து இதற்கான உற்பத்தியாளர் அமைப்புக்களை ஏற்படுத்த ஆர்வம் உள்ளவர்கள்முன்வரவேண்டுமென்றுபனைஅபிவிருத்திச் சபையின் விரிவாக்க முகாமையாளர்கே.கோபாலகிருஸ்ணன் தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
உற்பத்தியாளர்களால் அமைக்கப்படும்இந்தக்குழுக்களுக்குப்பனைஅபிவிருத்திச் சபை அதற்கான உதவிகளை வழங்கும். குறிப்பாக பனம் கைப்பணி மற்றும் பனம் பொருளிலான உற்பத்திகள் போன்றவற்றுக்கான பயிற்சிகள் வழங்கப்படும். பயிற்சியில் முதலில் உற்பத்திக்கான உபகரணங்கள் மற்றும் ஏனைய உதவிகளை சபை வழங்கும். பனம் பொருளிலானசகலஉற்பத்திகளையும் பனை அபிவிருத்திச் சபை அதிகரிக்கவுள்ளது. இதற்கான அபிவிருத்தி வேலைத்திட்டங்கள்யாவும்முன்னெடுக்கப்படவுள்ளன. இதன் முதற்கட்ட ஏற்பாடாககிராமமட்டங்களில் இந்தஉற்பத்தியை அதிகரிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளன. கடந்தகாலங்களில்சபையால் பனம் கைப்பணி உற்பத்திநிலையங்கள்அமைக்கப்பட்டுஅவற்றின்ஊடாகஉற்பத்தியாளர்கள் இணைக்கப்பட்டு அவர்களுக்குத்தொடர்ந்துஆறு மாதகாலத்துக்கு இதற்கான பயிற்சிகள் வழங்கப்பட்டன.
தற்போது புதிய வேலைத்திட்டத்தின்கீழ்கிராமமட்டங்களில் உற்பத்தியாளர்கள் ஒன்று சேர்ந்து அமைப்புக்களை ஏற்படுத்தி சபையுடன் தொடர்பு கொள்ளும் பட்சத்தில் அதற்கான சகல உதவித் திட்டங்களையும் சபை வழங்கும். பனம்உற்பத்திகளைஅதிகரிக்கவும் அதற்கான பயிற்சிகளைப்பெறஆர்வமுடையோர் சபையுடன் தொடர்பு கொள்ள முடியும் என்று கேட்கப்பட்டுள்ளது. அதேசமயம்கைதடியில் உள்ள சபையின் ஆராச்சிப் பிரிவினரால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள பனம் பொருளிலானஐஸ்கிறீம், யோக்கட், கேக் உட்பட ஏனைய உணவுப் பொருள்களின் தயாரிப்புக்களை, பயிற்சிகளை உற்பத்தியாளர்களுக்கு வழங்கவும் ஆராச்சிப் பிரிவு தயாராகவுள்ளது. இவ்வாறான சகல பனம் உற்பத்திப்பொருள்களுக்கான சகலபயிற்சிகளையும்உற்பத்தியாளர்கள் பெறுவதற்கு ஆர்வமாக இருந்ததால் அவர்கள் ஒன்று சேர்ந்து அதற்கான அமைப்புக்களை ஏற்படுத்தி சபையுடன் தொடர்புகொள்ள முடியும் - என்றார். (21,17)

## அன்னதானச் சான்றிதழை பெறுவதற்கு படையெடுக்கும் ஆலயங்களின் நிர்வாகத்தினர்

சாவகச்சேரி ஜூன் 4
ஆலயங்களின் நிர்வாகத்தினர் மற்றும் அன்னதானச் சமையல்களில்ஈடுபடுவர்கள் அண்மை நாள்களாகச் சுகாதாரத் திணைக்களங்களின் அலுவலகங்களுக்குப் படையெடுக்கின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. சாவகச்சேரி சுகாதாரத் திணைக்கள அலுவலகத்தில் இதனைக் காண முடிகிறது.
ஆலயங்களில்அன்னதானம் வழங்குவதாயின் சுகாதாரத் திணைக்களத்தின் அறிக்கையைப்பெற்றிருக்கவேண்டும் என்று சுகாதார அமைச்சு அறிவித்திருந்தது. இந்த நிலையிலேயே அவர்கள் சுகாதாரத்திணைக்கங்களுக்குச்சென்றுஅறிக்கைகளைப் பெறுகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.
வழிபாட்டுத்தலங்களில்இந்த வருடத்துக்கான திரு விழாக்கள் ஆரம்பமாகியுள்ளதால் அங்கு அன்னதானத்துக்குச் சமையலில் ஈடுபடுவோர், ஆலய நிர்வாகத்தினர் மருத்துவச்சான்றிதழ்பெறுவதற்கு வந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.
இதேவேளை, நிர்வாகத்தினரால் வழங்கப்படும் விண்ணப்பத்துக்கு அமைய பொதுச்சுகாதாரப்பரிசோதகர்கள் நேரில் சென்று பார்வையிட்டு சமையலுக்குப் பயன்படுத்தும்நீரைப்பார்வையிட்டு குளோரின் இட்டு, நோய் பரவாமல் பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொள்கின்றனர். உணவுகள்சமைக்கும் இடத்தையும் பார்வையிட்டு அறிக்கை சமர்ப்பிப்பதோடு, மருத்துவ அறிக்கையையும் சுகாதார அலுவலகங்கள் வழங்குகின்றன. அங்கு சமையலில் ஈடுபடுவோர் தொடர்பாக விசாரணைகள் மேற்கொள்ளப்படுகிறது.
அவர்களுக்கு நெருப்புக் காய்ச்சல்ஏற்படாதவாறுதடுப் பூசி ஏற்றப்பட்டுகிறது. (21, 9)



## நிதி நிறுவனங்களிடமிருந்து பெண்களை பாதுகாப்பது தொடர்பில் கலந்துரையாடல்

கிளிநொச்சி, ஜூன் 4
நுண்நிதிநிறுவனங்களிடமிருந்து வடக்கு மாகாணப் பெண்களைக் காப்பாற்றும் நோக்குடனான கலந்துரையாடால் ஒன்றுஅண்மையில்கிளிநொச்சியில் இடம்பெற்றது.
இந்த நிகழ்வு கிளிநொச்சி மாவட்ட அரசசார்பற்றமற்றும் சிவில் சமூக அமைப்புக்களின் சம்மேளத்தின் ஏற்பட்டில்கடந்தவியாழக்கிழமை கிளிநொச்சி நண்பர்கள் விடுதியில் காலை 10 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணிவரை இடம் பெற்றது.
நுண்நிதிக் கடன் செயற்பாட்டால் அசௌகரியங்களை எதிர்நோக்கும் தமிழ்ச் சமூகங்களைக் குறிப்பாகப் பெண்களை வலுவூட்டல் மற்றும் நுண்கடன் நிறுவனங்களின் செயற்பாடுகளைச் சமூக மேம்பாட்டு உணர்வுடன் செயற்படுத்தமத்தியவங்கி மற்றும் அரசுக்கு அழுத்தம் கொடுத்தல் தொடர்பான விடயங்கள் இந்தக் கலந்துரையாடலில் ஆராயப்பட்டன.
கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களின் சிவில் சமூக வலையமைப்பு. நல்லாட்சிக்கான பெண்கள் அமைப்பு, பெண்கள் ஒன்றியம். சுய உதவிக்குழுக்கள், கிராம மட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள் இதில் கலந்து கொண்டனர்.
நுண்கடனால் பெண்கள் படுகின்ற இன்னல்களில் இருந்துஇந்தச்சமூகத்தையும் பெண்களையும் காப்பாற்றுவதற்கான பல விடயங்கள் கலந்துரையாடலில் பகிரப்பட்டு தீர்மானங்களும் எடுக்கப்பட்டன.
இந்தச் செயற்பாட்டை முன்னெடுக்க மாவட்டரீதியாகப்பிரதிநிதிகளும்முன் வந்து ஒன்றிணைந்தார்கள் என்று தெரிவிக்கப்பட்டது. (21)

*நோயாளர்களின் நலன்கருதி சாவ. மருத்துவமனையில்*

## அலைபேசியைப் பயன்படுத்த பணியாளர்களுக்குக் கட்டுப்பாடு

*முன்னுதாரணம் என்றனர் மக்கள்*

சாவகச்சேரி, ஜூன் 4
சாவகச்சேரி ஆதார மருத்துவமனை வெளிநோயாளர் பிரிவு மற்றும்விடுதிகளில்கடமையாற்றும்பணியாளர்களின்அலைபேசி பாவனை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது என மருத்துவமனைப் பொறுப்பதிகாரி அறிவித்துள்ளார்.
பொறுப்பதிகாரியின் இந்த உத்தரவை மக்கள் வரவேற்றுள்ளனர். பணியாளர்கள் கடமை நேரத்தில் அலைபேசிகளில் உரையாடிதம்மைக்காக்கவைப்பதாகநோயாளர்கள்விடுத்த முறைப்பாட்டினையடுத்தே கடமை நேரத்தில் அலைபேசியில்உரையாடுவதைத்தவிர்த்துக்கொள்ளுமாறுபணியாளர்களுக்கு அவர் அறிவித்துள்ளார்.
மருத்துவமனையில்கடமையில் இருப்போர்அலைபேசியில் நீண்டநேரம் உரையாடுவதால் சிகிச்சை பெற வரும் நோயாளர்கள் நீண்ட நேரம் உரையாடல் முடியும் வரை காத்திருக்க வேண்டியுள்ளதென மருத்துவ அத்தியட்சகரிடம் முறைப்பாடு செய்திருந்தனர்.
கடமை நேரத்தில் அலுவலகத் தொலைபேசி மற்றும் சொந்த அலைபேசியில் பேசுவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறும் சிகிச்சை பெறவரும் நோயாளர்களுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் குறுகிய நேரத்தில் உரையாடுமாறும் மருத்துவமனைப்பொறுப்பதிகாரி மட்டுப்படுத்தியுள்ளார். பொறுப்பதிகாரியுடைய இந்த அறிவிப்பு மக்கள் மத்தியில் வரவேற்பைப் பெற்றுள்ளது. மக்களின் மனங்களைப்புரிந்தவர் அவர் என்று மக்கள் தெரிவித்திருந்தனர். (21, 9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ், முஸ்லிம் சமூகங்கள் அடக்கி ஆளப்படுகின்றன

### ஒற்றுமையாக இருப்பதே எமக்குப் பலம் என்று மாவை எம்.பி தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், ஜூன் 4**

**இந்த நாட்டில் அடக்கி ஒடுக்கப்பட்ட சமூகமாக தமிழ், முஸ்லிம் சமூகமே உள்ளது. அவை இன்றும் அடக்கி ஆளப்பட்டு வருகின்றது. தற்போதைய அரசிலும் இந்து, முஸ்லிம் ஆலயங்கள் தாக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. நாம் ஒற்றுமையாக இருப்பதே எமக்குப் பலமாகும் அதனைச் சிந்தித்துச் செயற்படுவோம் என்று நாடாளுமன்ற உறுப்பினரும், தமிழ் அரசுக் கட்சியின் தலைவருமான மாவை. சேனாதிராசா தெரிவித்தார்.**



யாழ்ப்பாண முஸ்லிம் மக்களின் சிறப்பு இப்தார் ஒன்றுகூடல் "சகவாழ்வே சக்தி தரும்" என்னும் தொனிப்பொருளில் நேற்று முன்தினம் சனிக்கிழமை யாழ்ப்பாணம் ரில்கோ விருந்தினர் விடுதியில் ஜனாப் அப்துல்கபூர்நௌபர்தலைமையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் விருந்தினராகக் கலந்துகொண்டு கருத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர்மேலும்தெரிவித்ததாவது: நாங்கள் இளைஞர்களாக இருந்த காலத்திலே யாழ்ப்பாணத்திலே முஸ்லிம் மக்கள் மிகவும் மதிப்பான வாழ்வுமுறையைக் கொண்ட சமூகமாக வாழ்ந்தார்கள். இலங்கையின் பல பாகங்களிலும் இருக்கின்ற முஸ்லிம்மக்களுக்குமுன்மாதரியானமக்களாகவும்அவர்கள் இருந்தார்கள். இப்போதுஇங்கே உரை நிகழ்த்திய மௌலவி அவர்கள் குறிப்பிட்ட இஸ்லாமியவிழுமியங்களைப்பின்பற்றுகின்றமக்களாகவேஅவர்கள் இருந்தார்கள். தந்தை செல்வா முஸ்லிம் மக்களை ஒரு தனித்துவமானசமூகமாகவேஅடையாளம் செய்தார்கள், அதற்காகவே அவர்களுக்கும் ஒருதனியான சுயாட்சி அலகு ஏற்படுத்தப்படவேண்டும் என்ற கருத்தைச் சொல்லிலும் செயலிலும் செய்துகாட்டினார். இப்போது தமிழ் முஸ்லிம் உறவு நலிவுற்றிருக்கின்றது. இதனைக் குழப்புவதற்குப் பல சக்திகள் முயற்சிக்கின்றன. ஆனால் இதற்கு நாம்இடமளிக்கக்கூடாது. தமிழ் மக்கள்ஒருதீர்வைஎதிர்பார்த்து முன்னோக்கிநகர்கின்றார்கள், இதனை முஸ்லிம் மக்கள் புரிந்துகொண்டிருக்கின்றார்கள், இன்னும் அதிகமான புரிந்துணர்வுகள் அவசியப்படுகின்றன. உலக நாடுகளிலே முஸ்லிம் மக்கள் பலவிதமான பிரச்சினைகளைஎதிர்நோக்கியிருக்கின்றார்கள், சிரியா, பர்மா போன்ற நாடுகளிலே இன்று நடப்பதை நாம் பார்க்கின்றோம், அன்று புத்தளத்தில் கலவரம் ஏற்பட்டது. அளுத்கம, கண்டிஎனஅதுதொடர்கின்றது. புத்தள முஸ்லிம்களுக்காக அன்று தந்தை செல்வா குரல் கொடுத்தார், இன்றும்முஸ்லிம் மக்களுக்காகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு குரல் கொடுக்கின்றது. அது எமது தார்மீகப் பொறுப்பாகும். இன்று உங்களைஎல்லாம்இந்தஇடத்திலே சந்திப்பது மிகுந்த மனமகிழ்வைத் தருகின்றது. தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் இவ்வாறு ஒற்றுமையாக இருப்பது காலத்தின் கட்டாயமாகவும் அமைந்திருக்கின்றதுஎன்றார்.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், வடக்கு மாகாணசபை உறுப்பினர்களான அய்யூப் அஸ்மின், எம்.கே.சிவாஜிலிங்கம், கஜதீபன், பரஞ்சோதி, ஜெயசேகரம் மற்றும் யாழ்ப்பாண மாநகர முதல்வர் இமானுவேல் ஆனோல்ட், உள்ளூராட்சிமன்றத் தவிசாளர்கள், உறுப்பினர்கள், வடக்கு மாகாண ஆளுநரின்செயலர், மாவட்டச்செயலர் உட்பட உயர் அதிகாரிகள், மற்றும் இந்திய உயர்ஸ்தானிக அதிகாரிகள், பொலிஸ் அதிகாரிகள், இராணுவ உயர் அதிகாரிகள், சமூக ஆர்வலர்கள், ஊடகவியலாளர்கள் எனப் பலரும் கலந்துசிறப்பித்தனர். (21)

## 7.5 மில்லியன் அமெரிக்க டொலர்களில் கிளியில் 13 பாடசாலைகள் அபிவிருத்தி

கிளிநொச்சி, ஜூன் 4

கிளிநொச்சி மாவட்டத்தின்13 பாடசாலைகளை அபிவிருத்தி செய்ய 'கொய்கா' நிறுவனம் 7.5 மில்லியன் அமெரிக்க டொலர்களை நன்கொடையாக வழங்குகின்றது என்று வடக்கு மாகாணக் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இது பற்றி மேலும் தெரிவிக்கப்பட்டதாவது: தென்கொரியாவின் 'கொய்கா' நிறுவனம் அபிவிருத்திச் செயற்றிட்டத்தின் மூலம் 7.5 மில்லியன் அமெரிக்க டொலர்களை கல்வி அமைச்சுக்கு நன்கொடையாக வழங்க முன்வந்துள்ளது.

இந்த நிதியானது முழுமையாகக் கிளிநொச்சி மாவட்டத்தின் பாடசாலைகளின் அபிவிருத்திக்கு மாத்திரமே பயன்படுத்தப்படவுள்ளது. கிளிநொச்சி மாவட்டத்தில் 13 பாடசாலைகள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

இதன்படிபளை, இத்தாவில், இயக்கச்சி, பூநகரி ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த கிளிநொச்சி இந்துஆரம்பப்பாடசாலை, பிரபந்தனாறு மகா வித்தியாலயம், இயக்கச்சி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, முழங்காவில் ஆரம்ப வித்தியாலயம்ஆகியநான்குபாடசாலைகளும் மாதிரிப் பாடசாலைகளாகவும் ,சென்.தெரேசா பெண்கள்கல்லூரி, கனகாம்பிகைக்குளம்அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, சிவ பாத கலையகம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, இராமநாதபுரம் (கிழக்கு) அரசினர் தமிழ்க்கலவன்பாடசாலை, பளை இந்துஆரம்பப்பாடசாலை, சோரன்பற்று இலங்கைகிறிஸ்தவதமிழ்க்கலவன்பாடசாலை, முக்கொம்பன் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, கரியாலைநாகபடுவான்அரசினர்தமிழ்க்கலவன் பாடசாலை, இரணைதீவு றோமன் கத்தோலிக்க கலவன் பாடசாலை ஆகிய ஒன்பது பாடசாலைகளும் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன. இந்த அபிவிருத்தித் திட்டத்தின் மூலம் பாடசாலைக் கட்டடங்கள் சீரமைப்பு ,சிறப்புத் தேவை உடையோருக்கான வகுப்பு உபகரணங்கள், ஆசிரியர்கள், அதிபர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், கல்விப் பணிப்பாளர்கள் ஆகியோருக்கானவெளிநாட்டுஉள்நாட்டுப்பயிற்சிகள், மாணவர் தொழில் வழிகாட்டல், கணினி தொழில்நுட்பம்ஆகியவிடயங்கள்முக்கியத்துவம் வழங்கப்பட்டு அபிவிருத்தி வேலைகள் நடைபெறவுள்ளன. இந்தத்திட்டத்துக்கு"கல்வி இயல் அளவை மேம்படுத்தும் செயல் திட்டம்" என்று பெயரிடப்பட்டுள்ளது. இதற்கான ஒப்பந்தம் மிக விரைவில் கைச்சாத்திடப்படவுள்ளது என்றுதெரிவிக்கப்பட்டது. (21,7)

## 14 இலட்சம் ரூபாவில் குடும்பத்தை தலைமைதாங்கும் பெண்ணுக்கு வீடு

யாழ்ப்பாணம், ஜூன் 4

பெண் தலைமைத்துவக் குடும்பம் ஒன்றுக்குப் பதினான்கு இலட்சம் ரூபா செலவில் வீடு ஒன்று அமைத்துக் கொடுக்கப்படவுள்ளது. மக்கள் நலன்பேணும் அமைப்பு இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது. குறித்த வீட்டுக்கு அடிக்கல் நடும் நிகழ்வு கடந்த மாதம் இடம்பெற்றது. வடக்கு மாகாணசபை உறுப்பினர்பா. கஜதீபன் அடிக்கல் நட்டுவைத்தார்.

இந்த நிகழ்வில் பேராசிரியர் க.தேவராசா, கொக்குவில் இந்துக் கல்லூரி ஆரம்ப பாடசாலை அதிபர் பே. தனபாலசிங்கம், கோண்டாவில் சி.சி.த.க பாடசாலை அதிபர் ந.சிவராணி, நல்லூர் பிரதேச சபை உறுப்பினர் கு.மதுசுதன் மற்றும் அமைப்பினர் கலந்து கொண்டனர்.

இதற்கான நிதிப்பங்களிப்பை எ கனடாவில் இருந்து தி. கேமநாதன் ஏற்பாட்டில் கு.தயானந்தன் தனது தந்தையின் ஞாபகார்த்தமாக வழங்கியுள்ளார் என மக்கள் நலன் பேணும் அமைப்பின் தலைவர் செ.ஜெகபாலன் தெரிவித்துள்ளார். (21)

### எமது சமூகம் போதையிலிருந்து விடுபட

# நாளை பிறக்கப்போகும் குழந்தைக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படவேண்டும்

### கெல்த்தி லங்கா நிறுவனத்தினர் தெரிவிப்பு

அளவெட்டி, ஜூன் 4

இனிவரும் சமுதாயம், நாளை பிறக்கப் போகும் குழந்தை உட்பட அனைவரும் போதைப் பொருளினால் ஏற்படும் பாதிப்பை உணரும் வகையில் மதுசாரம் மற்றும் போதைப் பொருள் தொடர்பாக இடம்பெறும் சமூக சீர்கேடுகளைப் புரிய வைத்தும், அவற்றை அணுகவிடாது சமூகத்திலிருந்து தூர எட்டாத இடத்துக்கு விரட்ட வேண்டும் என்பதை தெளிவுபடுத்தும் போது இதுவரை பாவித்தவர்கள் எதிர்காலச் சந்ததியினர் அதிலிருந்து விடுபடுவார்கள் என்பதில் ஐயமில்லை. அளவெட்டி தெற்கு, மேற்கு கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட பொது அமைப்புக்களின் உறுப்பினர்களுக்குப் போதைப் பொருள்பாவனைதொடர்பான விழிப்புணர்வுக் கருத்தமர்வு அளவெட்டி தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கக் கட்டடத்தில் அண்மையில் இடம்பெற்றது.

ஜே/219 கிராம அலுவலர் ந. உமாகாந்தன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் வளவான்களாக கெல்த்தி லங்கா நிறு வனத்தினர் கலந்து கொண்டு மதுசாரம், போதைப் பொருள் பாவனைக்கெதிரான நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பாக கருத்துக்களை வழங்கினர். இதன்போதே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது: தற்போதையஎமது அரசதலைவர் போதைப் பொருளை ஒழிப்பது தொடர்பான முக்கிய கொள்கையுடன் செயற்பட்டு வருகிறார். இம்முறை யாழ்ப்பாண மாவட்டத்தில் இரண்டு பிரதேச செயலகங்கள் இச்செயற்பாட்டுக்குத் தெரிவுசெய்யப்பட்டது. அதில்தெல்லிப்பழைப் பிரதேச செயலகமும் ஒன்று. இந்தப் பிரதேச செயலகத்தால் இரண்டு கிராம அலுவலர் பிரிவுதெரிவுசெய்யப்பட்டுள்ளது. அவை அளவெட்டி தெற்கு, அளவெட்டி மேற்குப் பிரிவுகளாகும்.

எனவே தான் இந்தக் கிராமங்களின் சமூகப் பிரதிநிதிகள் மூலம் கிராமத்தில் மதுசாரம் மற்றும் போதைப்பொருள் பாவனையிலிருந்து விடுபடுவதற்கும் எதிர்கால வளர்ந்து வரும் இளம் சந்ததியினர்களைப் போதையிலிருந்து தூர விடுவிப்பதற்கான வேலைத்திட்டங்களை நாம் மேற்கொள்ள வேண்டும்.

எனவேகிராமியமட்டப்பொதுஅமைப்புக்கள் எமக்கு ஒத்துழைப்பு வழங்கி சம்பந்தப்பட்ட போதைப் பொருள்களால் ஏற்படும் சமூகச் சீர்கேடுகளைஆரோக்கியமற்றஆழ்நிலைகளானபாவனையாளர்களுக்குஎடுத்துக்கூறுவதும் குறிப்பாக இனிவரும் சமுதாயம் நாளை பிறக்கப் போகும் குழந்தை உட்பட அனைவரும் போதைப் பொருளினால் ஏற்படும்பாதிப்பைஉணரும்வகையில்மதுசாரம் மற்றும்போதைப்பொருள் தொடர்பாக இடம் பெறும் சமூகச் சீர்கேடு களைப் புரிய வைத்தும் மதுசாரத்தையும் போதைப் பொருள்களைஅணுகவிடாதுஅவற்றைச்சமூகத்திலிருந்துதூர எட்டாத இடத்துக்கு விரட்ட வேண்டும் என்பதை தெளிவுபடுத்தும் போது இதுவரைபாவித்தவர்கள்எதிர்காலச்சந்ததியினர் அதிலிருந்து விடுபடுவார்கள் என்பதில் ஐயமில்லை. ஆகவே புதியவர்களை (வளரும் சந்ததியினர்) இதிலிருந்து பாதுகாப்பது கிராமத்தலைவர்கள்சமூகப்பற்றுள்ளவர்களின் பொறுப்பாகும். ஆகவே கிராமியமட்ட சமூக அமைப்புக்களின்மூலம்தான்விழிப்படையச் செய்யமுடியும்-என்றனர். (21,36)

## புதிய நியதிச் சட்ட வரைவு தயாரிக்கப்படுகிறது

கூட்டுறவுச்சங்கங்களின் பிரச்சினைகள் தொடர்பில் முடிவெடுத்தல், சங்கங்களின் நடவடிக்கைகளைச் சீரமைத்தல் போன்றவற்றுக்குப் புதிய நியதிச் சட்ட வரைபு தயாரிக்கப்பட்டு வருகிறது என்று மாகாணக் கூட்டுறவு அமைச்சர் அனந்தி சசிதரன் தெரிவித்தார்.

கிளிநொச்சி பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் அங்கத்தவர்கள் அண்மையில் மகளிர் விவகார அமைச்சர் அலுவலகத்தில் அமைச்சர் அனந்திசசிதரனைச் சந்தித்து சங்கத்தின் தற்போதைய நிலைபற்றி கலந்துரையாடியுள்ளனர். இதன் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: கூட்டுறவுச்சங்கங்கள் அங்கத்தவர்களின் வாழ்வாதாரத்தைக் கொண்டு செயற்பட வேண்டும். அதன் மூலம் ஒற்றுமையான நிலை ஏற்பட வேண்டும். அதற்கு அவர்களை வழிநடத்துவதற்குப் பொதுவான நடைமுறை ஒன்று அவசியம். ஆகவேசங்கங்களின்செயற்பாடுகளைச் சீரிய முறையில் நடத்துவதற்குப் புதிய நியதிச்சட்டம்வரையப்பட்டுவருகின்றது. அது நிறைவேற்றப்பட்டதும் இனிவரும் காலங்களில்நியதிச்சட்டத்தின் மூலம் சங்கங்களில்ஏற்படும்பிரச்சினைகளைச்சீர் செய்து சங்கங்களைச் சரியான முறையில்செயற்படுத்தமுடியும்-என்றார். (21,7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சபைச் செயலாளருக்கு எதிராக திட்டமிட்டே போராடுகின்றனர்

### ஏறாவூர் நகர சபை உறுப்பினர் எம்.எஸ்.சுபைர் தெரிவிப்பு

மட்டக்களப்பு, ஜூன் 4

ஏறாவூர் நகர சபையின் செயலாளரை இடமாற்றம் செய்வதற்காக மிகத் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டு வரும் ஆர்ப்பாட்டத்தின் பின்னணியில் முன்னாள் கிழக்கு முதலமைச்சர் இருக்கிறார்.



இவ்வாறு கிழக்கு மாகாண முன்னாள் அமைச்சரும், ஏறாவூர் நகர சபை உறுப்பினருமான எம்.எஸ். சுபைர் தெரிவித்தார்.

ஏறாவூர் நகர சபை செயலாளருக்கு எதிராக கடந்த சில தினங்களாக மேற்கொள்ளப்பட்டுவரும் ஆர்ப்பாட்டங்கள் தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

"உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் பின்னர் ஏறாவூர் நகர சபை, மக்கள் ஆட்சியின் கீழ் கொண்டு வரப்பட்டு சிறந்ததொரு நிர்வாக செயற்பாடுகள் இடம்பெற்றுக்கொண்டிருக்கும் சூழலில், அந்தச் சபையினுடைய செயலாளருக்கு எதிராக தொடர்ச்சியான ஆர்ப்பாட்டங்களும், போராட்டங்களும் இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றன. இந்த ஆர்ப்பாட்டத்தின் பின்னணியில் முன்னாள் முதலமைச்சர் இருந்து செயற்படுகிறார் எனத் தெரியவருகிறது.

ஊழியர்களின் சம்பளக் கொடுப்பனவுகள் தாமதம் மற்றும் ஊழியர் ஒருவருக்கு தவறாகப் பேசியமை என்பவற்றுக்காக, ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டு செயலாளரை இடமாற்றுமாறு ஊழியர்கள் கோரிக்கைவிடுக்கின்றனர்.

சபையினுடைய செயலாளருக்கும், ஊழியருக்கும் இடையில் ஏற்பட்ட பிரச்சினை உண்மையாகும். அதனை பேச்சு ஊடாக தீர்ப்பதற்கு அரசியல்தலைவர்கள் முயல வேண்டும்.

அல்லது உயர் மட்டத்தில் பேசித் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும். இதனை விடுத்து தொழிலாளர்களை வீதியில் இறங்கி ஆர்ப்பாட்டங்களைச்செய்து ஊடகங்களுக்கு அறிக்கைகளை விட்டு செயலாளரை இடமாற்றம் செய்யுமாறு கோருவதனை ஒரு போதும் ஏற்றுக்கொள்ள முடியாது.

முன்னாள் முதலமைச்சர் தனது ஆட்சிக்காலத்தின் போது கிழக்கு மாகாணத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்களில் அளவுக்கதிகமான தொழிலாளர்களை நியமனம் செய்தார். இதனால் மக்களின் வரிப்பணத்தில் சம்பளம் வழங்க வேண்டிய தொருதுர்ப்பாக்கிய நிலை உள்ளூராட்சி மன்றங்களுக்கு ஏற்பட்டது. மேற்குறித்த நியமனத்தால் கிழக்கு மாகாண உள்ளூராட்சிசபைகளினுடைய மக்கள் வரிப்பணம் வீண்விரயம் செய்யப்பட்டு வருகிறது. அதற்கு இடம்கொடுக்காததற்காக செயலாளரை எப்படியோ வெளியேற்றுவதற்கு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார். அவரது அத்தனை முயற்சிகளும் தற்போது தோல்வியடைந்துள்ளன. அதனாலேதான் இப்போது ஊழியர்களின் பிரச்சினை பூதாகரமாக்கப்பட்டு ஆர்ப்பாட்டங்களையும் போராட்டங்களையும் நடத்துகின்றனர். இதனை ஏறாவூர் சமூகம் நன்கு புரிந்துகொள்ளவேண்டும்-என்றார். (ր-ரி5)

## சிறுமியை வீதியில் தள்ளிய சந்தேக நபர்களுக்கு மறியல்

திருகோணமலை, ஜூன் 4

திருகோணமலை உப்புவெளி பொலிஸ்பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் பத்து வயது சிறுமி ஒருவரை முச்சக்கர வண்டியில் ஏற்றிச் சென்று தள்ளி விட்டனர் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இருவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டார். சந்தேகநபர்களை இந்த மாதம் 13ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு திருகோணமலை நீதிமன்ற நீதிவான் எம்.எச்.எம்.ஹம்ஸா நேற்றுமுன்தினம் உத்தரவிட்டார். ஆத்திமோட்டை, எட்டாம் வட்டாரம், நிலாவெளி, பகுதியைச் சேர்ந்த 20, மற்றும் 21 வயதுடைய இருவரே விளக்கமறியலில் வைக்கப்பட்டனர் என உப்புவெளிப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.


சிறுமி தனியார் வகுப்புக்குச் சென்றுவிட்டு, வீட்டுக்கு சென்ற வேளையே முச்சக்கர வண்டியில் ஏற்றிச் சென்று தள்ளி விட்டனர் என்று சந்தேகநபர்களுக்கெதிராக சிறுமியின் பெற்றோர்களால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த முறைப்பாட்டை அடுத்து சந்தேகநபர்கள் 1ஆம் திகதி கைது செய்யப்பட்டனர். (ր-ரி5)

# பெரும்பான்மை இன ஆளுநர்களின் கையில் வடக்கு, கிழக்கு அதிகாரம்

### கிழக்கு முன்னாள் முதலமைச்சர் நஸீர் அஹமத் தெரிவிப்பு

**மட்டக்களப்பு, ஜூன் 4**

**சிறுபான்மை இன மாகாணங்களின் அதிகாரங்கள் பெரும்பான்மை இன ஆளுநர்களின் கைகளிலேயே உள்ளது வெளிப்படையான பேரினவாதமாகும்.**



இவ்வாறு கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் செய்னுலாப்தீன் ஆலிம் நஸீர் அஹமத் தெரிவித்தார்.

சமகால வடக்கு, கிழக்கு மாகாணங்களின் நிர்வாகம் தொடர்பாக அவர் நேற்று வெளியிட்ட அறிக்கையிலேயே இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதில் உள்ளதாவது:

மாகாண சபை ஆட்சி பிரதேச மக்களின் கைகளில் உள்ளது என்று கூறப்பட்டாலும் வடக்கு, கிழக்கு ஆகிய சிறுபான்மை இனங்கள் வசிக்கும் மாகாணங்களின் அதிகாரங்கள் பெரும்பான்மை இன ஆளுநர்களின் கைகளிலேயே உள்ளன.

இலங்கையின் பேரினவாத ஆட்சிப் பொறிமுறை அதிகாரப்பகிர்வு என்றில்லாமல் அதிகாரப் பரவலாக்கம் என்றவாறு தொடர்கதையாகவே உள்ளது.

இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சிறுபான்மை சமூகங்களான தமிழர்களும், முஸ்லிம்களும் கூடுதலாக வாழ்கின்றார்கள்.

ஆனால், வடக்கு, கிழக்கு தவிர்ந்த ஏனைய ஏழு மாகாணங்களினதும் அதிகாரங்கள் அவற்றின் முதலமைச்சர்களின் கரங்களில் முற்று முழுதாக இருந்து இயங்குகின்ற நிலையில் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் நிர்வாக அதிகாரம் அந்த மாகாண முதலமைச்சர்களின் கைகளில் இல்லை. சிறுபான்மை மக்களைக் கொண்டுள்ள வடக்கு, கிழக்கு மாகாணங்களின் ஆளுகை அதிகாரம் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த மாகாண ஆளுநர்களின் கரங்களிலேயே பெருமளவுக்குக் காணப்படுகின்றது. கிழக்கு மாகாணத்தில் எனது தலைமையிலான சுமார் இரண்டரை வருட ஆளுகைக் காலத்தில் மாகாண சபை அதிகாரங்கள் தொடர்பில் பல்வேறு படிப்பினைகளை கிழக்கு மக்களுக்கும் ஏனைய மாகாண மக்களுக்கும் அதிகாரிகளுக்கும் விழிப்புணர்வூட்டக்கூடியதாக இருந்தது. சிறுபான்மை இன மக்கள் தமது மாகாண ஆளுகையின் முழு அளவிலான அதிகார உரிமைகளைப் பெற்றுக் கொள்ள இன்னமும் நீண்டகாலம் பயணிக்க வேண்டும் என்பதையே சமகால நிகழ்வுகள் புலப்படுத்தி நிற்கின்றன.

இந்த விடயத்தில் சிறுபான்மைச் சமூகங்களின் ஒற்றுமை என்பது இன்றியமையாதது. பிளவுபட்டு நிற்பின் சிறுபான்மைப் பிரதேசங்களை பேரினவாதம் தொடர்ந்தும் கோலோச்சும். மக்கள் வெறுமையை அனுபவிப்பார்கள். என்றுள்ளது. (ր-ரி5,46)



## அச்சுவேலி ம. கல்லூரியின் ஆண்டு நிறைவு நடைபவனி

அச்சுவேலி, ஜூன் 4

அச்சுவேலி மத்திய கல்லூரியின் 125ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடைபவனி நேற்று இடம்பெற்றது. கல்லூரியின் அதிபர் சி.திரிகரன் தலைமையில் நடைபெற்ற இந்த நடைபவனி கல்லூரி முன்றிலில் ஆரம்பமாகி அச்சுவேலி தோப்பு, அச்சுவேலி வடக்கு, பத்தமேனி, வருணன், கதிரிப்பாய், தம்பாலை, அச்சுநகர், அச்சுவேலி மேற்கு வீதிகள் வழியாகச் சென்று கல்லூரியை வந்தடைந்தது எனத் தெரிவிக்கப்பட்டது. நடைபவனியில் மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் கல்விச் சமூகத்தினர் உள்ளிட்ட பெருமளவானோர் கலந்துகொண்டனர். (ր.ரி5,11)

## 3 வாகனங்கள் மோதி விபத்து: ஒருவர் சாவு மூவர் காயம்

கொழும்பு, ஜூன்4

மத்துகம அகலவத்த வீதியின் வேத்தேவப் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்தார். மூவர் காயமடைந்தனர்.

லொறியொன்று மோட்டார் சைக்கிளுடன் மோதியதால் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் முச்சக்கரவண்டியொன்றுடன் மோதி விபத்துக்குள்ளானது எனத் தெரிவிக்கப்பட்டது. மத்துகம, தியகடுவப் பகுதியைச் சேர்ந்த 21 வயதுடைய மோட்டார் சைக்கிள் சாரதியே இவ்வாறு உயிரிழந்தார்.

விபத்தில் பெண் ஒருவர் உள்பட மூவர் காயமடைந்தனர். இவர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். எனப் பொலிஸார் தெரிவித்தனர். விபத்து தொடர்பில் லொறி ஓட்டுநர் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (ր-ரி5)

## பனை ஏறியவரை கலைத்து கொட்டிய கருங்குளவிகள்

தென்மராட்சி, ஜூன் 4

பனையில் தொழிலுக்காக ஏறியவரை கருங்குளவிகள் கொட்டியுள்ளன. அவர் சாமர்த்தியமாக 40 அடிப் பனையில் இருந்து கீழே இறங்கினார்.

இந்தச்சம்பவம் நேற்றுமுன்தினம் நுணாவிலில் நடந்துள்ளது.

கள் சீவுவதற்காக பனையில் ஏறியவரை பனை ஓலைகளுக்குள் இருந்த கருங்குளவிகள் கொட்டின. கருங்குளவிகள் கலைத்துக் கலைத்துக் கொட்டியபோதும் அவர் ஒருவாறு பனையில் இருந்து இறங்கியுள்ளார். கீழே இறங்கி மயங்கி வீழ்ந்தார். அந்தப் பகுதியால் வந்த ஒருவர் குடும்பத்தினருக்குத் தகவல் தெரிவித்தார். குடும்பத்தினர் அவரை மருத்துவமனையில் சேர்ப்பித்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

அதே இடத்தைச் சேர்ந்த 56 வயதுடைய ஒருவரே மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். (ր-9)

## வாகன விபத்தில் ஒருவர் உயிரிழப்பு

புத்தளம், ஜூன் 4

புத்தளம், கல்அடிய பாலவி பிரதான வீதியில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்தார். இருவர் காயமடைந்தனர்.

இந்த விபத்து நேற்றுமுன்தினம் இரவு நடந்தது. அதிவேகமாகப் பயணித்த ஜீப் வண்டியொன்று வேகத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் மதிலுடன் மோதியே விபத்துக்குள்ளானது எனத் தெரிவிக்கப்பட்டது. விபத்தில் காயமடைந்தவர்கள் புத்தளம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

கொழும்புப் பகுதியை சேர்ந்த பிரசாத் பெர்னான்டே (வயது- 49) என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பாகப் புத்தளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ր-ரி5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## உலகின் மிகப்பெரிய முத்து பத்துக் கோடிக்கு விற்பனை

ஆம்ஸ்டர்டாம், ஜூன் 4
உலகின் மிகப்பெரிய முத்து என்று கருதப்படும் முத்து இலங்கை மதிப்பில் சுமார் 10 கோடி ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டது. நெதர்லாந்தில் நடைபெற்ற இந்த ஏலத்தில் ஜப்பானைச் சேர்ந்த நிறுவனமொன்று முத்தை வாங்கியது.
சீனாவில் 18ஆம் நூற்றாண்டில் இந்த முத்து கண்டெடுக்கப்பட்டது. இது ஏலத்தில் விடப்படும் என்று கடந்த வருடம் அறிவிக்கப்பட்டு நேற்றுமுன்தினம் ஏலத்தில் விடப்பட்டது. பலமுனைப் போட்டிகளுக்கு மத்தியில் ஜப்பானைச் சேர்ந்த நிறுவனம் இதை ஏலத்தில் எடுத்தது. (ம)

## தென்சீனக் கடற்பரப்பில் சீனாவின் ஏவுகணைகள்

### அமெரிக்கா குற்றச்சாட்டு



வொஷிங்டன், ஜூன் 4
தென்சீனக் கடற்பரப்பில் சீனா ஏவுகணைகளை நிறுத்தியுள்ளது என்று குற்றஞ்சாட்டியது அமெரிக்கா.
அமெரிக்க இராணுவத்துறை அமைச்சர் ஜேம்ஸ் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தார்.
சிங்கப்பூரில் நேற்று முன்தினம் நடைபெற்றநிகழ்வொன்றில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
"தென் சீனக்கடல் பகுதியில் கப்பல்களை தாக்கும் ஏவுகணைகள், தரையில் இருந்து வானுக்கு சென்று தாக்குதல் நடத்தும் வல்லமைமிக்க ஏவுகணைகள், மின்கருவிகளை செயலிழக்க செய்கிற ஜாமர் கருவிகளை சீனா ஏராளமாக நிறுத்தி வைத்துள்ளது. இவற்றை சீனா நிறுத்தி வைத்து இருப்பதின் நோக்கம், அண்டை நாடுகளை மிரட்டுவதும் அச்சுறுத்துவதும்தான். சீனாவின் நடவடிக்கைகள் அதன் பரந்த நோக்கங்களை கேள்விக்கு உள்ளாக்கி உள்ளன.
சீனாவுடன் அமெரிக்கா ஆக்கப்பூர்வமான உறவைப் பராமரிக்கத்தான் விரும்புகிறது. அதே நேரத்தில் தேவைப்பட்டால் அந்த நாட்டுடன் தீவிரமாகப் போட்டியிடுவோம்" என்று ஜேம்ஸ் மேலும் தெரிவித்தார். (ம)

### அல் குவைதா அமைப்பால்

# பின் சல்மானுக் கொலை மிரட்ட

### அவரது திட்டங்கள் பாவத்தை ஏற்படுத்துமா



ரியாத், ஜூன் 4
"வளைகுடாவின் வல்லரசு என்று கருதப்படும் சவூதி அரேபியாவின் பட்டத்து இளவரசர் சல்மானின் திட்டங்கள் பெரும் பாவகரமானவை" என்று தெரிவித்துள்ள அல் குவைதா ஆயுதக் குழு அவருக்குக் கொலை மிரட்டல் விடுத்தது.
இஸ்லாமிய, ஆணாதிக்க சித்தனைகளில் முழுமையாக மூழ்கியிருந்த நாடு சவூதி அரேபியா. அந்த நாட்டின் பட்டத்து இளவரசராக அறிவிக்கப்பட்ட பின்னர் இந்த இரண்டு எண்ணக்கருக்களிலும் இருந்து சவூதியை விடுவித்து வருகிறார் சல்மான். குறிப்பாக பெண்கள் நலத்திட்டங்களை ஒன்றன் பின்னர் ஒன்றாக அவர் அறிவித்து வருகிறார்.
பெண்கள் கார் செலுத்த அனுமதி, பெண்கள் கால்பந்தாட்டத்தை நேரில் பார்க்க அனுமதி, பெண்கள் திரையரங்குகளுக்குச் செல்ல அனுமதி என்பவை சல்மான் அண்மையில் அறிவித்த திட்டங்களில் சில. அத்துடன் தற்போது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள இஸ்ரேல் பலஸ்தீன விவகாரத்திலும் அவர் இஸ்ரேல் மக்களுக்கு அ
ளுக்கு ஆதரவான கருத்தைப் பதிவிட்டிருந்தார். 'யூத
பூர்வீக இடங்களில் வாழ்வதற்கான உரிமையைக் கெ
என்பது அவரின் கருத்தாக அமைந்தது. இந்த நிலைய
னின் அண்மைய நகர்வுகளுக்குக் கடும் கண்டனம் தெ
குவைதா.
"முகமது பின் சல்மான் இஸ்லாம் மதத்தை பின்பற்றுவ
காரணமே இல்லாமல் கிழக்கு மற்றும் மேற்கத்திய நாடு
நாத்திகம் மற்றும் மதச்சார்பற்றவர்களைப் பின்தொட
யில் ஊழல் மற்றும் அறத்தைச் சிதைக்கும் போக்கு அ
அவரது திட்டங்கள் இஸ்லாமுக்கு எதிரானவை. பாவ
அதை நடைமுறைப்படுத்திவரும் பட்டத்து இளவரசருக்
டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும்" என்று அல் குவை
குறிப்பிட்டுள்ளது.

## வானூர்தி எதிர்ப்பு ஏவுகணையை நிறுவினால் இராணுவ நடவடிக்கை

### கட்டாரை எச்சரிக்கிறது சவூதி



டோகா, ஜூன் 4
"வானூர்தி எதிர்ப்பு ஏவுகணையை நிறுவினால் கட்டாருக்கு எதிராக இராணுவ நடவடிக்கை எடுக்கப்படும்" என்று சவூதி அரேபியா எச்சரித்தது.
வளைகுடா நாடுகளுக்கும் கட்டாருக்கும் இடையில் அண்மைக்காலமாக போர்ப் பதற்றம் ஏற்பட்டுள்ளது. கட்டார் ஈரானின் ஆதரவுடன் செயற்படுகிறது. அத்துடன் ஐ.எஸ்.ஐ.எஸ். ஆயுதக் குழுவுக்கு உதவி செய்கிறது என்று தெரிவித்து அந்த நாட்டுடனான தூதரக உறவுகளை சவூதி, பக்ரைன், ஏமன், இந்தோனேசியா உள்ளிட்ட நாடுகள் துண்டித்தன. பொருளாதாரத் தடைகளையும் விதித்தன. கட்டாருக்கு எதிராக தத்தமது வான்பரப்பையும் மூடின. எனினும் ஈரான், ரஷ்யா உள்ளிட்ட நாடுகளின் ஆதரவுடன் தனது பொருளாதாரச் சிக்கலைத் தீர்த்துக்கொண்டுள்ள கட்டார் தனது இராணுவ பலத்தையும் படிப்படியாக அதிகரித்து வருகிறது. வானூர்தி எதிர்ப்பு ஏவுகணைகளையும் கட்டார் வாங்கி தனது எல்லையில் நிறுவவுள்ளது என்று அண்மையில் தெரிவிக்கப்பட்டது. அவ்வாறு கட்டார் செய்துவிட்டால் அது சவூதிக்குப் பெரும் தலைவலியைக் கொடுக்கும். இந்தப் பின்னணியிலேயே இடைமறிப்பு ஏவுகணையை நிறுவினால் கட்டாருக்கு எதிராக இராணுவ நடவடிக்கை எடுக்கப்படும் என்று சவூதி எச்சரித்தது. (ம)

## இறைவன் என்
## அதனால் பக்தர்

### அமெரி

வொஷிங்டன், ஜூன் 4
அமெரிக்காவின் மிகவும் பிரபலமான மதபோதகர்களில் ஒருவர் ஜெஸ்ஸி டுப்லாண்ட்டிஸ். இவர் தனது பிரசங்கங்களுக்காக தனியார் ஜெட் வானூர்தியை வாங்கித் தருமாறு, பக்தர்களுக்குக் கோரிக்கை விடுத்திருக்கிறார். இந்த வானூர்தியின் விலை சுமார் இலங்கை மதிப்பில் ஆயிரத்து 100 கோடி ரூபா.
லூசியானாவில் உள்ள தேவாலயத்தில் செல்வாக்கு மிக்க பதவியில் இருக்கும் இவர், ஏற்கெனவே ஜெட் வானூர்திகளைச் சொந்தமாக வைத்திருக்கிறார். இப்போது மூன்றாவது வானூர்தியை வாங்கித் தருமாறு கேட்டிருக்கிறார். 68 வயதுடைய ஜெஸ்ஸி, "மதபோதகர்களுக்கு ஏன் தனி வானூர்திகள் என்று
பலரும் கேட்கிறார்கள்.
வானூர்தியின் மூலம்
நிற்காமல் பறக்கலாம்.
கணிசமாக மிச்சமா கு
புகழும் பரவும் என்ப
பக்தர்கள் தாராளமாக
லாம். இது என் தனிப்ப
1978ஆம் ஆண்டு இ
வானூர்தி வாங்கச் செ
டார். அதன் பிறகே வா
எண்ணம் வந்தது. இ
திருப்பணியில் நீங்கள
வேண்டும் என்றால் ந
கள். இதில் எந்த நிர்ப
இறைவனே இன்று பூ
லும் கழுதையில் பயண

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ல்


# க்கு
# டல்

துமாம்



களுக்கு அதாவது யூதர்க
ந்தார். 'யூத மக்கள் தமது
மையைக் கொண்டுள்ளனர்'
ந்த நிலையில் பின் சல்மா
ண்டனம் தெரிவித்தது அல்

பின்பற்றுவதற்கு பதிலாக,
கத்திய நாடுகளை சேர்ந்த
பின்தொடர்வதால், சவுதி
போக்கு அதிகரித்துள்ளது.
வை. பாவகரமானவை.
இளவரசருக்கு எதிராக கண்
அல் குவைதா அமைப்பு
(ம)




சிரிய அரசுக்கு எதிரான ஆயுதக் குழுவைச் சேர்ந்தவர்கள் ரமழான் தொழுகையில் ஈடுபடும் ஒளிப்படங்களை பன்னாட்டு ஊடகமான ரொயிட்டர்ஸ் வெளியிட்டது. சமூக வலைத்தளங்களிலும் இந்த ஒளிப்படங்கள் பெரிதும் வரவேற்பைப் பெற்றுள்ளன. (ம)

# புளூட்டோ கிரகத்தில் மித்தேன் படிமங்கள்

வொஷிங்டன், ஜூன் 4

புளூட்டோ கிரகத்தில் உள்ள மணல் குன்றுகளில் உறைந்த நிலையில் மித்தேன் படிமங்கள் உள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. அமெரிக்காவின் புகழ்பெற்ற ஆராய்ச்சி நிலையமான நாசா இந்தத் தகவலை வெளியிட்டது.



விண்வெளி தொடர்பான ஆய்வில் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறது நாசா. புளூட்டோ புவியில் இருந்து பல ஒளியாண்டுகள் தொலைவில் உள்ளது. இந்தக் கிரகத்தில் கடும் குளிர் நிலவுகிறது. இந்தக் கிரகத்தையும் தனது ஆய்வுக்கு உட்படுத்த எண்ணிய நாசா, கொரைசான் எண்ண விண்கலத்தை அங்கு அனுப்பியது. அந்த விண்கலம் புளூட்டோவை மிக நெருக்கமாகச் சென்று அது குறித்த ஒளிப்படங்களை எடுத்து தற்போது அனுப்பியது. இந்த ஒளிப்படத்தைப் பகுப்பாய்வு செய்து பல தகவல்களை வெளியிட்டது நாசா.

இதன்படி புளூட்டோவின் நூற்றுக்கணக்கான சதுர கிலோமீற்றர் பரப்பளவுக்கு மணல்குன்றுகள் உள்ளன. ஜப்பானின் தலைநகர் டோக்கியோ அளவுக்கு இந்த மணல் குன்றுகள் உள்ளன. காற்றினால் இந்த மணல் குன்றுகள் உருவாகியிருக்கலாம். அவற்றில் உறைநிலையில் மித்தேன் படிமங்கள் உள்ளன என்று நாசா தெரிவித்தது.

புளூட்டோவில் இருந்து மணல் மற்றும் பாறைகளை எடுத்து ஆய்வு நடத்துவது தொடர்பில் நாசாவின் அடுத்த நகர்வு இருக்கும் என்று கருதப்படுகிறது. (ம)

# புதுவித மலருக்கு மோடியின் பெயர்

சிங்கப்பூர், ஜூன் 4

சிங்கப்பூர் தாவரவியல் பூங்காவில் உள்ள ஒருவகைப் பூவுக்கு இந்தியத் தலைமை அமைச்சர் மோடியின் பெயர் வைக்கப்பட்டது.

'ஆர்கிட்' வகை மலருக்கே மோடியின் பெயர் சூட்டப்பட்டது. மோடியின் பெயர் மலரொன்றுக்குச் சூட்டப்படுவது இது முதல் முறையல்ல. இஸ்ரேல் இதற்கு முன்னர் அவ்வாறு செய்துள்ளது. இறுதியாக இஸ்ரேலுக்கு மோடி பயணம் செய்தபோது இஸ்ரேலில் பூக்கும் ஒருவித மலருக்கு மோடியின் பெயர் சூட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம)





# சோமாலியா நகரொன்றை கைப்பற்றிய அல் சபாப்

மொகடிஷூ, ஜூன் 4

சோமாலியாவின் தலைநகர் மொகடிஷுவுக்கு சுமார் 300 கிலோமீற்றர் தொலைவில் உள்ள நகரொன்றைக் கைப்பற்றியது அல் சபாப் ஆயுதக் குழு.

சோமாலியாவில் இஸ்லாமிய சட்டத்துக்கு உட்பட்ட ஆட்சி நடைபெறவேண்டும் என்று வலியுறுத்தி வருகிறது அல் சபாப் ஆயுதக் குழு. ஆனால் அங்கு முஸ்லிம்களுக்கு நிகராக கிறிஸ்தவர்களும் வாழுகின்றனர்.

இதனால் தனி இஸ்லாமியச் சட்டம் என்பதை பலரும் எதிர்கின்றனர். இதனால் கிறிஸ்தவர்கள் வாழும் பகுதிக்குள் அவ்வப்போது அத்துமீறிச் செல்லும் அல் சபாப் ஆயுததாரிகள் கிறிஸ்தவ மக்கள், பாரிதியார்கள் ஆகியோரைக் கொலைசெய்வது தொடர்கதையாகியுள்ளது. இந்தப் பின்னணியில் கிறஸ்தவர்கள் பெரும்பான்மையாக வாழ்ந்த முக்கோக்ரி என்ற நகரை அல் சபாப் ஆயுதக் குழு கைப்பற்றியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. முக்கோக்ரியில் இராணுவத்துக்கும் அல் சபாப் ஆயுதக் குழுவுக்கும் இடையில் இடம்பெற்ற போரில் 47 சிப்பாய்கள் கொல்லப்பட்டனர் என்றும் தெரியவருகிறது. (ம)

# ன்னை வானூர்தி வாங்கச் சொன்னார்
# தர்கள் நன்கொடை வழுங்கவேண்டும்

## மெரிக்க மதபோதகரின் கோரிக்கை இது

கட்கிறார்கள். பால்கன் 7எக்ஸ்
யின் மூலம் உலகம் முழுவதும்
பறக்கலாம். இதனால் எரிபொருள்
மிச்சமா கும். இறைவனின்
வும் என்பதைப் பார்க்கும்போது
தாராளமாக நன்கொடை அளிக்க
என் தனிப்பட்ட விருப்பம் அல்ல.
ஆண்டு இறைவன் என்னை
வாங்கச் சொல்லிக் கட்டளையிட்
பிறகே வானூர்தி வாங்கும்
வந்தது. இறைவனின்
யில் நீங்களும் ஒரு அங்கமாக
என்றால் நன்கொடை அளியுங்
எந்த நிர்பந்தமும் இல்லை.
ன இன்று பூமியில் தோன்றினா
தயில் பயணம் செய்ய

விரும்பமாட்டார். வானூர்தியின் மூலம்தான் உலகை விரைவாகச் சுற்றி வர முடியும் என்பார்" என்று மக்களின் மனதைத் தொடும் விதத்தில் காணொளியொன்றை வெளியிட்டுக் கோரிக்கை விடுத்திருக்கிறார்.

இதற்கு முன் வாங்கப்பட்ட 2 ஜெட் வானூர்திகளையும் பக்தர்களின் நன்கொடையில்தான் வாங்கியிருக்கிறார். ஜெஸ்ஸியின் இந்தக் காணொலியைப் பார்த்த பலரும் இறைவனின் பெயரைச் சொல்லி கோடிக்கணக்கில் நன்கொடை வசூலிப்பதைக் கடுமையாக விமர்சனம் செய்து வருகிறார்கள். இறைவனுக்குத் தொண்டு செய்யும் மதபோதகர், தனி வானூர்தியில் செல்வதே சரி என்று சொல்லி லட்சக்கணக்கில் நன்கொடை கொடுப்பவர்களும் இருக்கிறார்கள். (ம)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## ரணிலின் சந்தேகம் நியாயமானதா?

அரசதலைவர்மைத்திரிபாலசிறிசேன, முன்னாள் பாதுகாப்புச்செயலர்கோத்தபாய ராஜபக்சவுடன் இணைந்துஎதிர்காலஅரசியலைமுன்னெடுப்பதற்கான யோசனையைக் கொண்டிருப்பதாகத் தெரிகின்றது. ராஜபக்சாக்களையும், சிறிலங்காசுதந்திரக்கட்சியுடன் இணைத்துக் கொள்வதில் நாட்டம் காட்டுகின்றார் என்பதற்கான அறிகுறிகளே தெரிகின்றன. இவ்வாறு அவர் செய்வாரேயானால் அது அவருக்குப் பாதகமாக முடியும். இவ்வாறு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, தன்னைச் சந்தித்த ஊடகவியலாளர்களிடம் அலரிமாளிகையில் வைத்துக் கடந்த வெள்ளிக்கிழமை தெரிவித்துள்ளார்.

அரசதலைவர்மைத்திரிபாலசிறிசேனவின் அண்மைக் காலப் போக்கு தலைமை அமைச்சரின் சந்தேகத்தை நியாயப்படுத்துவதைப்போன்றேஅமைந்துள்ளது. சிறிலங்கா சுதந்திரக் கட்சியைப் பாதுகாக்கவேண்டும், பலப்படுத்தவேண்டும்என்றகோதாவில், தான்கடந்து வந்த பாதையை மறந்து விட்டார் சிறிசேன.

நிறைவேற்று அரசதலைவர்முறையை முற்றாகஒழித்துக் கட்டுவேன் என்று, சோபிததேரரின் இறுதிக் கிரியையின்போது சபதமிட்ட மைத்திரிபால சிறிசேன, அதனை மறந்து அதற்கு எதிரான திசையில் பயணித்துக் கொண்டிருக்கின்றார். அவரது இந்தப் பயணமே அண்மைக்காலப் பிரச்சினைகளுக்குப் பிரதானமாகியிருக்கின்றது.

தனது அரசதலைவர்பதவியைத்தக்கவைத்துக்கொள்வதற்காக, ராஜபக்சாக்களுடன் கூட்டுச் சேரத் தயாராகிக் கொண்டிருக்கின்றார் என்பதை அவரது அண்மைக்கால உரைகள்சாடைமாடையாக வெளிக்காட்டி நிற்கின்றன. ஐக்கிய தேசியக் கட்சி மீதான அவரின் பாய்ச்சல்கள் இதனை உறுதி செய்கின்றது.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக, சிறிலங்காசுதந்திரக்கட்சி மறுசீரமைப்புத் தொடர்பில் அவர் நேற்றுஎடுத்துள்ளமுடிவுகள், தலைமைஅமைச்சரின்சந்தேகத்தை மேலும் உறுதிப்படுத்துகிறன.

ரணிலுக்குஎதிரானநம்பிக்கையில்லாத்தீர்மானத்தை சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆதரிக்கக் கூடாது என்று கடுமையாக எதிர்த்தவர் அந்தக் கட்சியின் செயலராக இருந்த துமிந்த சில்வா. ராஜபக்சாக்களை சிறிலங்கா சுதந்திரக்கட்சியிலிருந்தேதூக்கிஎறியவேண்டும்என்பதில் முனைப்போடு இருந்தவரும் அவர்தான்.

துமிந்தசில்வாவைசிறிலங்காசுதந்திரக்கட்சியின்செயலர் பதவியிலிருந்து தூக்கவேண்டும் என்று, மகிந்த அணியினால்கொண்டுவரப்பட்டநம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆதரித்தசிறிலங்காசுதந்திரக்கட்சியின் 16பேர்குழுகடும்அழுத்தம்கொடுத்திருந்தது. அதனை நடைமுறைப்படுத்ததலைகீழாகவும்அவர்கள்செயற்பட்டனர்.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, பொதுவேட்பாளராக மகிந்தவை எதிர்த்து வெளியேறியபோது, அவருடன் முதன்முதலில் கூட வந்தவர்துமிந்த. அப்படிப்பட்டதுமிந்தவைசிறிலங்காசுதந்திரக்கட்சியின் பொதுச் செயலர் பதவியிலிருந்து, நேற்று அகற்றிவிட்டார்கள். அவ்வாறு செய்வதற்கும், அரசதலைவரும் உடந்தையாகத்தான் இருந்திருக்கின்றார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு எதிராக உள்ளூராட்சித் தேர்தலின்போது பரப்புரை நடத்திய மகிந்த ராஜபக்சவை, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஆலோசகர் பதவியை வழங்கி அழகு பார்த்திருக்கிறார் சிறிசேன.

அரசதலைவர்மைத்திரிபாலசிறிசேனதப்புக்கணக்குப் போடுகின்றார் என்ற, தலைமை அமைச்சர் ரணிலின் கணக்குச் சரியாகவே இருக்கின்றது. ராஜபக்சாக்களுடன் சேர்வதால் ஆபத்து மைத்திரிக்கு மாத்திரமல்ல, முழு நாட்டுக்கும்தான்.

# அரசியல்வாதிகள் திருந்த வேண்டும்

சேரலாதன்

இந்த நாட்டு அரசியல் படும்பாட்டைப் பார்க்கும் போது நாட்டின் எதிர்காலம் தொடர்பான கவலைகள் அதிகரித்துச் செல்கின்றன. அரசியலில் நேர்மையை எதிர்பார்க்க முடியாது என்பது பொதுவானதாக இருந்தபோதிலும், இலங்கையைப் பொறுத்தவரையில் அதை அறவே காணமுடியவில்லை. கொள்கைகள் அறவே இல்லாதவர்கள் அரசியலில் நுழைந்து அதை மேலும் கேவலப்படுத்துவதில் முன்நிற்கின்றனர்.



"2020ஆம் ஆண்டு இடம்பெறப்போகும் அரச தலைவரைத் தெரிவு செய்வதற்கான தேர்தலுக்கு இப்போதே அரசியல்வாதிகள் தயாராகி வருகின்றனர். மகிந்த குடும்பத்தினுள்ளேயே அரச தலைவருக்கான வேட்பாளர் தொடர்பான குழப்பநிலை காணப்படுகின்றது. எவராவது ஒருவருக்கு அரச தலைவர் பதவி கிடைத்து விட்டால் தம்மீது சுமத்தப்பட்டுள்ள ஊழல் மோசடிக் குற்றச்சாட்டு களிலிருந்து தப்பிக் முடியுமென்பது அவர்களது நம்பிக்கையாகவும் உள்ளது."

### தனக்கு உரிய அதிகாரத்தை பயன்படுத்தாத அரச தலைவர்

அரச தலைவரான மைத்திரிபால சிறிசேன தமது அதிகாரத்துக்கு ஏற்ற வகையில் நடந்து கொள்வதாகத் தெரியவில்லை. ஒரு சாதாரண அரசியல்வாதி போன்றே அவரது நடவடிக்கைகள் காணப்படுகின்றன. தாம் தலைவராக உள்ள சிறீலங்கா சுதந்திரக் கட்சியைக் கூடத் தனது கட்டுப்பாட்டினுள் வைத்திருக்க முடியவில்லையென்பது அவரது பலவீனத்தையே காட்டுகின்றது. அந்தப் பலவீனமே கட்சி இரண்டாகப் பிளவுபடுவதற்கும் காரணமாக அமைந்துவிட்டது.

கடந்த உள்ளூராட்சித் தேர்தலில் அந்தக் கட்சிக்குக் கிடைத்த படுதோல்வி அரச தலைவரின் செல்வாக்கு எந்த மட்டத்தில் உள்ளது என்பதை எடுத்துக் காட்டுகின்றது. மகிந்த தரப்பினர் எழுச்சி பெறுவதற்கும் இதுவே காரணமாகவும் அமைந்துவிட்டது.

இன்றைய நிலையில் எந்த அரசியல்வாதி எந்தக் கட்சியில் இருக்கிறார் என்பதைக் கூடப் புரிந்துகொள்ள முடியவில்லை. எந்தவிதமான கொள்கைகளும் இல்லாமல் அடிக்கடி கட்சி மாறுபவர்களைத்தான் இந்த நாட்டில் காண முடிகின்றது. இவர்கள் தம்மை நம்பி வாக்களித்த மக்களைப் பற்றிச் சிறிதும் கவலைப்படுவதாகவே தெரியவில்லை. அடுத்த தடவை இவர்கள் எந்த முகத்துடன் மக்களிடம் வாக்குச் சேகரிக்கச் செல்லப்போகிறார்களோ தெரியவில்லை.

சகலத்துக்கும் விலைகளை அதிகரித்துள்ள நிலையில் சாதாரண மக்கள் நாளாந்தம் எதிர்கொள்கின்ற துயரங்கள் சொல்ல முடியாதன. ஒருவேளை உணவுக்குக்கூட அவர்கள் திண்டாடிக் கொண்டிருக்கிறனர். ஆனால் அரசியலில் முன்னிலை பெற்றுத் திகழ்பவர்கள் சுகபோக வாழ்வை அனுபவித்துக் கொண்டிருக்கின்றனர். மக்களைப் பற்றிய சிந்தனை அவர்களிடத்தில் துளிகூட இருப்பதாகத் தெரியவில்லை. நாடொன்றில் ஒருமுறை கடுமையான பஞ்சம் வந்தது. அந்த நாட்டு மக்கள் தமது அன்றாட உணவான பாணைப் பெற முடியாத நிலையில் இருந்தனர். இது தொடர்பாக அந்த நாட்டு மன்னனுக்குத் தெரியப்படுத்தப்பட்டது. அதற்கு அவன் சிரித்துக்கொண்டே பாண் கிடைக்காதுவிட்டால் கேக்கை வாங்கி உண்ணவேண்டியதுதானே என்று கூறினானாம். அந்த மன்னனின் நிலையில்தான் எமது நாட்டு அரசியல்வாதிகளும் உள்ளனர்.

### அரசியல்வாதிகள் பலரும் அரச தலைவர் தேர்தலையே இலக்காகக் கொண்டுள்ளனர்

2020ஆம் ஆண்டு இடம்பெறப்போகும் அரச தலைவரைத் தெரிவு செய்வதற்கான தேர்தலுக்கு இப்போதே அரசியல்வாதிகள் தயாராகி வருகின்றனர். மகிந்த குடும்பத்தினுள்ளேயே அரச தலைவருக்கான வேட்பாளர் தொடர்பான குழப்பநிலை காணப்படுகின்றது. எவராவது ஒருவருக்கு அரச தலைவர் பதவி கிடைத்து விட்டால் தம்மீது சுமத்தப்பட்டுள்ள ஊழல் மோசடிக் குற்றச்சாட்டுகளிலிருந்து தப்பிக் முடியுமென்பது அவர்களது நம்பிக்கையாகவும் உள்ளது. இதேவேளை நாட்டின் எந்தப் பாகத்திலும் பௌத்த விகாரையோ அல்லது இந்துக் கோவிலோ அமைக்கப்படுவதை எவருமே தடுக்க முடியாதென அமைச்சர் சஜித் பிரேமதாச கூறியுள்ளார். இது கேட்பதற்கு மட்டுமே நன்றாகவிருக்கும். ஆனால் செயல்வடிவுக்கு உகந்ததல்ல. தற்போதுள்ள சூழ்நிலையில் தெற்கில் உள்ள இந்து ஆலயங்கள் பாதுகாப்பில்லாத நிலையிலேயே காணப்படுகின்றன. இந்த நிலையில் புதிய ஆலயங்களை அமைப்பதென்பது பகல் கனவாகவே முடியும். ஆனால் அரசின் ஆசிர்வாதமும், படையினரின் பாதுகாப்பும் இருப்பதால் பௌத்த விகாரைகளை எங்கு வேண்டுமானாலும் அமைக்க முடியும். தற்போது வடக்குக் கிழக்கில் இதுதான் நடந்து வருகின்றது. சஜித் பிரேமதாச இதையெல்லாம் தெரியாதவர் போன்று கருத்துக்கூறுவது ஏற்கத்தக்கதல்ல.

அரசியலில் நுழைந்து ஏதாவதொரு பதவியைப் பிடித்துவிட்டால் தமது வாழ்வு வளமாகி விடுமென அரசியல்வாதிகள் நினைக்கின்றனர். அதற்கு ஏற்றாற்போன்று கட்டங்களையும் நகர்த்துகின்றனர். இவர்களைப் பொறுத்த வரையில் மக்கள் அடுத்த நிலையில்தான் உள்ளனர். ஒரு நாட்டின் ஜனநாயகம் சீராக இருக்க வேண்டுமானால் அங்கு மிகச் சிறந்த அரசியல் கலாசாரம் நிலவுவது அவசியமாகும். நல்லதொரு ஜனநாயக நாட்டில் இனவாதம், மதவாதம் ஆகியனவற்றக்கு இடமில்லை. ஆனால் எமது நாட்டைப் பொறுத்தவரையில் இவை இரண்டுமே முதன்மை இடத்தைப் பிடித்துள்ளன. இனவாதிகள் இந்த இரண்டையுமே தமது முதன்மை ஆயுதமாகக் கொண்டுள்ளனர். இந்த இனவாதிகளில் அரசியல்வாதிகளும் அடங்கியுள்ளமை வேதனைக்குரியது. எது எப்படியிருந்தபோதிலும் இந்த நாட்டின் அரசியல் தூய்மையாக இருக்க வேண்டுமானால் முதலில் அரசியல்வாதிகள் தம்மைத் தூய்மையாக்கிக் கொள்ள வேண்டும். அவர்கள் திருந்தாதவரை அரசியலும் திருந்தப் போவதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிந்தவின் கவலையும் ஊடகங்களின் பணியும்

இந்துமதி




தற்போதைய ஆட்சியில் ஊடகங்கள் அச்சுறுத்தலுக்கு ஆளாகி வருவதாக முன்னாள் அரச தலைவரான மகிந்த ராஜபக்ச கவலை வெளியிட்டுள்ளார். அரசின் குறைபாடுகளை ஊடகங்கள் உள்ளது உள்ளபடியே தெரிவிப்பதால் இந்த நிலை தோன்றியுள்ளதாகவும் அவர் விசனம் வெளியிட்டுள்ளார்.

ஊடகங்கள் நாட்டு நடப்புக்களை மட்டுமன்றி உலக நடப்புக்களையும் மக்களுக்குத் தெரிவிக்கின்ற உன்னத பணியில் ஈடுபட்டுள்ளன. இதன் காரணமாகவே ஊடகங்களையும் ஊடகவியலாளர்களையும் மதிக்கின்ற மனப்பாங்கு மக்களிடையே காணப்படுகின்றது. இதை புரிந்துகொண்டு நேர்மையாகச் செயற்பட வேண்டிய பொறுப்பும் தார் மீகக் கடமையும் ஊடகங்களுக்கு உண்டு. இன்றைய நிலையில் பொதுவாக நாம் பார்க்கும்போது அதிக ஊடகங்கள் பக்கச் சார்பான செய்திகளை வெளியிடுபனவாக உள்ளன. இதனால் மக்கள் உண்மைத் தன்மையைத் தெரிந்து கொள்வதில் சிரமங்களுக்கு ஆளாகி வருகின்றனர் என்பது பொதுவான கருத்து.

### மகிந்தவின் ஆட்சியில் நடந்தது என்ன?

மைத்திரி-ரணில் கூட்டு அரசு ஊடகங்களை அச்சுறுத்துவதாகக் கூறிக் கொள்ளும் மகிந்தவின் ஆட்சியில் ஊடகங்கள் சுதந்திரமாகச் செயற்பட்டனவா? என்றதொரு கேள்வி எழுப்பப்படுமாயின் இல்லையென்பதே அதற்கான பதிலாக இருக்கும். முன்னைய அரசின் காலத்தில் அரசுக்கு எதிரான செய்திகளை வெளியிட்ட ஊடகங்கள் தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டன. ஊடகவியலாளர்களில் பலர் கொல்லப்பட்டனர். பலர் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டனர். வேறு சிலர் தாக்கப்பட்டு கடுங்காயங்களுக்கு உள்ளாக்கப்பட்டனர். அரசின் ஆசிர்வாதத்துடனேயே இவை அரங்கேற்றப்பட்டதாக மக்கள் அப்போது நம்பினார்கள் இதில் உண்மையையும் இல்லாமலில்லை. யாழ். குடாநாட்டிலிருந்து வெளிவரும் உதயன் நாளிதழின் அலுவலகம் பல தடவைகள் தாக்குதலுக்கு உள்ளானது. இயந்திரங்கள் உட்பட பெருமளவு உபகரணங்கள் சேதமாக்கப்பட்டு அழிக்கப்பட்டன. பணியாளர்கள் சிலர் கொலை செய்யப்பட்டனர். செய்தி ஆசிரியர் கடுமையாகத் தாக்கப்பட்டு கடுமையான காயங்களுக்கு உள்ளாக்கப்பட்டார். இவர் நாட்டைவிட்டே வெளியேற வேண்டிய நிலை உருவாக்கப்பட்டது. இந்தச் சம்பவங்களில் எவரும் இதுவரை கைது செய்யப்படவில்லை. இவர்கள் தொடர்பான விவரங்கள் வழங்கப்பட்ட போதிலும் பொலிசார் எதுவுமே செய்யவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. பிரபல பத்திரிகையாளர் லசந்தவின் கொலையுடன் முன்னைய அரசில் உயர்பதவி வகித்த ஒருவருக்கு நெருங்கிய தொடர்பிருப்பதாகக் கூறப்பட்ட போதிலும் அவருக்கு எதிராக எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.



**யாழ். குடாநாட்டிலிருந்து வெளிவரும் உதயன் நாளிதழின் அலுவலகம் பல தடவைகள் தாக்குதலுக்கு உள்ளானது. இயந்திரங்கள் உட்பட பெருமளவு உபகரணங்கள் சேதமாக்கப்பட்டு அழிக்கப்பட்டன. பணியாளர்கள் சிலர் கொலை செய்யப்பட்டனர். செய்தி ஆசிரியர் கடுமையாகத் தாக்கப்பட்டு கடுமையான காயங்களுக்கு உள்ளாக்கப்பட்டார். இவர் நாட்டைவிட்டே வெளியேற வேண்டிய நிலை உருவாக்கப்பட்டது.**

அது போன்றுதான் மிகப் பிரபலமான தமிழ் ஊடகவியலாளரான சிவராமின் கொலை தொடர்பாகவும் நடந்துள்ளது. தமது ஆட்சிக் காலத்தில் ஊடகங்களுக்கும், ஊடக வியலாளர்களுக்கும் நடந்தவற்றை மறந்து விட்டு தற்போதைய அரசினால் ஊடகங்கள் அச்சுறுத்தப்படுவதாக மகிந்த கூறுகின்றமை வேடிக்கையானது.

போர் இடம்பெறுகின்ற பகுதிகளில் செய்தி சேகரிப்பதற்காகச் சென்ற பல ஊடகவியலாளர்கள் தமது உயிர்களை இழந்துள்ளதை நாம் அறிவோம். இவர்களது தியாகம் மதிக்கப்பட வேண்டியது அவசியம். புலிகளின் ஊடகப் பிரிவில் கடமையாற்றி இறுதிப்போரின் போது படையினரிடம் சரணடைந்த இசைப்பிரியா என்ற இளம் பெண்ணுக்கு என்ன நடந்ததென்பதை இந்த முழு உலகமும் அறியும். இதற்குக் காரணமாணவர்களை விசாரணைகளில் இருந்து பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள் இடம்பெறுகின்றனவே தவிர ஆள்களைத் தண்டிப்பதற்கான செயன்முறை எதுவும் இதுவரை வகுக்கப்படவில்லை.

### மகிந்தவின் ஆட்சியை விட தற்போதைய கூட்டு அரசில் ஊடக அச்சுறுத்தல் குறைவே

தற்போதைய அரசின் ஆட்சிக்காலத்தில் ஊடகங்கங்களும், ஊடகவியலாளர்களும் பார தூரமான பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர் என்று தெரியவில்லை. சில ஊடகங்கள் அரசுக்கு ஆதரவான செய்திகளை வெளியிடுவது புதினமானதொரு காரியமல்ல. இந்தியா உள்ளிட்ட உலக நாடுகளில் இவ்வாறு நடப்பதையும் அவதானிக்க முடிகின்றது. இந்த நிலையில் மகிந்த ராஜபக்ச ஊடகங்களின் மீது திடீரென அக்கறை காட்டுவதன் நோக்கம் புரியவில்லை.

இதேவேளை இன்னொரு விடயத்தையும் இங்கு குறிப்பிட்டுத்தானாக வேண்டும். நாட்டில் உள்ள சகல ஊடக நிறுவனங்களுக்கும் பொதுவானதொரு வேதனத்திட்டக் கொள்கை அமைக்கப்படாமை பெரும் குறையாகக் காணப்படுகின்றது. ஊடகங்கள் தமக்கு ஏற்ற வகையில் தமது நிறுவனத்தில் பணியாற்றுகின்ற ஊடகவியலாளருக்கு வேதனத்தை வழங்கி வருகின்றன. இதனால் சில ஊடக நிறுவனங்களில் பணியாற்றுகின்றவர்கள் மிகக் குறைவான வேதனத்தைப் பெறுகின்றனர். இதனால் தற்போதைய சூழ்நிலையில் பொருளாதார ரீதியான கஷ்டங்களுக்கு அவர்கள் உள்ளாகி வருகின்றனர். இது போக்கப்பட வேண்டுமானால் ஊடகங்கள் பொதுவானதொரு வேதனத்திட்டத்தை வகுக்க வேண்டும். இதனால் சிறிய ஊடகங்கள் பாதிப்புக்குள்ளாகலாமெனச் சிலர் கூறலாம். ஆனால் சகல விடயங்களையும் ஆராய்ந்து பார்த்து பொதுவான வேதனத் திட்டம் வகுக்கப்படுமாயின் ஊடகங்களில் பணியாற்றுகின்றவர்கள் பாதிப்புக்கு உள்ளாகாமல் பாதுகாக்கப்பட முடியும்.

ஊடகப்பணி மிகவும் புனிதமானது. இங்கு பணி புரிபவர்கள் பெருமைக்குரியவர்கள். உலக நடப்புக்கள் மக்களைச் சென்றடைய வேண்டும் என்பதற்காக உழைக்கின்ற ஊடகப் பணியாளர்கள் மக்களால் போற்றுதற்குரியவர்கள். அரசியலுக்கு அப்பாற்பட்ட வகையில் ஊடகபணி அமையுமானால் அதன் பெருமை மேலும் மெருகூட்டப்படும்.

## ஆசிரியருக்கான கடிதம்

# சமூக வலைத்தளங்களில் ஏற்படுகின்ற சாதகமான மாற்றம்

ஈழத்து இளைஞர்களின் சமூக வலைத்தளங்களில் அண்மைய நாள்களாக இரண்டு விடயங்கள் பெரும் விவாதப் பொருள்களாக மாறியிருந்தன. ஒன்று. பிரபல தனியார் வங்கியொன்று முள்ளிவாய்க்கால் நினைவேந்தலில் ஈடுபட்ட தனது பணியாளர்களை தற்காலிக நீக்கம் செய்ததைக் கண்டித்து அது தொடர்பான பதிவுகள். சிலர் "தமது உறவுகள் கொல்லப்பட்ட துயரத்தை நினைத்துப் பார்ப்பதைக்கூட சகித்துக்கொள்ளாத அந்த வங்கி தமக்குத் தேவையில்லை" என்றவாறாகத் தமது கருத்துக்களைப் பதிவுசெய்திருந்தனர். சிலர் ஒருபடி மேலேசென்று குறித்த வங்கியில் இருந்த தமது கணக்குகளை மூடிவிட்டு அது தொடர்பான ஒளிப்படங்களைப் பதிவிட்டிருந்தனர்.


அவர்களின் கோபம், ஆவேசம் ஏற்கத்தக்கதே. இலங்கையில் அதிகளவு பணம் புரளுகின்றன மாகாணங்களில் வடக்கும் ஒன்று என்ற அடிப்படையில் அந்த வங்கிக்கு எதிரான இந்த நகர்வு காத்திரமானது. அதிலும் இளைஞர்கள் தமது பொறுப் புணர்ந்து செயல்வீரர்களானமை அபாரம்.

இரண்டாவது, யாழ்ப்பாணம் பொதுநூலகம் பற்றியது. யாழ்ப்பாணம் பொதுநூலகம் தீக்கிரையாகப்பட்ட நினைவுநாள் கடந்த முதலாம் திகதி கடைப்பிடிக்கப்பட்டது. அது தொடர்பான ஒளிப்படங்களும், கருத்துக்களும்கூட சமூக வலைத்தளங்களை அதிகம் நிரப்பியிருந்தன. எமது அறிவுக் களஞ்சியம் தீக்கிரையாக்கப்பட்ட சதிச் செயல் காலத்தால் மன்னிக்கப்பட முடியாதது. அது தலைமுறை தலைமுறையாகக் கடத்தப்படும் ஆறாத வடு என்கிற விதமாக அந்தப் பதிவுகள் அமைந்தன.

ஒட்டுமொத்தமாக நோக்கின் 'பேஸ்புக் போராளிஸ்' என்ற அடைமொழியோடு ஒன்றுக்கும் உதவாது நேரத்தைக் கடத்தும் கூட்டம் என்று முத்திரை குத்தப்பட்ட தரப்புக்கள் தற்போது செயலூக்கம் பெற்றுவருகின்றன. இது நல்லதொரு அறிகுறி. வெறும் பதிவுகளையும், கருத்துக்களையும் இட்டுவிட்டு நகர்ந்துசென்றுவிடாமல் தமது பதிவுகளுக்கு செயல்வடிவம் கொடுப்பதென்பது பாராட்டப்பட வேண்டியதான விடயமதானே!.

பிரகாஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# "நான் சாமி இல்ல... பூதம்"

## 'சாமி 2' படத்தில் வைரலாகும் வசனங்கள்

ஹரி இயக்கத்தில் 'சாமி' படத்தின் இரண்டாவது பாகம் விறு விறுப்பாக உருவாகி வரும் நிலையில், படத்தின் முதலாவது சுவரொட்டி சமீபத்தில் வெளியாகி நல்ல வரவேற்பை பெற்றது. தொடர்ந்து இரண்டாவது சுவரொட்டியும் வெளியாகி ரசிகர்களிடையே பிரபல்யம் அடைந்தது. தற்போது இந்தப் படத்தின் முன்னோட்டக் காணொளி வெளியாகியுள்ளது. இதில் விக்ரம் பேசும் வசனமான, "நான் தாய் வயத்தில பொறக்கல... பேய் வயத்தில பொறந்தேன்". "நான் சாமி இல்ல... பூதம்" என்ற வசனங்கள் ரசிகர்களைக் கவர்ந்து சமூக வலையத்தளங்களில் வைரலாகி வருகின்றன.




# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** கடந்த கால உழைப்பின் பயனைப் பெறுவீர்கள். தொழிலில் நிர்ணயித்த இலக்கு நிறைவேறும். கூடுதல் ஆதாயம் கிடைக்கும். உடல்நிலை திருப்தியளிக்கும்.

**இடபம்:** புதிய விஷயங்களை ஆர்வமுடன் அறிந்து கொள்வீர்கள். வாகன அனுபவம் இனியதாக அமையும். எதிர்பார்த்த சுபசெய்தி வந்து சேரும்.

**மிதுனம்:** நண்பர்களின் உதவி மனதில் ஊக்கம் தரும். தொழில், வியாபாரத்தில் உபரி பணவருமானம் கிடைக்கும். புத்திரர் விரும்பிய பொருள் வாங்கிக் கொடுப்பீர்கள்.

**கடகம்:** முன்யோசனையுடன் செயல்படுவது அவசியம். தொழில், வியாபாரத்தில் பொறுப்பு அதிகரிக்கும். பணியாளர்கள் பணிச்சுமைக்கு ஆளாவர்.

**சிங்கம்:** எண்ணமும் செயலும் உற்சாகம் பெறும். எளிமையானவருக்கு இயன்ற அளவில் உதவுவீர்கள். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கு சிறப்பாக நிறைவேறும்.

**கன்னி:** வழக்கத்திற்கு மாறான திடீர் பணியால் சிரமப்படலாம். தொழில் வியாபாரம் சீராக நண்பரின் உதவி கிடைக்கும். வருமானம் சுமாராக இருக்கும்.

**துலாம்:** மனதில் தெய்வீக சிந்தனை வளரும். உறவினர்களுக்கு தகுந்த உதவி செய்வீர்கள். தொழில், வியாபாரம் சிறந்து வாழ்க்கைத் தரம் உயரும்.

**விருச்சிகம்:** உங்கள் தேவையை நிறைவேற்றுவதில அக்கறை கொள்வீர்கள். மற்றவரின் அதிருப்தி வராதபடி செயல்படவும். வாகனப் பாதுகாப்பில் அக்கறை தேவை.

**தனுசு:** தங்களின் சுயலாபத்திற்காக சிலர் உதவ முன்வருவர். தொழிலில் உற்பத்தி விற்பனை அதிகரிக்கும். ஆதாயம் பன்மடங்கு உயரும்.

**மகரம்:** எதிர்கால நலனை கருத்தில் கொண்டு செயல்படவும். தொழிலில் கூடுதல் உழைப்பால் உற்பத்தி விற்பனை சீராகும். உடல்நிலை சீர்பெறும்.

**கும்பம்:** பேச்சில் இனிமை காண்பீர்கள். நல்லவர்களின் அறிமுகத்தால் உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் புதிய சாதனை உருவாகும்.

**மீனம்:** நண்பரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் வளர்ச்சி பணி நிறைவேறும். உபரி பண வருமானம் கிடைக்கும். உடல் ஆரோக்கியம் பலம் பெறும்.

# சிரி







# twitter


**ஓகே கண்மணி @Satya_Twtz**
மகளுடன் தந்தை விளையாடும் போது மற்றவர்கள் ரசிப்பது குழந்தையை..! மனைவி ரசிப்பதோ தன் கணவனை..!

**சரவணன்@VANANM41**
பல செல்பிகளின் நடுவே ஊடுருவி கேமராமேனும் மணமக்களை புகைப்படம் எடுத்தார்

**Indupriya@indupriya911**
வேரில் வெந்நீரை ஊற்றிவிட்டு மொட்டு கருகுதுனு வருத்தப்படுறதில இருக்கு எம்மைச் சுற்றியிருப்பவர்களின் ஆஸ்கருக்கு தகுதியான வஞ்சக நடிப்பு...

**மெத்த வீட்டான்@**
கலைஞர் இன்று பேசும் நிலையில் இல்லை..ஆனால் கலைஞரை பற்றிதான் இன்று நாடே பேசுகிறது!

## இது என்னடா எமனுக்கு வந்த சோதனை




# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | | | 2 | | 6 | 9 | 4 | |
| | | | | 5 | 3 | | | |
| | | 1 | 9 | | | | 5 | |
| 8 | | 9 | 5 | | | | | 7 |
| | | 5 | | | | 1 | | |
| 7 | | | | | | 5 | | 2 |
| | 5 | | | | 9 | 6 | | |
| | | | 3 | 2 | 5 | | | |
| | 7 | 3 | 6 | | 4 | | | 5 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 6 | 3 | 8 | 2 | 4 | 7 | 9 | 1 |
| 2 | 8 | 9 | 5 | 7 | 1 | 4 | 6 | 3 |
| 7 | 4 | 1 | 6 | 9 | 3 | 2 | 8 | 5 |
| 8 | 1 | 5 | 2 | 3 | 9 | 6 | 4 | 7 |
| 4 | 3 | 2 | 7 | 5 | 6 | 8 | 1 | 9 |
| 6 | 9 | 7 | 4 | 1 | 8 | 5 | 3 | 2 |
| 1 | 5 | 8 | 3 | 4 | 2 | 9 | 7 | 6 |
| 9 | 7 | 6 | 1 | 8 | 5 | 3 | 2 | 4 |
| 3 | 2 | 4 | 9 | 6 | 7 | 1 | 5 | 8 |

நேற்றைய விடை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


நல் ஆரோக்கியத்துக்கு
றோயல்
சுத்தமான தேன்
உங்கள் நலன் ஆரோக்கியம் கருதி " ஆய்வுகூடத்தில்" தரம் பரிசோதிக்கப்பட்டு பொதியிடப்படுகின்றது.
Packed By:- Royal Industries
Marketed By:- சிவா நறுமணப் பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 021 222 2567
குறிப்பு:- யாழ்.மாவட்டத்திலுள்ள அனைத்துப் பார்மசிகளிலும் பலசரக்குக் கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.


## மரண அறிவித்தல்கள்

### திருமதி அமிர்தவல்லி இராசரெத்தினம்



பிறப்பு 24.01.1942 இறப்பு 02.06.2018

வேலணை மேற்கு 8ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், வேலணை வடக்கு 5 ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் தற்போது செட்டியார் தோட்டம், முத்திரைச் சந்தி, நல்லூர் இல்லத்தில் வசித்து வருமான திருமதி அமிர்தவல்லி இராசரெத்தினம் 02.06.2018 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் (கேணிக்கரை) - நாகமுத்து தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சபாபதி - செல்லம்மா (தில்லையாத்தை) தம்பதிகளின் மூத்த அன்பு மருமகளும், காலஞ்சென்ற இராசரெட்ணத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான ராசம்மா, இரத்தினம், தங்கம்மா, இலட்சுமி, சுந்தரவல்லி ஆகியோரின் அன்புச் சகோதரியும், நாகம்மா (சரசு), இரத்தினம், அன்னலட்சுமி (ராசாத்தி) ஆகியோரின் மைத்துனியும், இராசேந்திரன் (வேலணை), இராசலிங்கம் (பிரான்ஸ்), இராஜேஸ்வரி (கொழும்பு) ஆகியோரின் அன்புத் தாயாரும், சந்திரகலா, தயாநிதி, கலைச்செல்வன் (துரை) ஆகியோரின் அன்பு மாமியும், ஆதீஷன் (AGSJR), விகாஷன் (மங்கையற்கரசி வித்தியாலயம்), தனீஷன் (யாழ்.மத்திய கல்லூரி), ரம்யா (பிரான்ஸ்), தர்மிளா (பிரான்ஸ்), ரமணன் (பிரான்ஸ்), வருணி (சைவ மங்கையர் கழகம், கொழும்பு), மயூரேஸ் (பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி, கொழும்பு) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், ஆறுமுகம், மகேஸ்வரி, காலஞ்சென்றவர்களான கிருஷ்ணசாமி மனோண்மணி, சுப்பிரமணியம் நாகம்மா ஆகியோரின் சம்மந்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.06.2018) திங்கட்கிழமை செட்டியார் தோட்டம், முத்திரைச்சந்தி, நல்லூர் இல்லத்தில் முற்பகல் 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 12 மணியளவில் சாட்டி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

41/84, செட்டியார் தோட்டம்,
நல்லூர்.

தகவல்:
இராசேந்திரன் குடும்பத்தினர்.

(CS/17182)(11,17) 077 391 9957, 077 285 5336



பிறப்பு 15 . 04 . 1947
இறப்பு 03 . 06 . 2018

### திருமதி இந்திராதேவி இராமநாதன்

காரைநகர், தங்கோடையைப் பிறப்பிடமாகவும், கல்கிசை கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இந்திராதேவி இராமநாதன் 03.06.2018 ஞாயிற்று க் கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுடையார் வேலுப்பிள்ளை நாகலிங்கம் பார்வதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான E.V. ஆறுமுகம் காமாட்சி தம்பதியரின் அன்பு மருமகளும், இராமநாதனின் அன்பு மனைவியும், லம்போதரனின் ஆருயிர்த் தாயும் காலஞ்சென்ற பரமேஸ்வரி மற்றும் கமலாதேவி, சிவபாக்கியம், சோமசுந்தரம், மீனாட்சிசுந்தரம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான தம்பிராசா, திருவாதிரை மற்றும் சோமசுந்தரம், கணேசன், தவமணி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் 05.06.2018 செவ்வாய்க்கிழமை காலை 8 மணி முதல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகள் பி.ப. 2.00 மணியளவிலும் தகனக் கிரியைகள் மாலை 4.00 மணியளவிலும் கல்கிசை மயானத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றாம்.

இல. 174/1 - 1/2,
காலி வீதி, கல்கிசை.

தகவல் : கணவர்,
மகன் - லம்போதரன்
077 393 3928


பழைமை வாய்ந்த ஏழு தலைமுறைகளாக செய்து வரும்
ஆதி சக்தி வாய்ந்த மலையாள மந்திரம்

01. ஆண்/பெண் வசியம்
02. பிரிந்து சென்றவர்களை மூன்று பொழுதில் சேரும்படி செய்யமுடியும்.
03. வியாபார முன்னேற்றம்.
04. வீட்டில் ஒற்றுமை உண்டாக
05. போலியானவர்களிடம் ஏமாந்து விட்டீர்களா ?
ரகசியம் பேணப்படும்
ஒருமுறை எம்மை வந்து சந்தித்துப் பாருங்கள் !!
Note: (உங்களால் நேரில் வரமுடியாவிட்டால் பதிவு தபால் மூலம் செய்து கொள்ளலாம்)
றெங்கசாமி காளியம்மா
மாத்தளை - கண்டி வீதி, அம்பத்தன்ன.
077 327 2302/ 076 466 4153
(CS16480)(10)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

ஜனனம் 22 . 01 . 1962
மரணம் 17 . 05 . 2017



### அமரர் கண்ணையா நடராசா

ஆண்டொன்று ஆனதுவோ
ஆனாலும் ஆறவில்லை எம்துயரம்
வாழ்க்கை எனும் பாதையிலே
எம்மோடு பயணித்த எமது அப்பாவே!
இன்றுடன் ஓராண்டு முடிந்தாலும்
உங்கள் நினைவுகள் எம்மைவிட்டு
மறையாது அப்பா!

மாறாத நினைவுகளால் மனம்
வெந்து மாய்கின்றோம்
அழகிய உங்கள் சிரித்தமுகம்
என்றும் எம் நெஞ்சங்களில் குடியிருக்க
அன்புத் தெய்வமே!
ஆண்டவன் அடியில் சாந்தி பெறுங்கள்

கொடுக்குளாய்,
ஆழியவளை.

என்றும் நினைவில்
மனைவி, பிள்ளைகள்.

(AJA/17103)(11,17)

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 26 . 04 . 1930
அரன் அடியில் 30 . 05 . 2013



### பீதாம்பரம் ஜெகநாதன்

(இளைப்பாறிய நிர்வாக உத்தியோகத்தர் (AO) - நீர்ப்பாசனத் திணைக்களம்

திதி: வைகாசி அபரபட்ச ஷஸ்டி (04.06.2018)

அன்பு, ஆன்மீகம், இதயசுத்தி
ஈகைக்குணம் உன்னதப்பண்பு ஊண்மறத்தல்
எல்லாம் கற்பித்து, ஏடு தொடக்கியே
ஜெயிக்கவைத்த ஜெகநாதா.............
உங்கள் பிரிவைத் தாங்கும் வல்லமையைக் கற்பிக்காததேன்
வல்லமையை கற்பிக்க மறுபடி பிறந்து வா....
இறையாய் இருக்கும் உங்களை நம் எதிரில் காண...
ஆண்டுகள் ஐந்தல்ல ஜென்மங்கள் ஐந்தானாலும்
[illegible]

071 621 0346 (CS.12223)(13.17) குடும்பத்தினர்.


தேவை
புத்தூர் அச்சுவேலியில் இயங்கும் உணவகத்துக்கு அனுபவமுள்ள றொட்டி தயாரிப்பவர், சிற்றுண்டிகள் தயாரிப்பவர்
அப்பம் தயாரிப்பவர் உடன் தேவை
077 129 4121

ES Printers
அனைத்தும் தனித்துவமான கணினி வடிவமைப்புடன்

மக் பிரிண்ட் (MUG) 450/=

Books Binding

பனர் பிரிண்ட் (Banner), 35/=
Banners
தொடர்புகளுக்கு,
021 492 7471,
021 492 7472
esprintersjaffna@gmail.com
357, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# P.P.T EXPRESS

# விரிவாக்கல் சேவை

**29.05.2018 முதல் மக்கள் நலன்கருதி P.P.T Express தனது சேவையினை பண்டத்தரிப்பில் இருந்து இரவு 8.30 மணிக்கு கொழும்பு நோக்கி விஸ்தரிக்கின்றது**

யாழ்ப்பாணத்திலிருந்து இரவு - 10.00 மணி சேவையும் இடம் பெறுகின்றது.

இதனூடாக
பண்டத்தரிப்பு → வடலியடைப்பு → சித்தங்கேணி → சங்கானை → சண்டிலிப்பாய் → மானிப்பாய் → ஆனைக்கோட்டை → யாழ்ப்பாணம் → கொழும்பு நோக்கி பயணம் செய்யமுடியும்.

மூன்று நாட்களில் உங்கள் வீட்டுக்கதவை தட்டும் வெளிநாட்டு பார்சல் சேவை

யாழ்-கொழும்பு ஆசனப் பதிவுகள் வாகன விசேட சேவைகள் உலகின் அனைத்து நாடுகளுக்குமான விமானபயணச் சீட்டுக்களை பெற்றுக்கொள்ளலாம் வீசா சேவைகள்

**பயணிகள் சேவை , பொதிகள் சேவை**

**12 மணித்தியால யாழ் - கொழும்பு பார்சல் சேவை**




பண்டதரிப்பு சந்தியில் கிளையினை ஆரம்பித்து பஸ் சேவையுடன் பார்சல் சேவையினையும் மேற்கொள்கின்றது.
உள்நாட்டு வெளிநாட்டு பார்சல் சேவையினை இங்கு ஏற்றுக்கொள்ளலாம்


**Hotline 076 440 8947**

**T.P- 077 5731318 / 021 4923240**

---

## 38 ஆவது பிறந்த நாளில் 10 ஆம் ஆண்டு நினைவலைகள்

அமரர்
**யோகரட்ணம் கீதன்**
(Ceylinco Insurance)



மலர்வு
04.06.1980

உதிர்வு
31.05.2008

'நெருகல் உளன் ஒருவன் இன்றில்லை என்றும்
பெருமை உடைத்து இவ்வுலகு"

என்ற வள்ளுவரின் வாக்கை மெய்ப்பித்து எம்மையெல்லாம் அதிர்ச்சியிலும், ஆறாத்துயரிலும் ஆழ்த்திவிட்டு பெருமையுடன் காலமாகிய கீதனின் நீங்காத நினைவுகள் பத்து ஆண்டுகள் கடந்த நிலையிலும் அன்றுபோல் இன்றும் கலங்கித் தவிக்கின்றோம். பூமிதனில் நம் கடமை முடியாததால் போலும் இவ்வுலகில் பலர் பிறந்தார் இறந்தார் வாழ்ந்து கொண்டிருக்கிறார் வாழும் போதே இறந்தவர் போலே வாழ்பவர் பலர்

" தக்கார் தகவிலார் என்பது அவர் தம்
எச்சத்தால் அறியப்படும்"

என வள்ளுவன் கூறும் கருத்துக்கு அமைவாகவும் வாழ்ந்து காட்டி மறைந்த கீதன் தோன்றாத் துணையாக இருந்து தன் வழித்தோன்றல்களை வழிநடத்த வேண்டும் என இறைசக்தியோடு கூடிய அவரின் ஆத்மசக்தியை வேண்டிப் பிரார்த்திக்கும்.

தாய், தந்தை மற்றும்
குடும்பத்தினர்.

"மரணத்தின் பின் எவனொருவன் வாழ்கிறானோ
அவன் பாக்கியவான் ஆவான்"

"யோகீத்தா வாசம்"
18/1, காட்டுக்கந்தோர் ஒழுங்கை, சுண்டுக்குழி, யாழ்ப்பாணம்.

(CS/17...)

---

## மரண அறிவித்தல்

பிறப்பு
13 . 09 . 1929



இறப்பு
03 . 06 . 2018

**திருமதி கத்லீன் அரியவதி ஞானசேகரம்**
(ஓய்வுபெற்ற ஆசிரியை)

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கத்லீன் அரியவதி ஞானசேகரம் நேற்று (03.06.2018) ஞாயிற்றுக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அரியரட்ணம் தம்பதிகளின் புதல்வியும், காலஞ்சென்ற இராசையா அல்பேட் ஞானசேகரத்தின் அன்பு மனைவியும், ரன்ஜிட்குமார் (USA), ஞானகுமார் (Canada), ஜோய்ஸ் செல்வி (Dubai),பேல் (Malasia), செல்வகுமார் (Canada), நேசகுமார் (Cargills Ceylon PLC) ஆகியோரின் அன்புத் தாயாரும், நளினி, சாந்தம், மகேந்திரன், டியூட்றம் சாமுவேல், காலஞ்சென்ற ருசிட்டா மற்றும் வஜிரா ஆகியோரின் அன்பு மாமியாரும், நிறோசன், அஸ்வினி, யதுஸன், ஜெசூரன், சிரோமி, நயோமி, எபநேசர், ஹெப்சிபா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான எஸ்மி பரம் செல்வராஜா, தேவராஜா, கப்டன் யோகராஜா ஆகியோரின் அன்பு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் பிரதான வீதியில் அமைந்துள்ள ' White house Funeral Parlour ' இல் இன்று (04.06.2018) திங்கட்கிழமை காலை 9 மணிமுதல் மாலை 6 மணிவரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்னர் கொழும்புக்கு கொண்டு செல்லப்பட்டு 06.06.2018 புதன்கிழமை நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

28, 4ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

தகவல்: மகன்

**நேசகுமார் - 077 735 2367**


(CS/17188(11.17))

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றிக்கான சிறந்த வழி இலக்கை நிர்ணயித்தலே!

சி.நற்குணலிங்கம்

வாழ்க்கை ஒரு சந்தர்ப்பம். இந்தச் சந்தர்ப்பத்தை நாம் உபயோகிக்கும் முறையிலேயே எமது வாழ்வு அமையும். எமது செயற்பாடுகளில் எந்த வகையாக நோக்கினும் அங்கு இலக்கு இருக்க வேண்டும். ஒவ்வொரு மனிதனுக்கும் வாழ்க்கையில் இலக்கு என்பது அவசியம். நீங்கள் எடுத்துக் கொண்ட இலக்குத்தான் பிற்கால வாழ்க்கையை மாற்றியமைக்கும் சிறந்த திருப்பு முனை.



**மூவித வாழ்க்கைகள்**

வாழ்க்கை என்பது மூன்று வகைப்படும். பிடித்த வாழ்க்கையை வாழ்வது, கிடைத்த வாழ்க்கையை வாழ்வது, வேண்டா வெறுப்பாக வாழ்வது. இவற்றுள் பிடித்த வாழ்க்கையை வாழ வாழ்வில் இலக்கு இருக்க வேண்டும். இல்லையேல் கிடைத்த வாழ்வை அல்லது வேண்டா வெறுப்பான வாழ்வையே வாழ்ந்து முடிக்க நேரிடும்.

இலக்குக்காக அர்ப்பணிப்புடன் பணியாற்றுங்கள். உங்களுக்கு ஆதரவான காலம் வந்தே தீரும். வாழும் காலம் எவ்வளவாகவும் இருக்கலாம். ஆனால் இலக்கை அடைவதே எம்முடைய உயிர் மூச்சாக இருக்க வேண்டும்.

வாழ்வில் வெற்றிபெற வேண்டுமாயின் இலக்கும் அதை நோக்கிய பயணமும் அவசியம். நாம் எப்படியான வாழ்வை விரும்புகிறோமோ அதற்கேற்ப எமக்கான இலக்கை அமைக்க வேண்டும். இலக்கை அடைந்து விட்டால் வாழ்வில் ஒரு பிடிப்பும், நாம் சாதித்து விட்டோம் என்ற தன்னிறைவும் கிடைக்கும். அத்துடன் இன்னும் பல வெற்றிகளைச் சாதிக்க வேண்டும் என்ற உந்துதலும் ஏற்படும். கடைசி முயற்சியில் இருக்கிறது. தான் முயற்சித்த அத்தனையும் நம்பிக்கையாவதும், அவநம்பிக்கையாவதும். எனவே இறுதிவரை முயற்சித்து இலக்கை எட்ட வேண்டும்.

**இலக்கு இன்றியமையாதது**

இலக்குகளை சிந்திப்பவனையே அது நெருங்கி வரும். இலக்குகள் எமது; வழியை வளப்படுத்தும். இலக்கு இல்



லாத கப்பல்கள் கரை சேர்வதில்லை. இலக்கு இல்லாத வாழ்க்கை வெறும் பதற்றமே.

"இலக்கு என்பது வாழ்வை காவியமாக்குகிறது. இலக்கு இல்லாத மனிதன், இலக்கு இல்லாத கப்பலைப் போல அலைவான். இலக்குள்ள மனிதன் எதையும் கலங்காது ஏற்பான். மிகவும் சிறந்த, நேர்மறையான தாக்கத்தை தரவல்ல முதன்மை இலக்கு, அந்த இலக்கை அடைவதற்கு வேண்டிய திறன்கள், தகவல்கள், உதவிகள் என்பவற்றை நோக்குதல், அதன் அடிப்படையில் செயற்பாட்டைத் தொடருதல்" என மனித இலக்குகள் பற்றி ஆய்வு செய்த நிபுணர் பிரையின்ரேசி என்பவர் குறிப்பிட்டுள்ளார். எந்தவொரு செயலையும் சிறப்பாகச் செய்ய அர்ப்பணிப்புடன் தெளிவான இலக்கு அவசியம்.

குறுகிய காலகட்டத்துக்கு சில இலக்குகளையும், நெடுங்கால இலக்குகளையும் வரையறுத்து இலக்கு நோக்கிய பாதையில் பயணிக்கும் போது எதிர்ப்படும் தடைக்கற்களை விலக்கிச் செல்ல வேண்டும். பயணம் இடையில் தடைப்பட இடமளிக்கக்கூடாது. நேற்று சாத்தியமற்றதாய் இருந்தது இன்று சாத்தியமாகும் என்ற மகாத்மா காந்தியின் வார்த்தைக்கிணங்க செயற்படுபவன் இலக்கை அடைவான். இலக்கை அடைவதென்பது அவ்வளவு இலகுவான ஒன்றல்ல. இதற்கான பயணத்தில் உறுதி நிலை அவசியம். அத்துடன் மற்றவர்களது கருத்துக்கள், ஆலோசனைகள் உள்வாங்கப்படுவதும், மீளாய்வு செய்வதும் இலக்கை எட்ட உதவும். இலக்கைக் கனவிலும், நனவிலும் நிலை நிறுத்தி செயற்பட்டால் வாழ்வில் சிறப்படையலாம்.

இலக்கை அடைவதற்கு முயல்பவர்களின் கண்களில் அதனை அடைவதற்கான வெறி தென்பட வேண்டும். அப்போதுதான் இலக்கை நோக்கிய பயணத்தில் எமக்கு ஏற்படும் இடையூறுகளைத் தகர்த்து இலக்கு நோக்கி முன்னேறிச் செல்ல முடியும். இலக்கு இல்லாத வாழ்வு வாழ்வாகாது. இலக்கு இல்லாது கெட்டேனே என்கிறார் அப்பரடிகள். இலக்கு என்பது உயர்ந்ததாகவும், விசாலமானதாகவும், பெருந்தன்மை கொண்டதாகவும் அமைவதே சிறந்ததாகும். இளமையிலேயே இலக்கை வகுத்துக் கொள்ள வேண்டும். இலக்கு அடையக் கூடியதாக வும், குறிப்பிட்ட காலத்துக்குள் அடையக் கூடியதாகவும், எளிதில் அடையக்கூடியதாகவும் இருக்க வேண்டும். எவரும் பிறக்கும் போது வரம் பெற்றும், வல்லமைகளை சுமந்து கொண்டும் பிறப்பதில்லை. ஒருவனது இலக்கே அவனை வாழ்வில் வெற்றி பெறச் செய்கின்றது.

**இலக்குகள் நிர்ணயிக்கப்படுதலில் துணிச்சலின் வகிபங்கும் அதிகம்**

வாழ்க்கையில் சாதிக்க வேண்டுமெனில் மனம் சொல்லும் வாழ்வைத் தேடாது. இப்படித்தான் வாழவேண்டும் என்ற வரம்பிடையில் வாழ்ந்தால் இலக்குக்கும் எமக்குமான தூரம் குறைந்து விடும். அப்போது இலக்கை இலகுவாக அடைந்துவிடலாம். வாழ்வில் வெற்றிபெற தோல்வி ஒரு தடையல்ல. இலக்கே ஒரு பலம். எமக்கான [illegible] தெரிந்தவர்களாலோ வகுக்கப்படக்கூடாது. எமது இலக்கைக் கட்டாயமாக நாம்தான் நிர்ண யிக்க வேண்டும். துணிச்சல் இல்லாதவனுக்கு இலக்கு இல்லை. துணிந்து விட்டால் ஆழ்மனம் இலக்கை அடையளாம் காட்டும். இலக்குகள் புதிதுபுதிதாக உருவாக்கப்பட வேண்டியவை. இலக்குடன் உங்களுக்காக வாழுங்கள். உங்கள் ஒவ்வொரு மூச்சுக்கும் விலை இருக்கிறது.

உங்களுக்குள் ஒரு ஒலி கேட்கும். அதை உற்றுக் கேளுங்கள். அது நீங்கள் செல்ல வேண்டிய இலக்குக்கான பாதை எது என்பதைச் சொல்லிக் கொண்டே இருக்கும். அதன்வழி சென்றால் உலகம் உங்களைத் திரும்பிப் பார்க்கும். ஒவ்வொரு இளைஞனும், யுவதியும் கிடைத்த வாழ்வுக்கு எவ்வளவு பெருமை கொடுக்க முடியுமோ அவ்வளவு பெருமை கொடுக்க இலக்குடன் போராட வேண்டும். நிச்சயமாக சாதனைச் சிகரத்தை எட்டமுடியும். இன்றைய இளம் சந்ததியினர் இலக்கு இல்லாது வாழ்வார்களாயின் தம்மைத் தாமே வெறுக்க நேரிடும். அது அவன் வாழ்வில் கீழ்நிலைக்குச் செல்வதற்கான கதவு திறந்துவிட்டதென்பது பொருள். எதை அடைய வேண்டும் என்கின்ற தெளிவு இருந்தால்தான் அதை நீங்கள் அடைய முடியும். அடைய வேண்டியது எது என்கின்ற முடிவே இல்லையாயின் எதை அடைய முடியும்? எமக்கு எது வேண்டும்? என்கின்ற தெளிவு முதலில் உங்களுக்குக் கண்டிப்பாக இருக்க வேண்டும். அமெரிக்க அரச தலைவராக இருந்த கென்னடி தன்னைக் காணவரும் இளைஞர்கள், மாணவர்களுடன் சிறிது நேரம் உரையாடுவது வழக்கம். ஒரு நாள் அவரைச் சந்திக்க வந்த மாணவன் ஒருவனைப் பார்த்து திடீரென்று உன் எதிர்கால இலக்கு என்ன? என வினாவினார். உடனும் அந்த மாணவன் "இன்று நீங்கள் இருக்கும் இடத்தில் நாளை நான் இருக்க வேண்டும் இதுதான் என் இலக்கு" என்றான். "குட்" என்று வாழ்த்திவிட்டு கென்னடி நகர்ந்தார். அந்த மாணவன் வேறு யாருமில்லை அமெரிக்க அதிபர் பில் கிளிங்டன்.

நாளை

05.06.2018

செவ்வாய்க்கிழமை

வைகாசி 22

திதி: ஷஷ்டி காலை. 06.40
நட்சத்திரம்: அவிட்டம் பி.ப.03.29
சுபநேரம்: 10.22–11.52 வரை
ராகுகாலம்: 02.52–04.22

4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
15 . 05 . 1939

மறைவு
04 . 06 . 2014



திருமதி சறோஜினி துரைசிங்கம்
(B.Sc (Ceylon), விஞ்ஞான ஆசிரியை)



பலருக்கு மரணமே துன்பங்களிலிருந்து விடுதலை அளிக்கிறது. மரணம் துன்பங்களில் மட்டுமல்ல பாவங்களில் இருந்தும் விடுதலை அளிக்கிறது. இறப்பு என்று ஒன்றில்லை நாம் மறக்கும் பொழுது தான் இறக்கின்றனர். நீ எங்களுடன் தான் இன்றும் வாழ்கின்றாய்

நீ வாழ்ந்த பொழுது உன்னை யாருமே வெறுக்கவில்லை உன்னுடைய வாழ்க்கை நிறைவானதாக விருந்ததென்ற நினைப்பில் நீ சென்றுவிட்டாய் ஆனால் எங்களால் உன்னை மறக்க முடியவில்லை மறக்கவும் மாட்டோம் நீ விட்டுச் சென்றதோ உனது அன்பையும் அரவணைப்பையும் இனி எங்கு தான் இவற்றைத் தேடுவது.

த.துரைசிங்கம், பிள்ளைகள்- பிரதீபன், மலர்விழி மற்றும் சிவதீபன் இவர்களுடன் பேரர்கள், கனிகா, கார்த்திகன், பைரஜா, மிதுலன், கௌதமன், சறோஜ் - சிதேஷ் [illegible] முதலானோருடன் மருமக்கள் லோகா, தெய்வகுமார் மற்றும் [illegible]

588/4, நாவலர் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உள்ளத்தனையது உயர்வு

மருத நிலத்தில் (வயலும் வயல் சார்ந்த நிலமும் மருதம்) பொய்கை ஒன்று காணப்பட்டது. நீண்ட காலம் மழையில்லாமையால் அதில் சிறிது நீரே காணப்பட்டது. அந்தப்பொய்கையில் தாமரையும், அல்லியும் அங்கங்கே பூத்து நின்றன. பொய்கைக் கரையில் சில நாரைகள் தமது இரைக்கான மீன்களைத் தேடிக் கொண்டிருந்தன. பொய்கையின் கரையில் ஓங்கி வளர்ந்து நின்ற மருத மரத்திலே மீன்கொத்திப் பறவைகளும் அமர்ந்திருந்தன.

நீண்ட கால வறட்சிக்குப்பின் ஒருநாள் வானத்திலே கருமுகில்கள் திரண்டன. அப்போது மயில்கள் தோகைகளை விரித்து ஆடின. குயில்கள் கூவுவதை மறந்து வாடியிருந்தன. வானம் இருண்டது. குளிர்காற்று வீசியது. மழை சோ எனப் பொழிந்தது.

வறண்டு காணப்பட்ட பொய்கையில் கொஞ்சம் கொஞ்சமாக நீர் நிறையத் தொடங்கியது. மழைவிடாமல் தொடர்ந்து பெய்தது. காலையில் பெய்யத் தொடங்கிய மழை மாலை வரை தொடர்ந்து பெய்தது. பொய்கையில் இருந்த தாமரை, அல்லி மலர்களும் மனம் மகிழ்ந்தன. பொய்கையில் நீர் நிறைய மலர்களின் தண்டுகளும் நீண்டு நீண்டு வளர்ந்தன. பூக்களும் மொட்டுக்களும் நீருக்கு மேலே தலை நிமிர்ந்து நின்றன.

மழை மாலையிலும் நிற்கவில்லை. காலை வரை கடும் மழை பெய்தது. பொய்கையால் நீர்வழிந்து ஓடியது.

பொய்கையில் நீர் வடிந்தோடினாலும் அதில் இருந்த தாமரை மலர்களும் அல்லி மலர்களும் அவற்றின் மொட்டுக்களும் நீரில் அமிழ்ந்து மூழ்கிப் போகவில்லை. காலையில் தண்ணீருக்கு மேலே நிமிர்ந்து நின்றன. பொய்கையிலே நீர் மேலுக்கு மேலுக்கு உயர்ந்து கொண்டு செல்ல அந்த மலர்களின் தண்டுகளும் நீண்டு கொண்டு சென்றதாலேயே பூக்கள் நீரில் மூழ்காமல் நீர்மட்டத்தின் மேல் கம்பீரமாய் தலைநீட்டி நின்றன.

*வெள்ளத்தனையது மலர் நீட்டம்- மாந்தர்தம்*
*உள்ளத்தனையது உயர்வு .*
என்றார் வள்ளுவர்.

மலர் நீட்டம் போன்றதே மனித வாழ்க்கை. ஒவ்வொருவரது மனத்தளவே தான் அவர்களது வாழ்க்கை அமைந்துவிடுகிறது. இந்த உலகை நோக்கின் சிலர் வாழ்க்கையில் உயர்ந்துகொண்டே செல்லவர். சிலர் உயர்ந்து பின்னர் தாழ்ந்து விடுவர். சிலரைப் புகழ் தேடிவருகிறது. சிலர் புகழைத் தேடி அலைகின்றனர்.

சிலர் நல்லவர்களாக வாழ்ந்து நல்லவர்களாக இறக்கின்றனர். சிலர் நல்லவர்களாக வாழ்ந்து பின் கெட்டவர்களாக மடிகின்றனர். உள்ளத்தில் நல்ல எண்ணங்கள் உருவாக வேண்டும். பிறருக்கு தீமை கருதாத உள்ளம் படைத்தவர்களாக வாழ வேண்டும். தீமை செய்பவர்க்கும் நன்மை செய்யும் பணர்புள்ளம் வேண்டும். குளத்திலே நீர் மட்டம் உயர உயர அதிலுள்ள மலர்களின் காம்புகளும் நீட்சியடையும். இதனால் காம்புகள் நீளமாக நீளமாக பூக்கள் நீரின் மட்டத்துக்கு மேல் உயர்வடைகின்றன.

*மனித வாழ்விலும் நல்லசிந்தனைகளும் விடாமுயற்சிகளும் மனிதனில் ஏற்படும் போது அவனது வாழ்வும் உயர்ந்து செல்லும் என்பதாம்.*

# கொடூரமான காளான்கள்



அமெரிக்காவின் கிழக்கு ஓரிகன் மலைப் பகுதிகளில் உலகிலேயே மிகப் பழமையான ஆச்சரியம் அளிக்கக் கூடிய ஓர் உயிரினம் வாழ்ந்து கொண்டிருக்கிறது. அது ஒருவகைத் தேன் காளான். 2ஆயிரத்து 200ஏக்கர் நிலப்பரப்பில் இந்தக்காளான்கள் பரந்து விரிந்து இருக்கின்றன. இவை அனைத்தும் கண்களுக்குத் தெரியாத தெரியாத ஒரே ஒரு வித்திலிருந்துதான் உருவாகியிருக்கின்றன என்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள். இந்தக் காளான் உருவாகக் குறைந்தது 2ஆயிரத்து 400ஆண்டுகள் முதல் 8ஆயிரம் ஆண்டுகள் ஆகியிருக்கலாம் என்கிறார்கள் தாவரவியல் வல்லுநர்கள்.

இந்தத் தேன் காளான்கள் மெதுவாகப் படர்ந்து தாம் செல்லும் வழியில் உள்ள உயிரினங்களைக் கொன்று விடுகின்றன. ஒவ்வோர் இலையுதிர் காலத்தின் போதும் மஞ்சள் வண்ணக் காளான்களாக தங்கள் இருப்பை வெளிக்காட்டும் இவை. சிலவாரங்களில் வெள்ளை நிறமாக மாறி சுண்ணாம்பு படர்ந்திருப்பதுபோல காட்சி தருகின்றன. இந்தக்காளான்கள் மரங்களின் வேர்களில் இருந்து சத்தை உறிஞ்சி தம்மை வளர்த்துக் கொள்கின்றன. இதனால் மரங்கள் சத்துக்களை இழந்து 20-30 ஆண்டுகளின் பின்னர் இறக்கும் நிலைக்குச் சென்று விடுகின்றன. காளான்களால் ஒரு மரத்தைக் கொலை செய்ய இயலும் என்பதை மக்களால் நம்ப முடிவதில்லை. மரத்துக்குத் தேவையான சத்துக்களும் தண்ணீரும் தொடர்ச்சியாகக் கிடைக்காது விட்டால் அவை காலப்போக்கில் மடிந்துதான் போக வேண்டும். தேன் காளான்கள் இப்படித்தான் அனைத்தையும் அபகரித்துக் கொண்டு மரங்களை வீழ்த்தி விடுகின்றன என்கிறார் அமெரிக்காவைச் சேர்ந்த தாவரவியல் ஆராய்ச்சியாளர் கிரைக் பிலீப் .



# கடற்பாசி

கடற்பாசி என்றதும் அதனை சர்வ சாதரணமாக நினைத்து விடக்கூடாது. கடற்பாசியிலிருந்து ஆடைகளுக்குப் போடப்படும் சாயம், சொக்லேட், ஐஸ்கிறீம், பற்பசை, வாசனைத் திரவியங்கள் மற்றும் புற்றுநோய், சக்கரை நோய், மூட்டுவலி, காசநோய் என்பவற்றுக்கான மருந்து வகைகள் உட்பட 240க்கும் மேற்பட்ட உற்பத்திகள் தயாரிக்கப்படுகின்றன. அது மட்டுமல்லாமல் இந்தப்பாசிகளில் அதிகமான புரதச்சத்தும் விரைவில் சமிபாடடையத்தக்க தன்மையும் தாய்ப்பாலில் மட்டுமே இருக்கின்ற கொழுப்பு அமிலமும் காணப்படுகின்றமை இயற்கை எமக்களித்த மற்றுமொரு வரப்பிரசாதம். இவ்வாறு பல்வேறு பயன்களை அள்ளி வழங்கும்கடற்பாசியை உற்பத்திசெய்வதன் மூலம் வெளிநாடுகளில் மட்டுமன்றி உள்நாட்டிலும் ஏராளமானோர் மிகக் குறைந்த செலவில் அதிக இலாபம் ஈட்டி வருகின்றனர். 1960ஆம் ஆண்டில் பிலிப்பைன்ஸ் நாட்டில் ஆரம்பிக்கப்பட்ட இந்தக் கடற்பாசி வளர்ப்புமுறை ஏனைய நாடுகளிலும் அறிமுகமாகி 2013ஆம் ஆண்டிலிருந்து இலங்கையிலும் பெருமளவில் முன்னெடுக்கப்படுகிறது. இதற்கான விதைகளை "ஹேலிஸ் அக்ரிகல்ச்சர்" நிறுவனம் பிலிப்பைன்ஸிலிருந்து இறக்குமதி செய்து கடற்தொழில் கூட்டுறவு சங்கங்களுடன் சேர்ந்து தெரிவு செய்யப்பட்ட கடல் பகுதிகளைச் சேர்ந்து கடல் தொழிலாளர்களுக்கு வழங்கி வருவதுடன், பயிரிடப்பட்டு அறுவடை செய்யப்படும் பாசிகளைப் பச்சையாகவும், காய்ந்த நிலையிலும் அந்த நிறுவனமே கொள்வனவும் செய்து வருகின்றது. வடமாகாணத்தில் பூநகரி வலைப்பாடு, நையினாதீவு, இரணை மாநகர், பள்ளிக்குடா போன்ற கடற்பிரதேசங்களில் பண்ணைகள் அமைத்து இந்தப்பாசிகள் பயிரிடப்படுகின்றன. இந்தப் பகுதியினர் பாசிவளர்ப்பில் அதிகளவு வருமானம் ஈட்டுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

பாசி வளர்ப்பதற்கான இடத்தைத் தெரிவு செய்வது மிகவும் அவசியம். ஆறு கடலுடன் சேரும் இடம் மற்றும் மிக அதிகமாக அலைகள் மோதும் இடத்தைத் தவிர்த்து தண்ணீரில் இயக்கம் சீராக உள்ள கடல் தாவரங்கள் அற்ற சுத்தமான பகுதியைத் தெரிவு செய்ய வேண்டும். குறைந்தது 3அடிக்குக் குறையாத மிதவை அமைத்து பயிரிடுவதன் மூலம் அதிக விளைச்சலைப் பெறக்கூடியதுடன் அதிக வருமானத்தையும் ஈட்டமுடியும்.

கடற்பாசிகள் மிகவேகமாக வளரக்கூடியவை என்பதால் 45முதல் 60நாள்களில் அவற்றை அறுவடை செய்யலாம். வெளியே எடுக்கப்பட்ட கடற்பாசிகளில் ஒட்டியிருக்கும் தேவையற்ற களைகள், கற்கள், சிப்பிகள் போன்றவற்றை அகற்றிய பின்னர் வெளியில் உலரவைக்க வேண்டும். காயவைக்கும் இடங்களில் விலங்குகள் பறவைகளை அனுமதிக்கக் கூடாது. கடற்பாசி நன்கு உலர்ந்ததும் அவற்றைச் சாக்குகளில் மூட்டையாகக்கட்டி உலர்ந்த சுத்தமான இடத்தில் வைக்க வேண்டும்.10கிலோ பச்சைப்பாசி உலர்ந்த பின் 1கிலோ நிறையை பெறும். பின்னர் விற்பனைக்கு அனுப்பப்படும்.

# வர்ணம் தீட்டுவோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பக்கப்பாட்டுப் பாடுதல் என்றால் என்ன?

அண்மையில் நல்லூர்-சங்கிலியன் மைதானத்தில் புத்தாண்டு தினத்தையொட்டி, பட்டி மண்டபம் இடம்பெற்றது. அதில் உள்ளூர்ப் பேச்சாளர்கள் கன்னை பிரிந்து வாதிட்டனர். தமிழகத்திலிருந்து வருகை தந்திருந்த இருவர் நடுவர்களாக இருந்தனர். இதன்போது உள்ளூர்ப் பேச்சாளர் ஒருவர் "பக்கப்பாட்டு பாடுகின்றார்'' என்று ஒரு வார்த்தையைக் கூறியதும், "பக்கப்பாட்டா? அப்படின்னா என்ன?" என நடுவர்கள் இருவரும் ஒருசேர விழி பிதுங்கினர்.
நம் நாட்டு இலக்கியப் படைப்புக்களைப் புரிந்துகொள்ள ஓர் அகராதி தேவையென இந்திய எழுத்தாளர் ஜெயமோகன் ஒருமுறை குறிப்பிட்டதுதான் ஞாபகத்துக்கு வந்தது.

**வீட்டில் பக்கப்பாட்டுக்கு ஓர் உதாரணம்**

பக்கப்பாட்டுப் பாடுதல் என்றால் ஒருவர் கூறுவதை, அது சரியோ, பிழையோ அதை ஆமோதித்து, இன்னொருவர் கூறுவாரானால் அதையே பக்கப்பாட்டு பாடுதல் என்பர். உதாரணமாக, ஒரு குடும்பத்தில், தாய் ஒருவர் "மகன் இப்போது படிப்பில் கவனமில்லை. ஒரே விளை யாட்டுத்தான்" என்று முறைப்பாடு வைக்கும்போது பாட்டியாரும் "கொஞ்ச நாளாக நானும் கவனிச்சுக்கொண்டுதான் இருக்கிறன். நண்பர்களுடன் திரிவது அதிகரித்துவிட்டது" என்று கூறினால், அங்கு சிறுவனின் தாயாருக்கு பாட்டிக்காரி பக்கப்பாட்டு பாடுவதாகக் கூறுவார்கள்.

---

**இந்தப் 'பக்கப்பாட்டு பாடுதல்' என்னும் சொற்றொடர் எமது கூத்துகளிலிருந்து வந்த சொற் பாவனையாக இருக்கலாமென எண்ணுகின்றேன். ஆயினும் எமது அன்றாட வாழ்வில் பல சந்தர்ப்பங்களிலும் சர்வசாதாரணமாக கூறப்படும் வார்த்தையாதலால், படித்தோர் முதல் பாமரர் வரை இதைப் புரிந்துகொள்வர். அத்துடன் இந்த உள்ளூர்ப் பேச்சு வழக்கு, பட்டிமண்டப நடுவர்களாக இருந்த இந்தியர்களுக்குத் தெரியாத ஒன்றாயிற்று.**

---

**கூத்துக் கலையில் பக்கப்பாட்டு**

கூத்துக்கட்டுகிற நிகழ்வில் அல்லது கலையில் மேடையிலுள்ள நடிகர் பாடும்போது, மேடையில் உள்ள இன்னொருவரும் சேர்ந்து பாடுகின்ற நடைமுறையிருந்தது. இங்கு நடிகரொடு சேர்ந்து பாடுகிற மற்றவரை பக்கப்பாட்டு பாடுபவர் என்பர்.
இசை நாடகங்களில் ஹார்மோனியம் வாசிப்பவர் மேடையிலுள்ள பாத்திரத்துடன் சேர்ந்து பாடுவதுண்டு. அதுவும் பக்கப்பாட்டெனப்படும். சில வேளைகளில் பக்கவாத்தியம் வாசிப்பவரை விட பக்கப்பாட்டுக்கெனவும் ஒரு வல்லுநர் இருப்பார். முன்னைய கால நாடகங்களின்போது இன்னார் பக்கப்பாட்டுப் பாடுவாரென நாடக அறிவித்தல் துண்டுகளிலும்(நோட்டீஸ்) இடம்பெறுவதுண்டு. இதைப் 'பிற்பாட்டு பாடுதல்' என்றும் கூறுவதுண்டு.

**இன்னும் பல கலைகளில் பக்கப்பாட்டு**

மேடையில் பாத்திரங்கள் தோன்றாதுள்ள இடைவேளைகளில், திரை திறக்கப்படும் வரை உள்ளிருந்து ஒருவர் பாடுவதுமுண்டு. (தற்போதைய கிரிக்கெட் தொலைக்காட்சி ஒலிபரப்பின்போது, ஒரு பந்துப் பரிமாற்றத்துக்கும் மற்றைய பந்துப் பரிமாற்றத்துக்குமிடையில் விளம்பரம் இடம்பெறுவது போலென்று வையுங்களேன்.)
அவ்வாறு பாடுபவரையும் பக்கப்பாட்டுக்காரர் எனக் கூறுவதுண்டு. சிலவேளைகளில், நாடகமொன்றின்போது பாத்திரமும் பக்கப் பாட்டுக்காரரும் தமது சங்கீத வல்லமையைக் காட்டு முகமாக ஒரு சபா வைப்பதும், போட்டியாகப் பாடுவதும் இடம்பெற்றகாலமும் இருந்தது. நல்ல 'பக்காவாக' இருக்கும். இது இசை இரசிகர்களுக்கு விருந்தாக அமைந்தும்விடும்.

**இங்கு சாதாரணமானவர்களும் புரிந்து கொள்வர்**

இந்தப் 'பக்கப்பாட்டு பாடுதல்' என்னும் சொற்றொடர் எமது கூத்துகளிலிருந்து வந்த சொற் பாவனையாக இருக்கலாமென எண்ணுகின்றேன். ஆயினும் எமது அன்றாட வாழ்வில் பல சந்தர்ப்பங்களிலும் சர்வசாதாரணமாக கூறப்படும் வார்த்தையாதலால், இங்குள்ள படித்தோர் முதல் பாமரர் வரை இதைப் புரிந்துகொள்வர். அத்துடன் இந்த உள்ளூர்ப் பேச்சுவழக்கு, பட்டிமண்டப நடுவர்களாக இருந்த இந்தியர்களுக்குத் தெரியாத ஒன்றாயிற்று. தவில் நாதஸ்வரக் கச்சேரிகளின்போது, நாதஸ்வரகாரருடன் ஒருவர் ஒத்து ஊதுவார், இணையாக நாதஸ்வரம் வாசிப்பார். இதுவும் ஓரளவு பக்கப்பாட்டு பாடுதல் தான். அந்தவகையில் பக்கப்பாட்டு பாடுதல் என்பது 'ஒத்து ஊதுதல்' என்பதற்கும் ஒப்பாகுமென எண்ணுகின்றேன். தமிழகத்திலும் ஒத்தூதுதல் என்கின்ற சொற்பாவனை சர்வ சாதரணமானதாகும்.

**பந்தம் பிடித்தல்**

கூத்திலிருந்து வந்து பயன்பாட்டிலுள்ள இன்னொரு சொல் 'பந்தம் பிடித்தல்' என்பதாகும். ' காஸ்' விளக்கு, மின் விளக்குகள் அரங்குக்கு வருமுன்னர் இரவு கூத்து நடக்கும் மேடையைச் சுற்றி வரத் தீப் பந்தங்கள் கொழுத்தப்பட்டு அந்த ஒளியிலேயே கூத்துக்கள் ஆடப்பட்டு வந்தன. பாத்திரங்களின் முகம் தெளிவாகத் தெரிவதற்காக, முகப்பூச்சு - அரிதாரம் மிகையாகப் பூசப்படும். போதாக்குறைக்கு மின்னுவதற்காக, முகத்தில் வெள்ளித்துகள் போன்ற (சில்வர் டஸ்ற்) மினுக்கமான துகள்களும் முகத்தில் பூசப்படும்.
முதன்மைப் பாத்திரம் மேடையில் தோன்றும்போது அவருடன் கூடவே இன்னொருவர் அந்தப் பாத்திரத்துக்கு ஒளியூட்டுவதற்காக, ஒரு பந்தம் பிடித்து வருவார். பாத்திரம் ஆடும்போது அவரும் முன்னுக்குப் போய், பின்னுக்குவந்து, பக்கவாட்டுக்கென ஆடியாடி பந்தம் பிடிப்பார். தேவையான இடத்து வீசானம் ஆட்டம் எட்டும் போட்டு ஆடுவார். (மோட்டார் அனுமதிப் பத்திரம் பெற மோட்டார் சைக்கிளில் எட்டுப் போடுவதுபோல) இவ்வாறு பந்தம் பிடித்து ஆடுபவர் நாளடைவில் ஆட்டம் கைவரப் பெற்று அரசனாகவும், மந்திரியாகவும் பாத்திரம் ஏற்று ஆடத் தொடங்கிவிட்டமையம் நிகழ்ந்தது. இதைத்தான் பந்தம் பிடித்து முன்னுக்கு வந்தவர் எனக் கூறுகின்றோம். இப்படி நமது உள்ளூர் வழக்கிலுள்ள சங்கதிகள் ஏராளம்!




ராசி அதிர்ஷ்டம் — திகதி 03.06.2018 — வெற்றி வாரம் 2306 — வர்ணம் ஊதா
வெற்றி இலக்கங்கள் 06 15 34 60 — செவ்வாய்க் கிழமை வெற்றிப் பொதி ரூ. 2,425,008/=

கோடிபதி சனிதா — சீட்டிழுப்பு வாரம்: 297 — அடுத்த செவ்வாய்க்கிழமைக்கான ஜக்பொட் ரூ. 82,182,783/- — சீட்டிழுப்பு திகதி: 2018.06.03
H 05 06 31 41

அத கோடிபதி — சீட்டிழுப்பு வாரம்: 270 — இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 70,552,045/- — சீட்டிழுப்பு திகதி: 2018.06.03
வெற்றி இலக்கங்கள் 15 51 61 70 Y

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 811 — சீட்டிழுப்பு திகதி 2018.06.02 சனிக்கிழமை
U 20 41 51 71 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 41,227,496/-


## ஓராண்டு நினைவஞ்சலி

திருமதி
**கமலாம்பிகை செல்லையா**



அன்னை மடியில்
25.09.1935

ஆண்டவனடியில்
17.05.2017

திதி: 04.06.2018

எங்கள் பாசமலரே அம்மா
நீங்கள் மறைந்து ஓராண்டு போய்விட்டதம்மா
ஓராண்டென்ன ஓராயிரம் ஆண்டுகள்
போய்விட்டாலும் எங்கள் மனதை விட்டு
அகலமாட்டீர்கள் அம்மா!
என்றும் எங்களுடனேயே இருப்பீர்கள் அம்மா

தேவாலய ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

என்றும் உங்கள் நீங்காத நினைவுகளுடன் வாழும்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர்
**யோசேப் இம்மானுவேல்**



தோற்றம்
16.02.1938

மறைவு
05.05.2018


அகல்விளக்காய் ஒளிதந்து
ஆலமரம் போல் தழைத்தோங்கி
இக மதில் செழிப்புடன் வாழ்வதற்கு
அன்பின் வழிகாட்டிய எம் தெய்வத்துக்கு

இன்று (04.06.2018) திங்கட்கிழமை காலை 6.00 மணியளவில் நாவாந்துறை சென்நீக்கிலஸ் ஆலயத்தில் நடைபெறும் இரங்கல் திருப்பலியில் அவரது ஆன்மா இளைப்பாற வேண்டி கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

கனடா (cs. 17180) (13)

## மரண அறிவித்தல்



**கந்தையா இராசேந்திரம்** *(ஆனந்தம் ஆசாரி)*

நல்லூரைப் பிறப்பிடமாகவும் கல்வியங்காட்டை வசிப்பிடமாகவும் கந்தையா இராசேந்திரம் (ஆனந்தம் ஆசாரி) நேற்று (03.06.2018) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.06.2018) திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 211 5470, 077 908 5045

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# கிட்டிவேக்

## ஒற்றுமையின் சின்னம்



[redacted] பதுமகோமளை

மனிதர்களிடையேயான இனப்பெருக்கச் செயற்பாட்டைப் பொறுத்தவரையிலே அண்ணன்,தங்கை போன்ற நெருங்கிய குருதி உறவுகளில் பாலுறவு தவிர்க்கப்பட்டுள்ளது.

அதேபோன்றே சிலவகையான பறவை, எலி, பல்லி இனங்களிலும் நெருங்கிய குருதி உறவுகளுக்கிடையேயான பாலுறவு தவிர்க்கப்படுகிறது என்பது ஆய்வுகளின் மூலம் தெரிய வருகிறது. குறிப்பாக கறுப்புக்கால்களை உடைய 'கிட்டிவேக்' என்னும் கடற்கரை வாழ் பறவையானது, நெருங்கிய குருதி உறவுகளில் பாலுறவு வைத்துக் கொள்வதில்லை என்பதை 'பி.எம்.சி இவாலுவேசனறி பயலொஜி' (BMC Evolutionary Biology) என்னும் ஆய்வு சார்ந்த இதழ் ஒரு கட்டுரையாகவே வெளியிட்டுள்ளது.

மனிதர்களிடையே ஒருதார மணத்தைப் பின்பற்றுபற்று கின்றவர்கள், பலதாரமணத்தை ஏற்றுக் கொண்டவர்கள் என்றெல்லாம் பாகுபாடும் கருத்துக்களின் தொனிப்பும் இருப்பது நாம் அறிந்த விடயம். இதைப்போன்று பறவைகள் கூட ஒரே நேரத்தில் பல பறவைகளுடன் பாலுறவு கொள்ளுதல் அல்லது ஒரு சமயத்தில் ஒரு பறவையுடன் மட்டுமே பாலுறவு கொள்ளுதல் என்ற கோட்பாடுகளைக் கடைப்பிடித்து வருவதாக அறிவியலாளர்களால் ஆய்வடிப்படையான தகவல் தரல்கள் சொல்லப்படுகிறது.



இந்தநிலையிலே கறுப்புக்கால்களை உடைய 'கிட்டிவேக்' என்னும் இந்தக் கடற்கரையோரம் வாழக்கூடிய தான பறவை மிகத்தீவிரமான ஏகபத்தினி விரதன் எனக் கூறப்படுகிறது. இவை ஒருபோதும் நெருங்கிய குருதி உறவுகளில் பாலுறவு கொள்வதில்லை என்பதுதான் பி.எம்.சி இவாலுவேசனறி பயலொஜி இதழில் வெளியிடப்பட்டுள்ள ஆய்வுக் கட்டுரையின் சாரமாகக் காணப்படுகிறது. பல ஆய்வர்கள் கூட்டிணைவாக மேற்கொண்டுள்ள ஆய்வில் இருந்து பல தகவல்கள் வெளிப்பட்டுள்ளன.

'கிட்டிவேக்' பறவைகள் நெருங்கிய குருதி உறவுகளில் பாலுறவு கொள்வதில்லை என்பதும் அவ்வாறு பாலுறவு கொள்ள நேரிட்டால் உயிர்பிழைக்கும் குஞ்சுகளின் எண்ணிக்கை குறைந்துபோகிறது என்பதும் ஆய்வில் கிடைத்துள்ள மேலதிகமான அறிவியல் சார் ஆச்சரியம் கொள்ளும் செய்தி. கிட்டிவேக் பறவைகள் தங்களுடைய குருதி உறவுகளை எத்தனை பெரிய பறவைக்கூட்டத்திலும் கண்டுபிடித்துவிடுவதாகவும், தவறுதலாக இவற்றிடையே பாலுறவு ஏற்பட்டாலும்கூட, முட்டைகள் குஞ்சு - பொரிப்பதில்லை அல்லது பொரித்த குஞ்சுகளும் இறந்து போய்விடுவதாகவும் கூறப்படுகிறது.

மேலும் இவை குஞ்சுகளைப் பொரித்தவுடன் அவற்றின் பெற்றோர் நெருங்கிய குருதி உறவில் வந்த குஞ்சு என்பதான அடையாளப்படுத்தலை இனங்கண்டு கொள்வது மட்டுமன்றி, குஞ்சுகளை வெறுத்து ஒதுக்கத் தொடங்குகின்றன. இவற்றின் வளர்ச்சி என்பதும் மெதுவாக இருப்பதன் காரணமாக ஏனைய பறவைகளுடன் போட்டியிட்டு தப்பித்து வாழ்முடிவதில்லை. கிட்டிவேக் பறவைகள் வாழ்க்கை முழுவதும் சேர்ந்தே வாழுகின்றன என்பதும் அவற்றிடை மணமுறிவு என்பது எக்காலத்திலும் ஏற்படுவதில்லை என்பதும் இன்னுமோர் ஆச்சரியமான செய்தி. இந்தச் சந்தர்ப்பத்திலே உடல் வாசனையைக் கொண்டு நெருங்கிய இரத்த உறவுகளை இந்த கிட்டிவேக் பறவைகள் அடையாளம் காண்கின்றனவா என்பது தொடர்பிலான ஆய்வுகள் தொடர்ந்தும் இடம்பெற்றுவருவதான தகவல்கள் தற்போது வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

# நுண்ணுயிர்கள்...!


டிலாவேர் பல்கலைக்கழகத்தில் நடைபெற்றுள்ள அண்மைய ஆராய்ச்சியின் போது ஒரு முக்கியமான உண்மை வெளியாகி உள்ளது. தாவரங்களின் இலைகள் நோய்க்கிருமிகளால் தாக்கப்படும் சந்தர்ப்பங்களில் வேர்ப்பாகத்திற்கு உதவிகோரியதான ஓர் அவசர செய்தி அனுப்பப்படுவதாகச் சொல்லப்படுகிறது. இந்த செய்தியை வேர்கள் ஏற்றுக்கொண்டு மெலிக் என்னும் அமிலத்தை சுரக்கின்றன. வேரிலிருக்கும் நன்மை செய்யக்கூடிய ஒரு பக்டீரியா இந்த அமிலம் மூலமாக பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு மேல்நோக்கி அனுப்பப்படுவதாக கூறுகின்றனர்.

தாவரங்கள் எப்போதும் 'குந்தித்தின்பவை' என்னும் கருத்து இதன்மூலமாக தகர்க்கப்பட்டிருக்கிறது. மனிதர்களையும் விலங்குகளையும் போல தாவரங்களிலும் தூண்டல், துலங்கல் விளைவுகள் காணப்படுகின்றன என்பதையும் தாண்டி, தாவரங்களுக்கு அதிகமான புத்திசாலித்தனம் இருக்கிறது என்பதை இந்த ஆய்வுகள் நிரூபித்திருக்கின்றன.

தாவரங்களின் வேர்கள் மண்ணுக்குள் புதையுண்டு இருப்பதால் அவைகளால் நகரமுடியாது என்று நாம் நினைக்கிறோம். நினைத்துக்கொள்கிறோம்.

ஆனால் இருந்த இடத்தில் இருந்து கொண்டே தாவரங்கள் புற உலகிலிருந்து உதவியைக் கேட்டுப்பெறுவதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இந்த செயல்நிலைகளை இயற்கையின் விநோதம், விந்தை என்பதை விட வேறு எப்படிச் சொல்ல முடியும்.

'அறபிடோபிசிஸ் தலீன' (Arabidopsis thaliana) என்ற தாவரத்தின் இலைகளை 'சியூடோமோனஸ் சிறிஞ்சே' (Pseudomonas syringae) என்னும் நோய்க்கிருமியால் தாக்கமுறச் செய்தனர். சில நாட்களின் பின்னர் நோயின் தாக்கம் காரணமாக இலைகள் மஞ்சளாகிப்போயிருந்தன. நோயின் அறிகுறிகளும் தாவரத்தில் தெரிய ஆரம்பித்தன. ஆனால் 'பசிலஸ் சப்ரில்ஸ்' (Bacillus subtilis) என்னும் நன்மை செய்யும் நுண்ணுயிரியை வேர்ப்பகுதியில் செலுத்திய தாவரங்கள் மட்டும் நோயின் அறிகுறிகள் எதுவுமின்றி ஆரோக்கியமாக இருந்ததைக் காண முடிந்ததாக தாவரவியலாளர்கள் ஆய்வின் அடிப்படையில் கூறுகின்றனர்.



ஆக,பசிலஸ் சப்ரில்ஸ் என்னும் நுண்ணியிரியை விவசாயிகள் இப்போதும் தாவரங்களின் நோய் எதிர்ப்பு ஆற்றலை அதிகரிக்கப் பயன்படுத்துகிறார்கள். தாவரங்களின் வேர்களைச்சுற்றிலும் ஒரு படலமாக இந்த நுண்ணுயிரி படர்ந்துகொள்கிறது. தாவரங்களின் இலைகள் அவசர உதவிகோரத்தொடங்கியதும், வேர்கள் மெலிக் என்னும் கரிம அமிலத்தைச் சுரக்கின்றன.

மெலிக் அமிலம் 'பசிலஸ் சப்ரில்ஸ்' நுண்ணுயிரியை இலையை நோக்கி ஒருதிசையாக ஈர்ப்பதை ஒரு நவீன தொழில் நுட்பம் மூலமாக விஞ்ஞானிகள் நிரூபித்துள்ளதாகக் கூறுகின்றனர். 'எல்.எஸ்.எம் 510 டி.யு.ஓ' என்னும் லேசர் சாதனம் இதற்காக பயன்படுத்தப்பட்டது. டிலாவேர் பல்கலைக்கழகத்தில் உள்ள இந்தச் சாதனம் பல மில்லியன் டொலர்கள் மதிப்பு வாய்ந்தது என்கின்றனர் விஞ்ஞானிகள்.

ஒரு தாவரத்தின் அரைவாசிப் பகுதி மண்ணுக்குள் புதையுண்டு இருப்பதால், வேரினுள் ஏற்படும் மாற்றங்களைப் படமெடுப்பது என்பது மிகப்பெரிய சவாலாகக் காணப்படுகிறது. ஆனாலும் டிலாவேர் பல்கலைக்கழகம் இதற்கான வசதிகளைப்பெற்றிருப்பதாகச் சொல்லப்படுகிறது. உண்மையில் ஒளிஊடுருவும் அறைகளில் ஒளியியல் கருவிகளை இவர்கள் பயன்படுத்துகிறார்கள்.

தவிர,தாவரங்கள் உதவிகோரி எழுப்பும் எச்சரிக்கைகளை அறியவும் தாவர நுண்ணியிரிகளின் உதவியால் எவ்வாறு தாவரங்கள் நோய்களை எதிர்கொள்கின்றன என்பதையும் இந்த ஆய்வுகள் எமக்குத் தெளிவூட்ட எத்தனிக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடலுணவின் நேற்றைய விலை நிலவரம்



| | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித்துறை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| இறால் | 700 | 900 | 1200 | 1000 |
| நண்டு | 500 | 600 | 500 | 500 |
| கணவாய் | 700 | 800 | 1000 | 900 |
| பாரை | 600 | 500 | 700 | 1100 |
| சுறா | 800 | 900 | 1000 | 1200 |
| சீலா | 400 | 450 | 500 | 400 |
| விளை | 500 | 450 | 600 | 800 |
| முரல் | 400 | 400 | 400 | 500 |
| கும்பிளா | 400 | 350 | 400 | – |
| கிளாக்கன் | 800 | 400 | 500 | 600 |
| ஒரா | 400 | 500 | 600 | 500 |
| திரளி | 200 | 200 | 200 | 200 |
| நகரை | 200 | 250 | 400 | – |
| சூடை | 150 | 180 | 200 | 150 |
| ஒட்டி | 150 | 200 | 400 | 400 |
| திருக்கை | 300 | 300 | 500 | 400 |
| மதனம் | 250 | 300 | 300 | – |
| கொய் | 120 | 100 | 100 | 100 |
| பாலை | 150 | 300 | 600 | 300 |
| வாளை | 150 | 300 | 500 | – |


# முட்டைக்குள் ஒளிந்திருக்கும் இரகசியம்

நாம் உண்ணுகின்ற உணவானது, உடலுக்கும், உள்ளத்திற்கும் உறுதியைத் தருவதாக இருக்க வேண்டும்.

நிறைய கீரைகள், காய்கறிகள், பழங்கள், கொட்டைகள், விதைகள், பருப்பு வகைகள் ஆகியவை சைவப் பிரியர்களின் அன்றாட உணவில் அவசியம் இருக்க வேண்டும்.

அசைவப் பிரியர்கள் இறைச்சி, இறால், மீன், நண்டு, முட்டை முதலியவை மூலம் முழுமையாக உண்கிறார்கள்.

சைவமோ, அசைவமோ எதுவாக இருப்பினும், அந்த உணவு வகைகளில் புரதச்சத்து, கொழுப்புச்சத்து, தாதுப்பொருட்கள், விற்றமின்கள், இரும்புச்சத்து, மாவுச்சத்து முதலியவை முக்கிய பங்கை வகிக்க வேண்டும்.



சைவம் சாப்பிடுபவர்களே அதிகம் விரும்பிச் சாப்பிடும் முட்டை எமது அன்றாட உணவில் முக்கிய பங்கை வகிக்கிறது.

முட்டையில் கொழுப்பு, புரதம், விற்றமின், இரும்புச்சத்து உள்ளது. தினமும் ஒரு முட்டையை சாப்பிடுவது நம் உணவை முழுமையான உணவாக மாற்றுகிறது.

ஒரு முட்டையில் ஒளிந்திருக்கும் சத்து உடலுக்கு உகந்ததாக உள்ளது. ஆரோக்கியமாக இருப்பதில் முட்டை பெரும் பங்கை வகிக்கிறது.

குழந்தைகளிடமும், பெரியவர்களிடமும் ஏன் எல்லோரிடமும் கூட ஊட்டச்சத்துக் குறைவால் சில உடல் உபாதைகள் ஏற்படுகின்றன.

முட்டையில் எவ்வளவு தான் கொழுப்பு இருந்தாலும், அவை குருதியில் உள்ள கொழுப்பின் அளவை அதிகரிக்காது.

பொதுவாக கொழுப்பு உள்ள பொருள்களை டயட்டில் சேர்த்து, குருதியில் கொழுப்பு அதிகரிக்கும் என்று சொல்வது தவறு.

ஏனெனில் சாதாரணமாக நம் உடலில் உள்ள கல்லீரலானது அன்றாடம் கொழுப்பை அதிக அளவில் உற்பத்தி செய்யும்.

எப்போது கொழுப்பு நிறைந்த முட்டையை அதிகம் எடுத்து வருகிறோமோ, அப்போது கல்லீரலானது கொழுப்பின் உற்பத்தியை குறைத்துவிடும்.

இதனால் குருதியில் கொழுப்பின் அளவு அதிகரிக்காமல் இருக்கும்.

முட்டையின் மஞ்சள் கருவில் லூட்டீன் மற்றும் ஜியாசாந்தின் என்னும் ஆன்டிஆக்ஸிடண்ட்டுகள் வளமாக நிறைந்திருப்பதால், அவை கருவிழியை பாதுகாத்து, கண்களில் பிரச்சினைகள் ஏற்படாமல் பாதுகாக்கும்.

பெண்கள் கர்ப்ப காலத்தில் தினமும் ஒரு முட்டையை நன்கு வேக வைத்து சாப்பிட்டால், வயிற்றில் வளரும் குழந்தைக்கு வேண்டிய சத்தானது கிடைத்து, ஆரோக்கியமான குழந்தையைப் பெற்றெடுக்கலாம்

## மரக்கறிகளின் நேற்றைய விலை

| மரக்கறிகள் | சுன்னாகம் | மருதனார்மடம் | நெல்லியடி | திருநெல்வேலி |
|---|---|---|---|---|
| கத்தரி | 140 | 120 | 100 | 140 |
| முள்ளங்கி | 80 | 80 | 100 | 100 |
| மரவள்ளி | 40 | 40 | 40 | 40 |
| பயிற்றை | 120 | 120 | 120 | 120 |
| பாகல் | 300 | 280 | 200 | 160 |
| க.கிழங்கு | 80 | 80 | 60 | 120 |
| பெ.வெங்காயம் | 90 | 90 | 100 | 100 |
| சி.வெங்காயம் | 140 | 140 | 140 | 160 |
| பூசணி | 40 | 40 | 40 | 50 |
| தக்காளி | 160 | 160 | 160 | 160 |
| வாழைக்காய் | 60 | 40 | 40 | 40 |
| கீரை | 40 | 40 | 50 | 30 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 35 | 35 |
| ப.மிளகாய் | 80 | 200 | 150 | 180 |
| புடோல் | 100 | 100 | 100 | 80 |
| கோவா | 80 | 80 | 125 | 100 |
| வெண்டி | 100 | 80 | 70 | 80 |
| போஞ்சி | 380 | 280 | 280 | 240 |
| லீக்ஸ் | 200 | 240 | 240 | 280 |
| தேங்காய் | 70 | 70 | 75 | 80 |
| உ.கிழங்கு | 100 | 100 | 110 | 100 |
| தேசிக்காய் | 280 | 240 | 150 | 160 |
| வல்லாரை | 20 | 20 | 30 | 20 |
| கறிமிளகாய் | 150 | 160 | 200 | 160 |
| கரட் | 280 | 280 | 160 | 180 |
| முருங்கைக்காய் | 200 | 200 | 180 | 120 |

# சுண்டைக்காய் சாப்பிடுவது வயிற்றுப் புண்ணுக்கு நல்லது!

சுண்டைக்காய், மருத்துவக் குணம் உள்ள காய். கசப்புச்சுண்டை, கறிச்சுண்டை என இருவகை உண்டு. சுண்டக்காயை மோரில் ஊற வைத்து, வற்றல் போட்டு வறுத்தும், வற்றல் குழம்பு வைத்தும் சாப்பிடலாம். கசப்பு சுண்டைக்காய், கறிச்சுண்டைக்காய் இரண்டுமே வாயுத் தொந்தரவு மற்றும் வயிற்றில் உள்ள கிருமிகளை போக்க நல்ல மருந்தாகும்.



உணவில் மாதம் ஒரு முறை கசப்பு சுண்டைக்காய் சேர்த்துக் கொண்டால், கிருமித் தொந்தரவு இருக்காது. அமிபீயாஸிஸ் போன்ற கிருமிகளையும் சுண்டைக் காய் விரட்டி விடும். நீரிழிவுக்கும், கிருமிகளுக்கும் சுண்டைக் காய் நல்ல மருந்தாகும். கசப்பாக இருந்தாலும், உடலுக்கு ஊட்டச்சத்தாக மாறி, உடலை ஆரோக்கியமாக வைத்து நீண்ட ஆயுளைக் கொடுக்கிறது.

சுண்டைக்காயின் இலைகள், வேர், கனி என்று முழுத்தாவரமும் மருத்துவ குணம் உடையது. இலைகள் குருதிக் கசிவைத் தடுக்கும். கனிகள் கல்லீரல் மற்றும் கணையம் தொடர்பான நோய்களுக்கு மருந்தாகும். முழுத்தாவரமும் ஜீரணத் தன்மை கொண்டது. சுண்டைக்காயில் புரதம், கல்சியம், இரும்புச்சத்து அதிகம் உண்டு. இதனால், உடல் வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிக்கிறது. வாரம் இருமுறை சமைத்து சாப்பிட்டால் குருதி சுத்தமடையும் உடல் சோர்வு நீங்கும்.

சுவாச நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள், அடிக்கடி சுண்டைக்காயை உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும். வயிற்றுக் கிருமிகள் உள்ளவர்கள் வாரம் மூன்று முறை, சுண்டைக்காய் சாப்பிட்டு வந்தால் வயிற்றுக் கிருமி, மூலக் கிருமி போன்றவை அகலும். வயிற்றுப்புண் ஆறும். வீட்டுத் தோட்டங்களிலும் கொல்லைப் புறங்களிலும் வளர்க்கப்படும் நாட்டுச் சுண்டைக்காயை பச்சையாக சமைத்து உண்ணலாம். நுண்புழுவால் உண்டான நோய்கள், வலி நோய்களைப் போக்கும்.

மலச்சிக்கல், அஜீரணக் கோளாறுகளை நீக்கும். வயிற்றுப் புழுக்களை வெளியேற்றும். சுண்டைக்காயை உலர்த்தி பொடியாக்கி, சூரணம் செய்து நீரில் கரைத்து சாப்பிட்டு வந்தால் ஆசனவாய் அரிப்பு நீங்கும். மலக்கிருமிகள் மற்றும் மூலக்கிருமிகள் அகலும். முற்றிய சுண்டைக்காயை நசுக்கி, மோரில் போட்டு ஊற வைத்து வெயிலில் காயவைத்து எடுத்து பத்திரப்படுத்திக் கொண்டு, தினமும் எண்ணெயில் வறுத்து சாப்பிடலாம். அல்லது வற்றல் குழம்பாக்கி சாப்பிடலாம். இது மார்புச்சளியைப் போக்கும்.

சுண்டை வற்றலை நெய்யில் வறுத்து பொடியாக்கி, சோற்றுடன் பிசைந்து சாப்பிட்டு வந்தால் நீரிழிவால் உண்டாகும் கை, கால் நடுக்கம், மயக்கம், உடற்சோர்வு, வயிற்றுப் பொருமல் நீங்கும். சுண்டைக்காயை இரண்டாக நறுக்கி அதனுடன் பூண்டு, சின்ன வெங்காயம், மிளகு, சீரகம், கறிவேப்பிலை, கொத்தமல்லி இலை சேர்த்து நன்கு கொதிக்க [illegible] கபக்கட்டு, இருமல், மூலச்சூடு, மூலக்கடுப்பு, மூலத்தால் குருதி[illegible] குருதியைச் சுத்தப்படுத்தி, சிறுநீரைப் பெருக்கும்.

# வெங்காய சமோசா!



**தேவையான பொருள்கள்**

கோதுமை மாவு - 1கோப்பை
எண்ணெய் - 1 தேக்கரண்டி
உப்பு - தேவையான அளவு
வெங்காயம் - கால் கிலோ
அவல் - 3 கோப்பை
மிளகாய் தூள் - 2 தேக்கரண்டி
சீரகம் - 2 தேக்கரண்டி
பச்சை மிளகாய் - 2
கொத்தமல்லி - 1/2 கப்
எலுமிச்சை சாறு - 1/2 தேக்கரண்டி

**செய்முறை**

கோதுமை,உப்பு,எண்ணெய் சேர்த்து தண்ணீர் விட்டு ரொட்டி மாவு போல் பிசைந்து கொள்ளவும். 15நிமிடம் உறவிடவும்.

ஒரு பாத்திரத்தில் வெங்காயம்,அவல்,மிளகாய்த் தூள், சீரகப் பொடி, நறுக்கிய பச்சை மிளகாய், உப்பு, கொத்தமல்லி, எலுமிச்சை சாறு சேர்த்து பிசரி கொள்ளவும்.

சமோசா மாவை ரொட்டி போல் மெல்லியதாக திரட்டி கொள்ளவும்.

தோசைக் கல்லில் போட்டு ஒரு பக்கம் மட்டும் சூடுபடுத்தினால் போதுமானது.

கோதுமை சிறிது தண்ணீர்விட்டு பசைபோல் செய்து கொள்ளவும்.

சூடுபடுத்தின ரொட்டியை நிலவாக்கில் வெட்டவும். பசையை தடவி முக்கோணமாக மடித்து கொண்டு செய்து வைத்திருந்த வெங்காய கலவையை நிரப்பி பசையை தடவி மூடிவிடவும்.

சுடான எண்ணெயில் செய்து வைத்த சமோசாவை பொரித்து எடுத்தால்சுவையான வெங்காய சமோசா தயார்.

# இது புதுசு



பெண்களுக்கான காதணி வகைகள் சில சந்தைக்கு அறிமுக மாகியுள் என. இவை 500 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின் றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ரில்கோ கொங்கியூரெர்ஸ் மாதோட்டத்தை வென்றது

யாழ்ப்பாணம், ஜீன் 4
வடக்கு - கிழக்கு பிறீமியர் லீக் கால்பந்தாட்டத் தொடரில் ரில்கோ கொங்கியூரெர்ஸ் அணி தனது முதலாவது வெற்றியைப் பதிவுசெய்தது. யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் அண்மையில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் ரில்கோ அணியை எதிர்த்து மாதோட்டம் அணி மோதியது. முதற்பாதி ஆட்டத்தில் அணியின் முதலாவது கோலைப் பதிவுசெய்தார் தினேஸ். இரண்டாவது கோல் ஆட்டத்தின் 40ஆவது நிமிடத்தில் இவனாஜனால் மற்றொரு கோல் பதிவுசெய்யப்பட்டது. இதையடுத்து முதல் பாதியின் முடிவில் 2:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தது ரில்கோ. இரண்டாம் பாதியில் மாற்றங்கள் நிகழவில்லை. முடிவில் 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது ரில்கோ. (ம-23)

## எறிபந்தாட்டம் இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜீன் 4
வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான 17, 20 வயதுப் பிரிவு இருபாலாருக்குமான எறிபந்தாட்டம் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரியில் இன்று இடம்பெறவுள்ளது. (ம-23)



வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான சதுரங்கத் தொடரில் 17, 20 வயதுப்பிரிவு ஆண்களுக்கான ஆட்டங்கள் கொக்குவில் இந்துக் கல்லூரியில் நேற்று நடைபெற்றன. (ம-23)




## யாழ். வீராங்கனை ராகவி பூப்பந்தாட்டத்தில் மகுடம்

யாழ்ப்பாணம், ஜீன் 4
உலகத்தமிழர் பூப்பந்தாட்டப் பேரவையின் தொடரில் 20 வயதுப் பெண்களுக்கான ஒற்றையர் ஆட்டத்தில் யாழ்ப்பாண மாவட்ட வீராங்கனை ஆர். ராகவி கிண்ணம் வென்றார்.
மன்னார் உள்ளக விளையாட்டரங்கில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் யாழ்ப்பாண மாவட்ட வீராங்கனை ஆர்.ராகவியை எதிர்த்து மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த எம்.அபிசாளினி மோதினார். மூன்று செற்களைக் கொண்ட இந்த ஆட்டத்தில் 21:19, 21:18 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று நேர் செற் கணக்கில் கிண்ணம் வென்றார் ராகவி. (ம-108)

## கலைமதி இறுதியாட்டத்தில்

யாழ்ப்பாணம், ஜீன் 4
கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் கலைமதி அணி இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.
யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற அரையிறுதி ஆட்டத்தில் நவிண்டில் கலைமதி அணியை எதிர்த்து மனோகரா அணி மோதியது. 3:0 கோல் கணக்கில் நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது. (ம-23)

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஜீன் 4
வடக்கு - கிழக்கு பிறீமியர் லீக் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று திங்கட்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வவுனியா வாரியர்ஸ் அணியை எதிர்த்து மன்னார் எவ்.சி. அணி மோதவுள்ளது. (ம-23)

## ஹம்பகாவிடம் வீழ்ந்தது யாழ்.

யாழ்ப்பாணம், ஜீன் 4
30ஆவது தேசிய இளைஞர் விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட கூடைப்பந்தாட்டத் தொடரில் ஆண்கள் பிரிவில் காலிறுதிவரை முன்னேறி வெளியேறியது யாழ்ப்பாண மாவட்ட இளைஞர் அணி.
அம்பலாங்கொட பொது விளையாட்டு மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்தக் காலிறுதி ஆட்டத்தில் யாழ்ப்பாணம் மாவட்ட இளைஞர் அணியை எதிர்த்து கம்பகா மாவட்ட இளைஞர் அணி மோதியது. கம்பகா மாவட்ட அணி 52:42 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றது. (ம-23)

## நவஜீவன்ஸ் அணி இறுதிக்குத் தகுதி

யாழ்ப்பாணம், ஜீன் 4
கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணி இறுதிக்குத் தகுதிபெற்றது.
கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்த அரையிறுதி ஆட்டத்தில் நவஜீவன்ஸ் அணியை எதிர்த்து கொலின்ஸ் அணி மோதியது. 3:2 என்ற கோல் கணக்கில் நவஜீவன்ஸ் அணி வெற்றிபெற்றது. (ம-23-422)

# வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி ஸ்கந்தவரோதயவைத் தோற்கடித்தது





யாழ்ப்பாணம், ஜீன் 4
இலங்கைப் பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கத்தால் நடத்தப்படும் 15 வயதுப்பிரிவு அணிகளுக்கு இடையிலான துடுப்பாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி வெற்றிபெற்றது.
நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி 55 ஓட்டங்களுக்குச் சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக அனோஜன் 18 ஓட்டங்களைப் பெற்றார்.
பந்துவீச்சில் விஸ்ணுகாந் 6 இலக்குகளையும், அகஸ்ரின், பிருந்தன் இருவரும் தலா 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.
பதிலுக்குத் தனது முதலாவது இன்னிங்ஸ்க்காகத் துடுப்பெடுத்தாடிய வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி 63 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. விஸ்ணுகாந் 35 ஓட்டங்களையும், அகஸ்ரின் 10 ஓட்டங்களையும் பெற்றனர்.
பந்துவீச்சில் லவன் 6 இலக்குகளையும், கௌரிசங்கர் 3 இலக்குகளையும் கைப்பற்றினர்.
இரண்டாவது இன்னிங்ஸ்க்காக் களமிறங்கிய ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி 9 இலக்குகளை இழந்து 116 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது ஆட்டத்தை இடைநிறுத்தியது. அதிகபட்சமாக அனோயன் 48 ஓட்டங்களையும், வினோஜன் 27 ஓட்டங்களையும் பெற்றனர்.
பந்துவீச்சில் கௌசிகன் 5 இலக்குகளையும், விஸ்ணுகாந் 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.
முதல் இன்னிங்ஸில் முன்னிலை பெற்றமை கைகொடுக்க 109 ஓட்டங்கள் யாழ்ப்பாணக் கல்லூரிக்கு இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. அந்த அணி 3 இலக்குகளை இழந்து 83 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது நேரம் நிறைவுக்கு வந்தது. முதல் இன்னிங்ஸில் முன்னிலை பெற்றமை காரணமாக யாழ்ப்பாணக் கல்லூரிக்கு வெற்றி என்று அறிவிக்கப்பட்டது. (ம-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசியமட்ட கூடைப்பந்தாட்டத் தொடரில் யாழ். மாவட்ட அணி மீண்டும் சம்பியன்

யாழ்ப்பாணம்,ஜூன்4

30ஆவது தேசிய இளைஞர்விழாவை முன்னிட்டுநடத்தப்பட்டகூடைப் பந்தாட்டத்தொடரில்பெண்கள் பிரிவில் மூன்றாவது வருடமாக சம்பியன் கிண்ணத்தை வென்றது யாழ்ப்பாணம் மாவட்ட அணி.

அம்பாலங்கொடபொதுவிளையாட்டு மைதானத்தில் நேற்று இடம்பெற்ற இறுதியாட்டத்தில் யாழ்ப்பாண மாவட்ட அணியை எதிர்த்து கம்பகா மாவட்ட அணி மோதியது.

நான்கு கால்பாதிகளைக் கொண்டதாகஆட்டம்அமைந்தது. முதலாவது கால்பாதியில் யாழ்ப்பாணம் மாவட்ட அணி 12:08என்றபுள்ளிகளின்அடிப்படையில் முன்னிலை பெற்றது. இரண்டாவது கால்பாதியில் இரண்டு அணிகளும் தலா 8 புள்ளிகளைப் பெற்றன. முதல் பாதியின் முடிவில் 20:16 என்ற புள்ளிகளின் அடிப்படையில் முன்னிலை வகித்தது யாழ்ப்பாண மாவட்ட அணி. மூன்றாம்கால்பாதியில்யாழ்ப்பாண மாவட்ட அணி14:09என்றபுள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றது.நான்காவதுகால்பாதியும்20:06 என்ற புள்ளிகளின் அடிப்படையில் யாழ்.மாவட்டத்தின்வசமானது.முடிவில்54:31என்றபுள்ளிகளின்அடிப்படையில் வெற்றிபெற்றது யாழ்ப்பாணமாவட்டஅணி. (ம-23,422)





## வில்லியர்ஸின் ஓய்வு வியப்பை தருகிறது

### அலன் டொனால்ட் கவலை

வில்லியர்ஸின் ஓய்வு மிகவும் வியப்பாகஉள்ளதுஎன்றுதனது ஆதங்கத்தை வெளியிட்டார் பிரபல முன்னாள் வீரர் அலன் டொனால்ட்.

"மிஸ்டர்360டிகிரி"என்றுஅழைக்கப்படுவர்தென்னாபிரிக்கஅணியின்முன்னாள்தலைவர்வில்லியர்ஸ். மைதானத்தின் எந்தத் திசைக்கும் பந்தை விரட்டும் வல்லமை பெற்றிருந்ததால் இந்தப் பெயர்கொண்டு அவர் அழைக்கப்பட்டார். ஆகச் சிறந்த வீரராக இருந்தபோதிலும் அவரால் தென்னாபிரிக்க அணிக்கு ஓர் உலகக்கிண்ணத்தை வென்றுகொடுக்க இயலவில்லை. இங்கிலாந்தில் அடுத்த வருடம் நடைபெறவுள்ள உலகக்கிண்ணத் தொடரை தென்னாபிரிக்க அணி கைப்பற்ற வில்லியர்ஸ்துரும்புச்சீட்டாக இருப்பார் என்று கருதப்பட்டநிலையில்ஐ.பி.எல். தொடர் முடிந்த கையுடன் அவர் பன்னாட்டு அரங்கில் இருந்து விடை பெற்றார். வில்லியர்ஸின் ஓய்வு தொடர்பில் பலரும் பற்பல கருத்துக்களைத்தெரிவித்துள்ளநிலையில் "வில்லியர்ஸ் ஓய்வு பெற்றமைதனக்குப்பெரியஏமாற்றம்" என்றுள்ளார்டொனால்ட். (ம)

## மிகவும் ஆபத்தானவர்

### டோனி குறித்து ராகுல்

"டோனிதற்போதும்கூடகளத்தில் மிகவும் ஆபத்தானவராகவே உள்ளார்" என்று தெரிவித்தார் இந்திய அணியின் வீரர் ராகுல்.

"நடப்பு வருட ஐ.பி.எல். தொடரில்டோனிசிறந்தபெறுபேற்றை வெளிப்படுத்தினார். அவருக்கு இந்திய அணித் தலைவர் கோக்லி உள்ளிட்ட வீரர்கள் பலரும்தத்தமதுவாழ்த்துக்களைத் தெரிவித்துவருகின்றனர். இந்த நிலையில்டோனிகளத்தில்மிகவும் ஆபத்தான நபர் என்று புகழ்ந்துள்ளார் ராகுல்.

நான் கிரிக்கெட் விளையாடிய காலத்தில்இருந்தேடோனியின் துடுப்பாட்டத்தைத் தொலைக்காட்சியில் விரும்பிப் பார்ப்பேன். அவரின் ஒவ்வொருநகர்வும் திட்டமும் எதிரணிக்குப் பயத்தை ஏற்படுத்தும். டோனியின் துடுப்பாட்டமும், அவர் விளையாடி அணியை வெல்லவைக்கும் காட்சியும் பார்ப்பதற்கு அற்புதமாக இருக்கும். அவரைசென்னைசுப்பர்கிங்ஸ் அணிக்கு மீண்டும் தலைவராகப்பார்ப்பதும், ஐபிஎல்தொடரை அவர் தலைமையிலான அணி வென்றதையும்பார்க்கும்போது மகிழ்ச்சியாக இருக்கிறது. இன்றும்கூடகளத்தில்மிகவும்ஆபத்தான வீரராகவே டோனி உள்ளார். அது அவரின் தனித்தன்மை" என்று ராகுல்மேலும் தெரிவித்தார். (ம)

## முகுருசா முன்னேற்றம்



பிரெஞ் பகிரங்க ரென்னிஸ் தொடரில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் நான்காவது சுற்றுக்குத் தகுதி பெற்றார் ஸ்பெய்னின்வீராங்கனை முகுருசா.

பரிஸ் நகரில் இந்தத் தொடர் நடைபெற்று வருகிறது. நேற்று நடைபெற்ற மூன்றாவது சுற்று ஆட்டத்தில் முகுருசாவை எதிர்த்து ஆஸ்திரேலிய வீராங்கனை சமந்தா மோதினார்.

மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம்அமைந்தது. 6:0, 6:2என்ற அடிப்படையில்முதலிருசெற்களையும்கைப்பற்றி 2:0என்றநேர்செற் கணக்கில் வெற்றிபெற்றார் முகுருசா. (ம)

## கால்பந்தாட்ட உலகக்கிண்ண நினைவலைகள்

# கால் நூற்றாண்டைக் கடந்துள்ள காத்திருப்பு

கிரிக்கெட்டைப்போன்றுகால்பந்தும்இங்கிலாந்தில் பிரபலம். இங்கிலாந்து கால்பந்து வீரர்கள் மீது எல்லை கடந்த அன்பைப் பொழிபவர்கள் அந்த நாட்டைச் சேர்ந்த ரசிகர்கள். உலகக்கிண்ணக்கால்பந்துத்தொடர் ரஷ்யாவில் ஆரம்பமாக இன்னும் 10 நாள்கள்மட்டுமேஉள்ளநிலையில்இங்கிலாந்து சில நாள்களுக்கு முன்பு உலகக் கோப்பை கால்பந்துத் தொடரில் விளையாடவுள்ள அணியை அறிவித்தது. எதிர்பார்த்ததைப் போலவேஇந்தமுறைஅணியைவழிநடத்திச் செல்லும் தலைவராக ஹாரி கேன் நியமிக்கப்பட்டுள்ளார். இங்கிலாந்தின் ஒட்டுமொத்த எதிர்பார்ப்பை தனது தோளி(காலி)ல் சுமக்கவுள்ளார் கேன்.


மின்னல் வேக கிக், புயல் வேகத்தில் பந்தைக் கடத்தும் திறன் ஆகியவற்றால் ரசிகர்களைக்கட்டிப்போட்டவர்ஹாரிகேன். இந்த முறைஉலகக்கிண்ணக்கால்பந்துத்தொடருக்கான தகுதிச் சுற்றில் 10 ஆட்டங்களில் விளையாடி 8 வெற்றி, 2 சமநிலைகளுடன் மொத்தம் 26 புள்ளிகளைக் குவித்து தனது பிரிவில் முதலிடம் பிடித்து அசத்தியது. தகுதிச்சுற்றில்ஒருஆட்டத்தில்கூடதோல்வியை சந்திக்காத இங்கிலாந்து அணி 18 கோல்களை அடித்த நிலையில் 3 கோல்கள் மட்டுமே வாங்கியது.

தகுதிச் சுற்று ஆட்டங்களில் 5 கோல்களை அடித்துஅசத்தினார்ஹாரிகேன். அணியின் தூணாகவும், நம்பிக்கை நட்சத்திரமாகவும் கலக்கி வருகிறார் ஹாரி கேன். இளம் வீரர்களுடன்இங்கிலாந்துஅணிகளமிறங்குவதால் அந்த அணி மீதான எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது. குறிப்பாக ஹாரி கேனிடமிருந்து அதிகமாக ரசிகர்கள் எதிர்பார்ப்பதாக கால்பந்து விமர்சகர்கள் கணித்துள்ளனர்.

அணியினரை ஒருங்கிணைத்தும், எதிரணியைச்சமாளித்தும்இங்கிலாந்தைவெற்றி அடையச்செய்யவேண்டிய நெருக்கடியில் ஹாரி கேன் இருக்கிறார். உலகின் மிகச் சிறந்தஸ்ரைக்கர், அருமையானபினிசர் என்று சொல்லப்படும் ஹாரி கேன் இந்த முறை உலகக் கிண்ணத் தொடரில் சாதிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அவர் மட்டுமே ஜொலிக்காமல் மற்ற வீரர்களையும் பிரகாசிக்க வைப்பது ஹாரி கேனுக்கு கைவந்த கலையாகும். மற்றவீரர்களுக்கு கோலடிக்க அழகான வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருவதில் ஹாரி கேன் மிளிர்கிறார்.

அனைத்து வீரர்களையும் பயிற்சியாளர் சவுத்கேட் ஒருங்கிணைத்து அருமையான பயிற்சியாளராக உலக அரங்கில் வலம் வருகிறார். வீரர்களை ஒருங்கிணைத்தல், அவர்களுக்குபோதுமான ஆலோசனைகள் வழங்குதல்போன்றவற்றில்நேர்த்தியாக செயற்படுகிறார். இந்த முறை இங்கிலாந்து அணி ஜி பிரிவில் இடம்பெற்றுள்ளது.

இந்தப் பிரிவில் பனாமா, பெல்ஜியம், துனீசியா அணிகளும்இடம் பிடித்துள்ளன. இதில் பெல்ஜியம் அணி இங்கிலாந்துக்கு கடும் சவால் அளிக்கக்கூடும். இங்கிலாந்து அணி உலகக்கிண்ணக்கால்பந்து தொடருக்குத் தகுதி பெறுவது இது 14ஆவது முறையாகும். 1950ஆம் ஆண்டு முதன்முறையாக அறிமுகமான அந்தஅணி1966ஆம்ஆண்டில்கிண்ணம் வென்றது. அதன் பின்னர் 52 வருடங்களாககிண்ணம்வெல்லபோராடிவருகிறது. இந்த முறை அந்தத் தேசத்தின் கனவை நினைவாக்கும்கூடுதல்சுமையுடன்ஹாரி கேன் இந்தத் தொடரைச்சந்திக்கிறார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடுத்த வருட ஐ.பி.எல். இந்தியாவில் இல்லை?

அடுத்த வருட ஐ.பி.எல். தொடரை இந்தியாவில் நடத்த இயலாத சூழ்நிலை உருவாகியுள்ளதால் அது வேறொரு நாட்டில் நடத்தப்பட வாய்ப்புள்ளது என்று தகவல்கள் வந்துள்ளன.

அடுத்த வருடம் உலகக்கிண்ணத் தொடர் இங்கிலாந்தில் நடைபெறவுள்ளது. இந்தத் தொடருக்கான இந்திய அணியைத் தயார்ப்படுத்த கூடுதல் நேரம் தேவை என்பதால் தொடரை மார்ச் மாதத்தின் நடுப்பகுதியிலேயே நடத்தத் திட்டமிடப் பட்டுள்ளது. அதேநேரம் இந்திய நாடாளுமன்றத் தேர்தலும் அடுத்த வருடம் நடைபெறவுள்ளது. தேர்தலும் குறித்த காலப் பகுதிக்குள் நடந்தால் பாதுகாப்புக் காரணங்களுக்காக தொடரை வேறொரு நாட்டில் நடத்த வேண்டிய சூழ்நிலை ஏற்படலாம். இதனால் அடுத்த வருட ஐ.பி.எல். தொடரை இந்தியாவுக்கு வெளியே நடத்துவது தொடர்பில் ஐ.பி.எல். நிர்வாகக் குழு கலந்தாலோசித்து வருகிறது.

அவ்வாறு இந்தியாவுக்கு வெளியில் நடத்துவது என்றால் தென்னாபிரிக்கா அதற்குரிய சரியான இடமாக அமைய வாய்ப்பு உண்டு. (ம)

**சிறுநீரகம் தேவை**

யாழ். நகரைச் சேர்ந்த சிறுநீரக நோயாளி ஒருவருக்கு சிறுநீரக மாற்று சிகிச்சைக்கு O+ இரத்த வகையைச் சேர்ந்த சிறுநீரகம் உடன் தேவை. (இருபாலாரும் விரும்பத்தக்கது)

தொடர்பு - 076 468 1413

**சிறுநீரகம் தேவை**

20 வயதுடைய மாணவர் ஒருவருக்கு சிறுநீரகம் செயலிழந்தமையால் O+ அல்லது O- இரத்த வகையைச் சேர்ந்த சிறுநீரகம் உடன் தேவை.

-0212227263, 0779797403, 0773911406



# பிரென்ஞ் தொடரில் செரபோவா அதிரடி



பன்னாட்டு அந்தஸ்து பெற்ற தொடர்களில் ஒன்றான பிரென்ஞ் தொடரில் நான்காவது சுற்றுக்குத் தகுதி பெற்றார் ரஷ்ய வீராங்கனை மரிய செரபோவா.

பன்னாட்டு அந்தஸ்து பெற்ற பகிரங்கத் தொடர்களில் பிரென்ஞ் தொடரும் ஒன்று. இந்தத் தொடர் பிரான்ஸின் தலைநகர் பரிஸில் தற்போது நடைபெற்று வருகிறது. பெண்கள் ஒற்றையர் பிரிவு மூன்றாவது சுற்று ஆட்டமொன்று நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

ரஷ்ய வீராங்கனை செரபோவாவை எதிர்த்து செக்குடியரசின் வீராங்கனை பிளிஸ்கோவா மோதினார். மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதலாவது செற்றை 6:2 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றார் செரபோவா. அடுத்த செற்றில் வெற்றிபெற்றால் நேர்செற் வெற்றியுடன் முன்னேற்றம் காணலாம் என்கிற நிலை. அந்த செற் 6:1 என்ற புள்ளிகளின் அடிப்படையில் செரபோவாவின் வசமாக முடிவில் அவர் 2:0 என்ற நேர்செற் கணக்கில் வெற்றிபெற்று நான்காவது சுற்றுக்கு முன்னேறினார்.

ஆட்டம் முடிந்த பின்னர் கருத்துத் தெரிவிக்கையில், 'இந்த ஆட்டத்தில் அபார ஆட்டத்தை வெளிப்படுத்தி வெற்றிபெற்றமை மகிழ்ச்சி. அடுத்தடுத்த ஆட்டங்களிலும் இந்த வெற்றியைக் கொண்டுசெல்ல இயலுமான வரையில் முயற்சியெடுப்பேன்' என்றார் செரபோவா.

இந்தத் தொடரில் கிண்ணம் வெல்வீர்களா? என்று செய்தியாளரொருவரின் கேள்விக்குப் பதில் வழங்குகையில், 'அதற்குரிய வாய்ப்புக்கள் இல்லாமலில்லை' என்று ஒற்றை வரியில் முடித்தார். மெல்டோனியம் என்ற தடைசெய்யப்பட்ட ஊடக்கமருந்தைப் பயன்படுத்தி இரண்டு வருடங்கள் தடைபெற்று மீண்டும் களந்திரும்பிய செரபோவா, தனது தடைக்குப் பின்னர் இன்னும் முக்கிய தொடர் எதையும் கைப்பற்றவில்லை. ஒவ்வொரு தொடரிலும் நம்பிக்கையை வெளிப்படுத்துவதும் பின்னர் காலிறுதி அல்லது அரையிறுதியுடன் வெளியேறுவதுமாகவே கடந்த சில தொடர்கள் அவருக்கு அமைந்தன. (ம)

**SAAMSON English** 3 மாத ஆங்கில பயிற்சிநெறி

குழந்தைகள் இலகுவான மொழியொன்றை சிறுவயதிலும், கடினமான மொழியொன்றை பெரியவரானதும் பேசக்கற்பதில்லை. கடினமோ அல்லது இலகுவானதோ குழந்தைகள் 2 வயதிலேயே தத்தம் மொழியைப் பேசப்பழகுகின்றன. மொழிகள் எல்லாம் இலகுவானவையே!

2 வயதில் பேசத்தொடங்கும் எந்தக்குழந்தைக்கும் அம்மொழியின் இலக்கணம் தெரிந்திருப்பதில்லை. ஆங்கிலம் உங்களுக்கு கழனமாகத்தெரிந்தால் நீங்கள் அதன் இலக்கணத்தை கற்றிருக்கிறீர்கள் என்பதே அர்த்தம்!

கழனமான இலக்கணவழியற்ற எமது பயிற்சியில் உங்களால் 3 மாதங்களிலேயே சரளமாக ஆங்கிலம் பேசமுடியாதுவிடின் நாம் முழுப்பணத்தையும் திருப்பித்தருகிறோம்

சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் 09.06.2018 சனிக்கிழமை

பிரிவுகள்: பிரிவு1. காலை 08-10 பிரிவு2.காலை 10-12 பிரிவு3.மதியம் 01-03 பிரிவு 4.மாலை 03-05

15 வயதிற்கு மேற்பட்ட எவரும் இணையமுடியும்! வயது அடிப்படையில் வகுப்புகள் நடைபெறும்

SAAMSON 279, வெலிங்டன் சந்தி, யாழ்நகர். 021 320 3313 077 1570486

**தென்னிந்திய யாத்திரை**

தமிழ்நாடு, ஆந்திரா, கேரளா, கர்நாடகா, பாண்டிச்சேரியூடான யாத்திரை

ஆரம்பம் 25.06.2018 யாத்திரீகர் 15 நாள்கள் 16

தரிசிக்கும் இடங்கள் :- மலைக்கோட்டை விநாயகர், திருப்பதி, ஸ்ரீரெங்கம், சமயபுரம், பிரம்மாகோயில், இராமேஸ்வரம், பழனி, திருத்தணி, திருப்பரம்குன்றம், திருச்செந்தூர், சிதம்பரம், ஏகாம்பரேஸ்வரர், காளகஸ்திரி, திருவெண்ணா மலை, சுவாமிமலை, பழமுதிர்ச்சோலை, திருவானைக்காவல், மேல்மருவத்தூர், தஞ்சாவூர், நவபாஷானம், சூரியன், சந்திரன், சுக்கிரன், புதன், வியாழ பகவான், செவ்வாய், ராகு, கேது, சனி பகவான், திருநள்ளாறு, நளன்குளத்தில் நீராடல், தோணியப்பர், குருவாயூர், கோடி லிங்கேஸ்வரர், மைசூர் சாமூண்டீஸ்வரி, நந்திகோவில், கன்னியாக்குமரி, சுசீந்திரம், மனக்குழவிநாயகர், திருக்கடையூர் பஞ்சவடி பிள்ளையார், பட்டி விநாயகர், வடபழனி முருகன் உட்பட 60 இற்கும் குறையாத ஆலயங்களைத் தரிசிப்பதுடன் மெரீனாபீச், பாண்டிச்சேரி பீச், MGR, ஜெயலலிதா, அண்ணா சமாதிகளையும் மைசூர் பாலஸ், பிருந்தாவனம் காடின், அப்துல் கலாமின் மணிமண்டபமும் பார்க்கலாம்.

தங்களிடம் பெற்றுக் கொள்ளும் ரூபாவுக்கு எமது சேவை :- இருவழி விமான ரிக்கட், மூன்றுவேளை சுத்தமான சைவ உணவு, குடிநீர், 2 பேருக்கு கட்டில் மெத்தை, குளியலறை இணைந்த அறைகள், AC வாகன வசதி, கொழும்பில் இருந்து ஏயர்போட் போகவும் வரவும் வாகன வசதி, இவை அனைத்தும் எமது சேவை.

மேலும் விவரங்களைக் கேட்டு அறிந்து பதிவு செய்யவும். சகல ஆலயங்களும் பூசை நேரத்தில் தரிசிக்கலாம். (இத்துடன் யாழ் - கொழும்பு, யாழ் போக வர வாகன வசதி செய்து தரப்படும்)

தொடர்புகளுக்கு:
கலாநிதி T. ஸ்ரீரெங்கநாதன் மகன் ராஜன்
59, 3/6, செட்டியார்தெரு, கொழும்பு -11,
T.P -077 768 0102, 077 736 2154
(c/31864) (13.17)

**CNR உள்நாடு, வெளிநாடுகளுக்கான தபால், பொதிகள் விநியோக சேவை**



- அதிவேக மற்றும் சிக்கன பொதிகள் சேவை
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- வீடு, அலுவலகங்களில் இருந்தவாறு அனுப்பும் வசதி
- அனுப்பும் பொதிகளுக்கான காப்புறுதி உத்தரவாதம்
- கடல் ஆகாய மார்க்க பெரிய சரக்குப் பரிமாற்ற சேவை

CNR World Wide Express
இல.401, மணிக்கூண்டு கோபுர வீதி, (பெருமாள் கோவில் அருகாமை) யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு: 021 5674145 077 2931062 077 6655413

**வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை**

- அதி விரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
- கடலுணவு, இறைச்சி, எண்ணெய் வகை, மருந்துப் பொருள்கள், பழ வகைகள், பால் மா வகைகள் என்பவற்றையும் அனுப்பி கொள்ள முடியும்.
- நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.

20 வருடகால அசைக்க முடியாத நம்பிக்கையை வென்ற நாம்

அருள் குளோபல் எக்ஸ்பிரஸ்

1, பிறவுண் வீதி, நாவலர் சந்தி, யாழ்ப்பாணம்.
021 222 6113

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 04.06.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.